Registered as a News Paper

பக்கம் - 28

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

விலை: 16.00

நாதம் - 15 வெள்ளி - 21 23 - 29 யூலை 2004



# திருமுக அறிமுகம்

'கலை இலக்கிய முயற்சிகள் அனைத்தும் ஒரு புதிய சமூகத்தின் எழுச்சிமிக்க வாழ்க்கைக்கான போராட்டத்தின் ஒரு பகுதிதான்' என்பதில் தீவிர நம்பிக்கை கொண்ட மனிதநேயமும் சமதர்ம நோக்கும் கொண்ட டானியல் அன்ரனியின் இலக்கிய முயற்சிகள் அனைத்திலும் அந்த நம்பிக்கை இழையோடி நிற்பதை அவரையும் அவரது படைப்புக்களையும் உணர்ந்தறிந்தோர் உறுதி செய்து கொள்வர்.

எழுத்தாளனாக,விமர்சகனாக, பத்திரிகையாளனாக எல்லா வற்றிலும் மேலாக எழுத்துக்கும் வாழ்வுக்கும் முரண்பாடில்லாத கருத்தியல் நேர்மை கொண்ட நல்ல மனிதனாகவும் தன்வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னை நிரூபித்துக் காட்டிய இலக்கிய நெஞ்சம் அவருக்கானது.

தான் பிறந்த நாவாந்துறைப் பகுதியின் ஜீவனுள்ள ஒவ்வொரு அம்சத்திற்கும் தன் படைப்புக்கள் மூலம் இலக்கிய அந்தஸ்துக் கொடுத்த டானியல் அன்ரனியின் ஆளுமையானது முழுமையாக வெளிப்படுமுன்னர் அவர் மறைந்தது துரதிஷ்டமான நிகழ்வேயாயினும் ஈழத் தமிழ் இலக்கிய



வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய குறுகிய காலச் சேவையின் கனம் அதிகமானதே....

'சாற்றும் கவி கலைகள் யாவும் சமுதாய ஏற்றத்தை முன்னெடுக்கும் ஏவுகணைகளாகட்டும்' என உரத்துப் பிரகடனம் செய்து கொண்டு ஈழத்தமிழ் இலக்கிய உலகில் ஒரு புதிய எழுச்சிக்கு நுழைவாயில் அமைத்த செம்மல்கள் இலக்கிய வட்டத்தின் மூல வேர்கள் நால்வரில்அன்ரனி முக்கியமானவர். அந்த இலக்கிய வட்டத்தின் இயக்கம் குறுகிய காலத்தையே கொண்டதாக இருந்த போது அது ஏற்படுத்திய தாக்கம் குறிப்பிடத்

## டானியல் அன்ரனி

தக்க ஒன்றேயாகும்.

அந்த இலக்கிய வட்ட வெளியீடான 'அணு' சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கிய அன்ரனி கனதியான மூன்று இதழ்களை நெருக்கடிகளுக்கு மத்தியில் வெளிவர கடும் முயற்சி எடுத்தவராவார்.

'வலை' அவரின் சிறுகதைகளை உள்ளடக்கியதாக வெளிவந்த சிறுகதைத் தொகுதி.

அவரின் படைப்பாற்றல் திறனுக்கு அது சான்றாகும். அது மட்டுமல்ல அவர் வரித்துக் கொண்ட கொள்கைகளில் அவருக்கிருந்த இலட்சியப்பிடிப்பையும் அந்தத் தொகுதியில் உள்ள சிறுகதைகள் வெளிப் படுத்தி நிற்பதை அவற்றைப் படிப்போர் புரிந்து கொள்வர்.

தனது கருத்துக்களுக்கு எதிரானோரை பகை முரண்பாட்டுடன் பார்க்கும் பலவீனம் அவரிடம் இருந்தது கிடையாது.

கருத்தியல் ரீதியிலான விவாதங்களில் தனது நிலைப்பாட்டை ஆணித்தரமாகக் கூற அவர் பின்நின்றதுமில்லை.

அந்த அளவுக்கு ஒரு தெளிவான இறுக்கமான அரசியற் கோட்பாட்டை வரித்துக் கொண்டவர் அவர்.

முற்போக்குவாதி.

அதற்காக யதார்த்தத்திற்கு முரணான வரட்டுச் சித்தாந்தங்களை கட்டிப்பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கும் குணம் அவரிடம் இருந்ததில்லை. இடதுசாரிக் கொள்கைகளில் இறுக்கமான பற்றுக் கொண்டவர். ஆனால் இங்குள்ள இடது சாரித் தலைவர்களின்- அமைப் புக்களின் சந்தர்ப்பவாதப் போக்குகளுடன் அவர் சமரசம் செய்து கொண்டது கிடையாது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடர்பாக அவர் தெளிவான கருத்தைக்கொண்டவராகவே இருந்தார்.

அவர் நடத்திய சஞ்சிகையான 'சமர்' கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ள நேர்ந்த போதும் அவர் தன் கொள்கைப் பற்றில் இருந்து திரும்பியதே இல்லை.

அவர் ஒரு இலக்கிய இலட்சியவாதி என்பதற்கும் அப்பால் அவரது சமூக நோக்கு பரந்துபட்ட சேவைத்தளத்தைக் கொண்டதாகும்.

நாவாந்துறையில் அவரது சமூகப்பணியும், கலை இலக்கியப் பணியும் அவருக்கு மட்டுமல்லாது அவரது குடும்பத்தினருக்கும் கூட ஒரு பொதுவான செயற்திறன் மிக்க பண்பாகவே அமைந்திருந்தது.

பாடசாலை நாட்களிலும் அதற்குப் பின்னரும் அவரது விளையாட்டுத் திறன் உதைப்பந்தாட்டப் போட்டிகளில் பெருமைகளைத் தேடிக் கொடுத்தது.

அவரது நண்பரும், மறைந்த கலை இலக்கியவாதியும் படைப்பாளியுமான சசி-கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுவது போன்று 'டானியல் அன்ரனி ஒரு மனிதன்' என்ற விழிப்புடன். வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் உணர்வுடன் இலக்கியத்தை நேசித்தவர், இலக்கிய உறவுகளைப் பேணியவர்.

இந்த வகையில் அவர் பதித்துச் சென்ற சுவடுகள் இலகுவில் மறைந்து போகாதவைகளே...

அவரின் கலை இலக்கியச் சுவடுகளை அவரது சகோதரர்கள் தொடர்வது நிறைவு தரும் விடயமேயாகும்.

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா குறிப்பிடுவது போல் 'அடிமட்ட மக்களில் தானுமொருவனாக அவர்களது பிரச்சினையே தனது பிரச்சினையாக வாழ்ந்து சென்ற இலக்கிய நெஞ்சத்திற்குரியவர் டானியல் அன்ரனி' என்பது நிஜமே.

# காரசாரம்

## இதை எப்படிச் சொல்வது...?

சீச்சீச்சீ... வாழ்க்கையே வெறுத்துப்போச்சப்பா... பின்ன என்ன, அந்த நாளயில நான் தோட்டங்கொத்த என்னோட கூட வந்து புல்லுப்புடுங்கவும் பசளை வைக்கவும் எண்டு கஷ்டப்பட்ட மனிசிக்கு இப்பதான் தோட்ட வேலை செய்தனெண்டு சொல்ல வெக்கமாக்கிடக்கு. வீடுகட்டி இப்ப ஆறுவரியந்தான் பதினைஞ்சு லட்சத்துக்கு வாங்கின காணி, பக்கத்து வீட்ட வாங்கினவன் அதைப் பெருப்பிச்சுக் கட்டுறானாம் எண்டு தானும் வீட்டை இடிச்சுப் பெரிசாக்கட்டுது. என்ன..? வேலையில்லாத குணம். காலம எழும்பினால் குளிச்சு முழுகி கோவிலுக்குப் போறது. அவை கட்டின வீடு எப்பிடி எண்டு பாக்கிறது. வெளிநாடுகள்ள நிக்கிற பிள்ளையளின் போட்டோக்கள் அல்பங்களை வாறவை போறவைக்குக் காட்டுறது, உள்ள நாட்டுப்புதினங்கள் பாக்கிறது ரீ.வி.யில, உந்த ரெலி போனக் கழுத்திடுக்குக்க வச்சுக் கொண்டே விசரர் பைத்தியகாறர் மாதிரிக் கதைச்சுக் கொண்டு திரியிறது. பாருங்கோவன் எங்கட மனித இனத்தின்ர பரிணாம வளர்ச்சியில பிற்காலத்தில கழுத் துச்சரிஞ்ச சனங்கள் தான் இருக்கப் போகுது. வீட்டு வேலை தான் செய்யுதே மனிசி அதுவும் கஷ்டம் தோய்க்க மிசின், சமைக்க மிசின், அரைக்க மிசின் திருவமிசின், கூட்ட மிசின் எல்லாம் வாங்கிப் போட்டிட்டா அதுகளுக்க சமானுகளப் போட்டு சுவிச்சத்தட் டவும் ஆள் போட்டிட்டா என்னத்த சொல்லுறியள்.

மாயா

## எதுக்கெடுத்தாலும் ஒரு நியாயம் இதற்கு மட்டும் என்னவாம்?

"என்ன சின்னப் பிள்ளையொண்ட வேலைக்கு சேர்த்திருக்கிறியள் போல... நாங்கள் ஒருக்கா அதைப் பற்றிக்கேக்க வந்தநாங்கள்.."

ஆர் எங்கட மலரக் கேக்கிறியளே அவன் தேப்பன்காரன் சாப்பாட்டுக்கே வழியில்லையெண்டு கெஞ்சினான். பின்ன... இஞ்ச விடன்ராப்பா நிண்டு சாப்பிடட்டும் எண்டு மறிச்சு விட்டன். அவளோ... அவள் பொல்லாத குழப்படிக் கள்ளி, உங்களட்ட ஏதும் இல்லாதது பொல்லாததச் சொல்லியிருக்கும். என்ன சொல்லுங்கோ, ஆரெண்டா என்ன? தின்னுற சோத்துக்கு வேலை செய்யாம முடியுமே. அ.... பாருங்கோ, பாருங்கோ உந்தவாளியில தண்ணி கொண்டரப் படுகிற பாட்டை. என்ன இந்த மேலுக்கு வெக்கையாக்கிடக்கு குளிப்பமெண்டு நாலுவாளி தண்ணி யள்ளித்தாடி எண்டன்... ங. உங்கட பிள்ளையெண்டாச் சொல்ல மாட்டடியளே ம்.. சொல்ல மறந்திட்டன் அண்டைக்கு உப்பிடித்தான் குடத்தைக்கொண்டேப் போட்டுடைச்சிட்டாள். பிள்ளையெண்டா கொஞ்சம் பக்குவம் வரவேண்டாமே. எனக்கும் கோவந்தான். லேசா.. லேசாத் தான் நாலைஞ்சு அடி போட்டன். அம்மா!! அவள் கத்திவிட்ட கத்து! உதைத்தான் உங்களட்ட ஆரோ சொல்லியிருக்கினம் போல பாருங்கோ நான் போட்டிருக்கிற இந்தச் சோட்டிய வெளிநாட்டால வந்த துணி கொழும்பால அண்ணை அனுப்பினது. நெடுகப் போடப்போட முதுகால கரைஞ்சது போக, கீழால வெட்டிப்பாவாடை தச்சு அவளுக்குத் தானே குடுக்கிறன். நீங்கள் சொல்லுறியள். ஒழுங்கா உலக்கை போடத் தெரியாது ஒம்பது பத்து வயதர்குது. அண்டைக்கு மிளகாய்த்தூள் இடிக்கவெண்டு போய், ரெண்டு மணித்தியாலஞ் செண்டுது.. பின்ன சாப்பாடு குறைவே, காத்தால மிஞ்சின பழஞ்சோறு சட்டியில பிரட்டி ஒரு திரளை குடுத்தா, மத்தியானம் ரத்தச் சொட்டுப் போல தேத்தண்ணி, பொழுதுபட இவரும் பிள்ளையளும் சாப்பிட்டு முடிய, நானும் அங்கின சாப்பிட்டது போக மிஞ்சினா அவளுக்குத்தானே. வாசலுக்க கிடக்கிற ஓலைப்பாயைப் பாருங்கோ. அ.... ஜிம்மி! ஜிம்மி.. எழும்பு அது மலற்ற பாயெல்லே... அண்டைக்கு எங்கட ஜிம்மிக்கு சுடச் சுடப் பாலை வச்சிட்டாளெண்ணுறன் சூடெண்டா என்னண்டு விளங்கத் தானே வேணுமெண்டு தட்டேப்பைய அடுப்பில காயவைச்சு லேசா..லேசாத் தான் துடையில ஒரு சூடு போட்டன். எடி அவள் ஊரெடுபடக் கத்தினதில சனம் வந்திட்டுது எண்ணுறன். எல்லாம் தாய் தேப்பன்ர வளப்பு. என்னத்தை சொல்லுற, தேப்பன் கயிற்றத்தில ஐந்நூறு ரூபா வாங்கிப் போட்டான். காசு கழியவிட்டு பிள்ளையக் கூட்டிக்கொண்டு போகட்டன். பின்னச் சின்னப்பிள்ளையள வேலைக்கு வச்சிருக்கக் கூடாதெண்டு இப்ப சட்டமிருக்கெல்லே. எனக்குத் தெரியாதே. நானென்ன படியாத மோடே... என்னடி ஏதோ எரிஞ்சு மணக்குது சமையல் முடிஞ்சுதே...ங.. அடிக்கடி வாங்கிறத வாங்காட்டி சரிவராள் பொறுங்கோ வாறன்.

இந்த இரண்டு சம்பவங்களும் உண்மை- உண்மையைத்தவிர வேறில்லை. வவுனியாவில் முன்னதும் யாழ்ப்பாணத்தில் பின்னதும் நடந்தது. ஆடம்பரத்தில் மோகங் கொண்டலையும் ஒரு சாரார் நாட்டை முன்னேற்றும் பாதையில் எவ்வளவு இடையூறாக உள்ளார்கள். வெளிநாடுகளில் பத்து மணித்தியாலங்கள் முதல் பதின்னான்கு மணித்தியாலம் வரை கஷ்டப்பட்டு உழைக்கும் பிள்ளைகள் பெற்றாருக்கும் சகோதரர்களுக்குமாக அனுப்பும் பணத்தில் கஷ்டப்படும் அந்தப்பிள்ளையைப்பற்றிச் சற்றும் வருந்தாது, ஆடம்பரம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு வாழும் இவர்களைத் திருத்துவது யார்? வெள்ளைக்காரனுக்கும் அவனது நாட்டுக்கும் உழைத்து நசிந்து போகும் கூட்டம் அங்கே வெள்ளைக்காரனைப்போல வாழ்ந்து பார்த்து வீணாகிப்போகும் கூட்டம் இங்கே. இவர்களுக்கிடையே நசுங்கிப் போய்க்கிடக்கும் தேசிய உணர்வை- தட்டியெழுப்ப வேண்டியது யாருடைய பொறுப்பு.

சிறுவர்கள் உரிமைபற்றி எவ்வளவு பேசினாலும் சிலர் திருந்துவதில்லை. ஒரே வயதில் ஒத்தவயதில் தமது பிள்ளைகளைச் செல்லமாக வளர்க்கும் இவர்கள் அடுத்தவர் குழந்தையை வேலை வாங்கும் பரிதாபம் இன்னும் நடக்கிறது. அதிலும் பெண் குழந்தைகள் இன்றும் வீடுகளில், பஸ்தரிப்பிடங்களில் கோவில்களில் பிச்சையெடுப்பது கூட சகசமாக நடக்கிறது. அதே சமயம் ஆண்பிள்ளைகள் திருட்டு, பீடி, கள் போன்ற தீய பழக்கங்களுக்கு ஆளாகிவருகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம். சிறுவர் நலனை பற்றிப் பேசும் உலகத்துக்கு இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடப்பது எதுவுமே தெரியாதா.?

## வாசகர் கவனத்துக்கு

அன்பான வாசகர்களே உங்கள் வெள்ளிநாதத்தின் பக்கங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதனால் எமக்கு ஏற்பட்ட உற்பத்திச் செலவை கவனத்தில் கொண்டு வெள்ளிநாதம் ஒரு ரூபாவினால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இனி வெள்ளிநாதம் 16ரூபா என்பதை அறியத்தருகிறோம். தொடர்ந்தும் எமது வாசகர்கள் தங்கள் ஆதரவை வழங்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். (ஆ-ர்)

# கருணாவின் அரசியல்

> கிழக்கில் பிரதேசவாதம் கதைத்த எவருமே இறுதியாகச் சென்றடைந்த இடம் கொழும்புதான். அதாவது அரசாங்கத்திடம்தான். கருணாவும் இப்பொழுது அங்கேபோய்ச் சேர்ந்துவிட்டார். ஆனால் ஒரு யுத்தகாலத்தில் கிழக்கில் அரசபடைகள் குறிப்பாக எஸ்.ரி.எவ். தமிழர்களை வேட்டையாடவரும்போது கருணாவால் தனது மக்களை காப்பாற்றவோ பாதுகாக்கவோ முடியாதிருக்கும்.
>
> அதாவது கருணா தனது பலம் என்று கருதுவது எதுவோ அதுதான் - அரசாங்கத்துடன் நிற்பது - தமிழர்களின் தேசிய அரசியலில் அவருடைய பிரதான பலவீனமாயிருக்கிறது.

யுத்தநிறுத்தத்தின் குழந்தையே கருணாவின் பிரச்சினை. அது இப்பொழுது யுத்தநிறுத்தத்தையே முறித்துவிடும் ஒரு கட்டத்துக்கு நெருக்கமாக வந்துவிட்டது.

யுத்தகாலங்களில் இனமான உணர்வுகளே மேலோங்கும். பிரதேச அபிமானங்கள் பின்னால் போய்விடும். அல்லது இரண்டாம் பட்சமாகிவிடும். ஒரு பொதுப்பகைவனுக்கு எதிராக எவ்வளவுக் கெவ்வளவு ஐக்கியப்படமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு ஐக்கியப்பட வேண்டிய ஒருதேவை எப்பொழுதும் யுத்தகாலங்களில் இருக்கும். யுத்தகாலமொன்றில் கருணாவின் விவகாரம் போன்ற பிரச்சினைகளுக்கு இடமேயிருந்திருக்காது. எனவே கருணாவின் பிரச்சினை ஒரு யுத்த நிறுத்தத்தின் குழந்தையே. ஆனால் அது இப்பொழுது யுத்த நிறுத்தத்தை முறிக்கும் ஒரு நிலைக்குக் கிட்டவாக வந்துவிட்டதுபோலத் தோன்றுகிறது.

இதில் புலிகள், கருணாவை எந்தளவுக்கு ஒருபொருட்டாக எடுக்கிறார்கள் என்பதைவிடவும் முக்கியமானது - கருணாவுக்கு அர சாங்கம் புகலிடம்கொடுப்பதாக அவர்கள் நம்புவதுதான் ஏனெனில் யுத்த நிறுத்தத்தில் ஈடுபடும் ஒரு தரப்பாகிய அரசாங்கம் கருணாவுக்குப் புகலிடம் தருவதன்மூலம் வடக்குக்கிழக்கைப் பிரிக்கநினைப்பதென்பது சமாதானத்துக்கான அரசாங்கத்தின் அடிப்படை விசுவாசத்தையே சந்தேகிக்க வைப்பது என்பதால் கருணாவுக்கு புகலிடம் தரும் ஒரு அரசாங்கத்தை நம்பிக் கதைக்கவோ சமாதானம் செய்யவோ முடியாது என்று புலிகள் நம்புவது தெரிகிறது.

அரசாங்கமோவெனில், கருணா சனநாயக நீரோட்டத்தில் இணையப் போகிறார் என்று கூறி அதன்மூலம் கருணாவுக்கும் தனது அமைச்சர் தேவானந்தாவுக்கும் இடையிலான உறவை நியாயப்படுத்த முயற்சிக்கிறது.

கருணா தன்னுடன் இருப்பது தனக்குப் பலம் என்று அரசாங்கம் நம்புகிறதா? ஆயின் அவர்கள் கருணாவை இரண்டுவிதமாகப் பயன்படுத்தக்கூடும்.

முதலாவதாக, அரசியல் தளத்தில் அவரை கிழக்கின் தேவானந்தாவாக்குவது. அதாவது, வடக்குக் கிழக்கு இணைப்பை மேலும் பலவீனப்படுத்த முயற்சிப்பது.

இரண்டாவதாக, யுத்தத்தில் கருணாவை வைத்து எதையாவது செய்யலாமா என்பது. அதாவது, கருணா குழுவை ராசிக்குழுமாதிரி ஒரு துணைப்படைக்குழுவாக வைத்திருப்பது.

இந்த இரண்டு சாத்தியக் கூறுகளுமே கருணாவை தமிழ்த் தேசிய அரசியல் அரங்கில் பெருமளவுக்குத் தனிமைப்படுத்தி அவரது அரசியலை வரையறைகளுக்குட்பட்டதாக ஆக்கக்கூடியவை. இதைச் சற்று விரிவாகப்பார்ப்போம்.

முதலாவதாக, கருணாவை கிழக்கின் தேவானந்தாவாக்குவது. தேவானந்தாவை விடவும் கருணாவிடம் மேலதிகமாக இருப்பவை இரண்டு. ஒன்று பிரதேசவாதம். மற்றது, அவர் புலிகளின் முன்னாள் பிரதான தளபதிகளில் ஒருவராக இருந்த அனுபவம்.

கிழக்கின் அரசியலில் கருணா ஒரு தேவானந்தாவாக எழுச்சி பெறலாமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கப்போவது யுத்தநிறுத்தமே. ஏனெனில் கருணாவின் பிரச்சினை யுத்தநிறுத்தத்தின் குழந்தை. அந்தக் குழந்தை தாயைத் தின்னியாக வளரும்போது அதாவது, யுத்தநிறுத்தம் முறியும்போது கருணாவின் அரசியல் மிகவும் வரையறைக்குட்பட்டதாக மாறிவிடும். எப்படியெனில் - யுத்தம் என்று வந்துவிட்டால் அரச துருப்புக்கள் பிரதேசம் பார்த்து யுத்தம் செய்வதில்லை. யுத்தம் அதற்கேயான குரூர விதிகளுடன் முன்னேறும்போது அழிவுகளும் கொலையும், வல்லுறவுகளும் நிகழும்போது தம்மை ஆக்கினைப் படுத்தும் எதிரியுடன் நிற்கும் ஒரு நபர் தமது அரசியலுக்குத் தலைமை தாங்குவதை கிழக்கின் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதாவது யுத்தகாலங்களில் கருணாவின் அரசியலுக்கு கிழக்கின் மதிப்பு இருக்கப்போவதில்லை.

யுத்தகாலங்களில் தமிழர் - சிங்களவர்கள், தமிழர் - முஸ்லிம்கள் என்ற அடையாளங்கள் தான் மேலெழும். பிரதேச அடையாளங்கள் ஒரு யுத்தச்சூழலில் மங்கிப் பின் சென்றுவிடும்.

கருணா நம்புகிறார் பிரதேச வாதமும் அரசாங்கத்துடன் நிற்பதும் தனது பலங்கள் என்று. இவை இரண்டும் ஒன்று மற்றதின் விளைவாயிருப்பவை. கிழக்கில் பிரதேசவாதம் கதைத்த எவருமே இறுதியாகச் சென்றடைந்த இடம் கொழும்புதான். அதாவது அரசாங்கத்திடம்தான். கருணாவும் இப்பொழுது அங்கே போய்ச்சேர்ந்துவிட்டார். ஆனால் ஒரு யுத்தகாலத்தில் கிழக்கில் அரச படைகள் குறிப்பாக எஸ்.ரி.எவ். தமிழர்களை வேட்டையாட வரும் போது கருணாவால் மக்களை காப்பாற்றவோ பாதுகாக்கவோ முடியாதிருக்கும்.

அதாவது, கருணாதனது பலம் என்று கருதுவது எதுவோ அதுதான் - அரசாங்கத்துடன் நிற்பது - தமிழர்களின் தேசிய அரசியலில் அவருடைய பிரதான பலவீனமாயிருக்கிறது.

**— நிலாந்தன் —**

இது யுத்தகாலங்களில் மிகக்குரூரமாக வெளித்தெரிய வரும்போது அதுவும் கிழக்கின் மிகச்சிக்கலான பல்லினச்சூழலில் கருணாவின் அரசியல் வரையறைக் குட்பட்டதாக மாறிவிடும்.

எனவே ஒரு யுத்தம் மூழ்வது ஒப்பீட்டளவில் கருணாவுக் குப் பாதகமானது. ஆனால் இப் பொழுது கருணாவுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான உறவே யுத்தமொன்றுக்குப்போதுமான காரணமாகமாறிவிடும்போலிருக்கிறது. இது கருணாவின் அரசியலில் காணப்படும் ஒரு வேர்நிலைமுரண்.

இரண்டாவது, கருணாகுழுவை ஒரு துணைப்படைக் குழுவாக அதாவது ராசிக்குழுபோலப் பயன்படுத்துவது. கருணா புலிகளின் முன்னாள் முக்கிய தளபதிகளில் ஒருவர் என்பதை வைத்துக்கொண்டு அவரை வைத்து யுத்தகளத்தில் நிறையச் சாதிக்கலாம் என்று அரசபடைத்துறை நம்பக்கூடும் ஆனால் கருணாவின் பிரச்சினை தொடங்கியதிலிருந்து இன்றுவரை நடப்பவற்றைத் தொகுத்துப்பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். அதாவது கருணா ஒரு சண்டைசெய்ய வல்ல தளபதியாக இருக்கலாம். ஆனால் அவரொரு போரியல் நிபுணர் அல்ல.

அவர் தனது பிரச்சினையைத் தொடங்கி சுமார் 40நாட்களின் பின்பே புலிகள் அவருக்கு எதிராகப் படை நடவடிக்கை ஒன்றைத் தொடங்கினார்கள். இந்த 40 நாட்களும் கிழக்கில் யுத்தத்தை நடாத்தியது பெருமளவுக்கு பிஸ்ரல்குழுவே. இந்த 40 நாட்களிலும் கருணா தனக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய படை நடவடிக்கைகளைக் குறித்து எத்தகைய முன் அனுமானமும் இன்றி அல்லது குறைந்தபட்சம் ஊகங்களுமின்றிக் காணப்பட்டார் என்பதைத்தான் அவரது பிந்திய நடவடிக்கைகள் நிரூபித்தன.

அவர் 20 ஆண்டுகளாக உறுப்பினராகவும் தளபதியாகவும் இருந்த இயக்கமும் அதன் தலைமையும் எப்படியெப்படி அவரைச் சுற்றி வளைக்கமுடியும் என்பது குறித்து சிந்தித்திருக்க வேண்டிய காலங்களையெல்லாம் அவர் தனது வல்லமைக்கு மீறிய பிரகடனங்களை வெளியிடுவதில்அல்லது தனது முதுகைத் தானே தட்டிக்கொள்வதில்தான் விரயம் செய்தார்.

அவர் சண்டையை எதிர்கொண்டவிதமும் பின்னர் தப்பியோடியவிதமும் அவருடைய படைத்துறை நிபுணத்துவத்தையோ மேதாவிலாசத்தையோ வெளிக் காட்டத் தவறிவிட்டன. உண்மையில் கருணாவின் பிரச்சினை முதலில் புலிகளின் பலத்திற்கு சோதனையாகத் தொடங்கினாலும் 40 நாட்களின் பின் அதுவே புலிகளின் பலத்தை மீள ஒருதடவை திட்ட வட்டமாக நிரூபிப்பதாகவும் மாறியது. இதன்படி கூறின் கருணா சமாதான காலத்தில் புலிகளின் பலத்தை நிரூபித்தார் என்றே சொல்லவேண்டும்.

தவிர அண்மைக்காலங்களில் கிழக்கில் கருணாகுழுவினரால் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆயுதபாணிகள் அல்ல என்பதை இங்கே சுட்டிக் காட்டவேண்டும் நிராயுதபாணிகள் அல்லது உடல்வலுக் குறைந்தவர்கள்மீதான கரந்துறைத் தாக்குதல்களே பெரும்பாலானவை.

எனவே, தனது கிளர்ச்சியைத் தொடங்கியதிலிருந்துகருணா இதுவரை தனது குழுவின் போர்த்திறணையோ அல்லது தனது தனிப்பட்ட இராணுவ மேதாவிலாசத்தையோ வியக்கத்தக்கவகையில் நிரூபித்திருக்கவில்லை. இதுவரையிலும் அவர்களால் முடிந்ததெல்லாம் நாட்டை யுத்தத்துக்குக்கிட்டவாகக் கொண்டு வந்ததுதான்.

இந்நிலையில் இத்தகைய ஒரு நபரை நம்பி அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை முறிக்கப்போகிறதா என்பதே இப்போதுள்ள கேள்வி.

கருணாவின் அரசியல் எனப்படுவது எல்லாவிதங்களிலும் நாட்டை யுத்தத்தைநோக்கியே இட்டுச்செல்வதாகியுள்ளது. கருணாவை அவர்கள் அரசியல் ரீதியாகப்பாவித்தாலும் அது வடக்குக் கிழக்கு இணைப்பை பலவீனப்படுத்தும் ஒரு செயலாகவே புலிகளால் பார்க்கப்படும். இது சமாதானம் செய்வதை கடினமாக்கும். இரண்டாவதாக, கருணாவை படைத்துறை ரீதியில் பாவிப்பது என்றாலும் அதற்கு யுத்தத்தைத் தொடங்கியாக வேண்டும்.

எனவே எப்படிப்பார்த்தாலும் கருணாவின் அரசியல் யுத்தத்துக் குக் கிட்டவாகவே வருகிறது.

ஒரு இரத்தக்களரியைத் தவிர்ப்பதற்காகவே தான் அலிசாகிர் மௌலானாவின் உதவியுடன் தப்பிச் சென்றதாகக் கருணா கூறியிருந்தார். ஆனால், அவர் தப்பிச் சென்ற போது கிழக்கில் பிரகடனம் செய்யப் படாத ஒரு நிழல்யுத்தத்துக்கான களத்தையும் திறந்துவிட்டே சென்றிருக்கிறார்.

கிழக்கில் இப்பொழுது புத்திஜீவிகளும் பத்திரிகையாளர்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.அங்கே நகர்ப்புறங்களில் யாரும் யாரையும் நம்பிக்கதைப்ப தில்லையாம்.சொந்தச் சகோதரர்களே ஒருவர் மற்றவரை சந்தேகத்துடன் பார்க்கும் ஒரு நிலை. ஒரு பத்திரிகையாளர் சொன்னார்...மோட்டார் சைக்கிள் ஓடும்போது யாராவது பின்தொடர்ந்து வருகிறார்கள் என்று கண்ணாடியில் தெரிந்தால் காது கூசுகிறது. உயிரும் கூசுகிறது என்று. இதைவிட யுத்தம் பறவாயில்லை ஏனெனில் அது அதிகம் வெளிப்படையானது என்று ஒரு கூர்மையான அவதானி சொன்னார்.

சமாதானத்தைவிடவும் யுத்தம் வெளிப்படையானது, அல்லது பறவாயில்லை என்று கூறும் ஒரு நிலையை கிழக்கில் தோற்று வித்ததன்மூலம் அந்தமக்களுக்கு கருணா விட்டுச்செல்லப்போவது எதை?

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

## முற்பகல் செய்தது பிற்பகல் விளைகிறது



பதவிப் பித்து யாரைத்தான் விட்டுது...?

தர்மராஜ்ஜியம் அமைக்க வந்த முற்றும் துறந்த பிக்குகளைத்தான் விட்டுதா? இல்லவே இல்லை! நியாயமோ தர்மமோ அற்ற இலங்கையின் சனநாயகவிரோத அரசபயங்கரவாதிகளின் ஆட்சியில் அதன் பேரினவாதக் கொள்கைகளுக்கு ஆதரவாக 'வால்பிடிக்க'ப் போன ஜாதிக ஹெலஉறுமய பிக்குகளுக்கு அரசியல் பதவிமோகம் நன்றாகத்தான் பிடித்துக்கொண்டது.

தேர்தலில் வென்று நாடாளுமன்றம் சென்ற முதல் அமர்வின் போதே அதுவும் சபாநாயகர் பதவிக்குரியவரை தேர்வுசெய்யும் நாளன்றே நாடாளுமன்றத்தில் ஹெலஉறுமயவின் அரசியல் பிக்குகளுக்கு ஆட்சியாளர்கள் கொடுத்த மரியாதை உலகறிந்த அவமானமாகும்.

தன்மானமோ, கௌரவமோ உள்ள தர்மராஜ்ஜியத்தில் நம்பிக்கைகொண்ட பிக்குகள் என்றால் அன்றைக்கே தங்களை அவமதித்த அரசாங்கத்திலிருந்து வெளியேறி, பௌத்தசிங்கள அரசென்று தன்னை பிரகடனம் செய்யமுனையும் அரசு பௌத்த துறவிகளான தங்களுக்கு எத்தகைய மரியாதையை தேசத்தின் நாடாளுமன்றத்தில் வைத்து வழங்கியுள்ளது என்பதை தங்களின் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

அரசியலுள் இறங்கிய அன்றே அவர்கள் மான அவமானங்களை சமநிலையில்பார்க்கும் மூன்றாந்தர அரசியல்வாதிகளுக்குரிய பக்குவ நிலையை அடைந்துவிட்டார்கள்.

இப்போது அரச பீடத்தைவிட்டால் மதபீடங்களும் அவர்களைத் தூக்கி எறிந்துவிடும் அவலமும் நேரலாம்...

எனவே இப்போதுள்ள அரசியல் கதிரையை கைவிடுதல் ஆகாது என முடிவெடுத்த அவர்கள் அதனைப் பறித்து தமது இருக்கைகளாக மாற்றமுயன்ற அந்த பிரசித்திபெற்ற பேரினவாதப் பிரமுகரான திலக்கருணாரத்னவின் திட்டத்திற்கு சாதகமாக நடக்க மறுத்துவிட்டார்கள்.

இப்போது சிகல உறுமயவை ஹெலஉறுமயவாக்கி பிக்குகளை கைப்பொம்மைகளாக்கி அரசியல் இலக்குகளை அடையக் காத்திருந்த திலக்கருணாரத்ன அன்கோவிற்கு 'பெப்பே' காட்டிவிட்டார்கள்.

"வெல்டன்" பிக்குமாரே... வெல்டன்!

முன்னர் 'சிகலஉறுமய'ஆரம்பித்தபோது அதன் மூலவேராக இருந்த S.L.குணசேகராவை அவர் ஒரு கிறிஸ்தவ சிங்களவர் என்பதற்காக அக்கட்சியில் தலைமைப்பதவியில் இருந்து வெளியேற்ற நெருக்குதல் கொடுத்ததில் அவர் கட்சியை விட்டேவெளியேறினார். அதன் பின்புலத்தில் செயற்பட்டவர் திலக்கருணாரத்னதான். இப்போது அடுத்த கட்சி மாற்றம் நடந்துள்ளது.

திலக் மட்டுமல்ல... அவரது கூட்டாளிகள் பலரும் ஹெலஉறுமயவைவிட்டு வெளியேறியுள்ளனர்.

தங்களுக்குள்ளேயே சமதர்மம் பேணத்தெரியாத பதவிப்பதர்கள் தர்மராஜ்ஜியம் அமைக்க வெளிக்கிட்டுவிட்டார்கள்... வெட்கம்... வெட்கம்...!! திலக்கருணாரத்ன அவர்கள் அடுத்து என்ன செய்யப்போகிறார்?

ஹெலஉறுமயவுக்கு எதிராக ஒரு கட்சியை ஆரம்பிக்கலாம் அல்லது இன்னொருகட்சியில் இணையலாம்... எதுவானாலும் ஹெலஉறுமய அலுவலகத்தை தனது வீட்டிலிருந்து அகற்றுமாறு அவர் கட்டளை இட்டதை பௌத்த சிங்களப் பேரினவாத சமூகம் அவரை எப்படிப்பார்க்கும்?

## ஜே.வி.பி.யின் மிரட்டலால் பொம்மையாகும் சந்திரிகா



கடைசியாக ஜே.வி.பியின் அந்த உயர்தலைவர்(!?) சோமவன்ச அமரசிங்க தமது கட்சியின் நிலைப்பாட்டை - அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான நிலைப்பாட்டை உறுதிபடத்தெரிவித்துவிட்டார் போலுள்ளது.

'அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையிலான அரசு- விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை முயற்சிகள் எதற்கும் ஜே.வி.பி. அரசுடன் இணங்கிப்போகாது' என்ற அவரது அறிவிப்பு சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பு நகர்வுகளுக்கு ஜே.வி.பி.சாதகமாக இருக்கப்போவதில்லை என்ற கருத்து நிலையை உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில் அமைதிப்பேச்சுக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது என்பது தெளிவாகிவிட்டது.

ஜே.வி.பி.யின் இந்த நிலைப்பாட்டை புறமொதுக்கிவிட்டு தன்னிச்சையாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடர அரசு பலமான ஒன்றாக இல்லை. அதேசமயம் ஜே.வி.பி.யின் மிரட்டல்கள் அச்சுறுத்தல்களுக்கு ஏதோ ஒருவகையில் இணங்கிப்போகாது அரசாங்கத்தை தொடர்ந்து பதவியில் தக்க வைத்துக்கொள்ளவும் அரசால் முடியாது. அறுதிப் பெரும்பான்மை பலம் அற்ற அரசின் தற்போதைய ஆயுட்காலம் எவ்வளவு என்பதை தீர்மானிக்கும் சக்திகளாக விடுதலைப்புலிகளை எதிர்க்கும் டக்ளஸ் தேவானந்தாவும், சமாதான முயற்சிகளை ஆரம்பம் முதலே நிராகரித்துவரும் ஜே.வி.பி.யினரும் இருப்பது தான் இன்றைய ஐ.ம.சு.மு. அரசின் மிகவும் ஆபத்தான பலவீனமாகும்.


ஏற்கனவே, சுயமாக, எதனையும் முழுமையாக, தீர்மானமெடுக்கும் அதிகாரவலுவற்ற அரசாங்கத்திற்குள்ஒருமைப்பாடற்ற கொள்கைகளுடன் பதவிக்கதிரைகளை பற்றிப்பிடித்து அர்த்தமற்ற அதிகாரத்தை செய்யமுனையும் தேசியநலனைப் புறக்கணித்து, அரசியல் சுயநலத்தை பாதுகாத்து மேம்படுத்த முனையும் கட்சிகளின் முரண்போக்குகளால் சமாதான முயற்சிகள் நிரந்தரமாகத் தடைப்பட்டுப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், மீண்டும் ஓர் போர் அபாயம் ஏற்படும் நிலையும் உருவாகத்தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் சர்வவல்லமை மிக்க சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரவலுவைப் பயன்படுத்தி நேரடியாகவே சமாதான முயற்சிகளில் தீர்மானமெடுக்கும் ஒரே சக்தியாக செயற்படமுடியும். ஆனால் அவர் அத்தகைய நியாயபூர்வமான செயலில் துணிச்சலுடன் இறங்கி அர்ப்பணிப்புடன் செயற்படும் தேசிய நலன் நோக்கிய சிந்தனைகொண்ட பாரம்பரியத்தையோ, அரசியற் கோட்பாடுகளையோ அறிவியல் அணுகுமுறைகளை கையாளும் திறனையோ உடையவரல்ல என்பதை கடந்தகால அவரின் [illegible]யல் நகர்வும் நிரூபித்தே வந்துள்ளன.

இப்போது நிறைவேற்று அதிகார சனாதிபதிக்கதிரையில் ஒரு பொம்மலாட்ட பொம்மையாகவே சந்திரிகா வீற்றிருக்க, தமது அதிகாரங்கள் மூலம் அவரை ஆட்டிப்படைக்கும் முழுமையான அதிகார வலுக்கொண்டவர்களாக ஜே.வி.பி.யினர் தம்மை வலுப்படுத்திக் கொண்டுள்ளமையே சோமவன்சவின் கருத்தும் உறுதி செய்வதாக உள்ளது.

ஜே.வி.பி.யினரை அவர்களின் புலம்பல் மிரட்டல்களை உதாசீனம் செய்து தேசிய பிரச்சினையில் ஒரு முடிவெடுக்கும் திராணியுள்ள தலைவராகத் தன்னை நிரூபிக்கும்வரை சமாதான முயற்சிகள் தொடுவானக் கனவுகளாகவே இருக்கும்.

## பழைய கைக்கூலியும் புதிய கைக்கூலியும்



சிந்தித்தால் சிரிப்புவரும் விடயம்... இல்லை இல்லை சிரிப்புக்கே இடமான விடயம் ஒன்று இப்போது உண்டென்றால் அது டக்ளஸ் - கருணா உறவுதான். கடைசியில் கருணா என்ற அந்த வெறும் மனிதன் தனது பலவீனமான நிலையை மட்டுமல்ல பகுத்தறிவற்ற நிலையையும் பகிரங்கப்படுத்திவிட்டார் என்பதில் ஐயமேயில்லை.

எதிரியின் காலில் சரணடைதலைவிடவும் துரோகியின் வால்பிடியாகஇயங்க இணங்கிப்போவதென்பது எவ்வளவு அவமானகரமானது என்பது கருணாவுக்குத் தெரியாமல் போனது பரிதாபம்...

"அப்பனே கருணா... உன் துரோகத்தனத்தை மெச்சினோம்.. வா என் திருவடிக்கு உன்னைப் பாதுகாக்கிறோம்... என என்வழியில் தமிழினத்தை காட்டிக்கொடுத்தும் உன் அரசியல் திரு(ட்டு)ப்பணியை தொடர்வாய்..." என டக்ளஸ் அபயகரம் உயர்த்தி கருணாவின் சரணாகதிக்கு ஆசீர்வாதம் வழங்கிவிட்டார் போலும்... அதன் வெளிப்பாடாகவே.. அந்த மகா சக்திமிக்க சந்திரிகாவிடம், தன் ஆதரவுப் பலம் என்ற வலுவான ஆயுதத்தைப் பயன்படுத்தி..." சக்தியே எம்மை நம்பி எங்கள் திருவடியில் சரணடைந்து உயிர் பாதுகாப்பை கோரும் 'கருணா' என்ற இந்தப் புதிய கைக்கூலிக்கு சகலவிதமான பாதுகாப்பையும் வழங்கவேண்டும் என வேண்டுகோள் மாதிரியான கட்டளையொன்றை விடுத்துள்ளார் டக்ளஸ்தேவானந்தா...

கருணாவின் ஊடகப்பேச்சாளராக இருந்த சச்சுமாஸ்டர் சிறையில் வைத்துக் கொல்லப்பட்டதையடுத்து கருணாவின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக டக்ளஸ் பெரும் அக்கறையோடு கவலைப்பட்டு சந்திரிகாவின் ரட்சிப்புக்கான வேண்டுதலை விடுத்துள்ளாராம்..

இதன்மூலம் கருணா யாரின் பாதுகாப்பில் உள்ளார் என்பதை அந்தத் தாடிக்கார தேவானந்த வெளிப்படுத்தியேவிட்டார்.

அதுசரி டக்ளஸ், கருணாவை யாரிடமிருந்து பாதுகாக்க விரும்புகிறாராம்? சச்சு மாஸ்டர் அரச பாதுகாப்பில் (சிறைக்குள் இருந்தபோதே) இருந்த போது அவரது (கருணாவினதும் கூட...) சகாவாலேயே சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதை கவனத்தில் கொள்வது இக்கட்டத்தில் அவசியமாகும்.

கருணாவுக்கும் ஆபத்து அவரது சகாக்களாலும், அவருக்கு அபயம் அளிப்பவர்களாலும் தற்போதைக்கு ஏற்படும் என டக்ளஸ் அஞ்சுகிறார் என்றால், சனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவு அவருக்குப் பாதுகாப்பை வழங்கவேண்டும் என்றா கோருகிறார்?

அப்படியானாலும் இதனை ஏன் அவர் பகிரங்கமாகக் கோரவேண்டும். இரகசியமாக சனாதிபதிக்குத் தெரியப்படுத்தியிருக்கலாமல்லவா? அதுதானே கருணா விவகாரத்தால் சிக்கலுக்குள்ளாகியிருக்கும் அரசுக்கும் சனாதிபதிக்கும் மேலும் நெருக்கடி ஏற்படாதிருக்க கையாளவேண்டிய அணுகுமுறை?

ஆனால் டக்ளஸின் நோக்கமே வேறு, தனது இந்த நடவடிக்கைகள் மூலம் கருணாவுக்கும் அரசுக்கும் சிக்கலை அதிகமாக்கி அதன்மூலம் தனது அரசியல் ஆதாயங்களைப் பெறுவதே இவரது மூலோபாயமாகும்.

கருணா தன்னையும் அரசையும் சரணடைந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தியுள்ள டக்ளஸ் இதன்மூலம் கருணா - அரசு - சனாதிபதி - சமாதான முயற்சிகள் அனைத்தினதும் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி - ஆபத்துக்குள்ளாக்கியுள்ளார்.

அதுதானே அவரது இலட்சியமும் இலக்கும்...!

## அமைச்சர் கதிர்காமருக்கு சிறிநிமோகனின் பாராட்டு



'கதிர்காமர் ஒரு கெட்ட மனிதர்'

கடைசியாக ஒரு வெளிநாட்டு ஆய்வாளர் அதுவும் அயலக ஆய்வாளர் கதிர்காமரின் சுயத்தை அறிந்து தனது கருத்தை வெளிப்படுத்தி விட்டார். புதுடில்லி நூல் நிலையம்- நேருதொல்பொருள் நிலையம்.- ஆகியவற்றின் ஆய்வாளரும், பிரபல பத்திரிகையாளருமான சிறிநிமோகன் என்பவரே இக் கருத்தை வெளியிட்டுள்ளவராவார்.

அதுவும் யாழ் பல்கலைக்கழக பொருளியற்துறையினர் நடாத்திய 'அரசு மாற்றமும் இலங்கை இனத்துவப் பிரச்சினையிலான இந்தியாவின் நிலைப்பாடும்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கிலேயே அவர் இதனை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

அவரின் இக் கண்டுபிடிப்புக்காக அவரைப் பாராட்டுகிறோம்.

அவர் இதனை இந்திய ஆளும்வர்க்கம் உணரும் வகையில் ஓங்கி அழுத்தமா எடுத்துரைக்க வேண்டும் (அவர்களுக்கு அது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக இருக்கும் என்பது வேறுவிடயம்) என்பதே எமது விருப்பம்.

அவரை ஒரு கெட்ட ராஜதந்திரி என்று அவர் சொல்லியிருந்தால் அதனைக் கருத்தில் கொள்ளாமல் விட்டு விடலாம். ராஜதந்திரிகள் பெரும்பாலும் கெட்ட மனிதர்களாகவே அவரது நாட்டுக்கு எதிரான நாடுகளால் உணர்ந்துகொள்ளப்படுவது சகஜம். ஆனால் கதிர்காமரை நேரடியாக சிறிநிமோகன் ஒரு கெட்டமனிதர் என்றே உறுதிசெய்துவிட்டார்.

இந்தியாவுக்கு சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து விளக்கமளிப்பதற்காக செல்வதாக கூறி விஜயத்தை மேற்கொண்ட அந்தக் கெட்ட மனிதர் இந்தியாவிடம் இராணுவ ரீதியிலான உதவிகளைக் கோரிய செய்தியை வெளியிட்ட சிறிநிமோகன், அதற்கு இந்தியா மறுத்துவிட்ட போதும் அவர் இலங்கை திரும்பியதும் இந்தியா இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்க உத்தரவாதம் அளித்ததாகப் பொய்ப் பிரசாரம் செய்துள்ளார் எனவும் கூறியுள்ளார்.

ஆக கதிர்காமர் ஒரு கெட்டமனிதர் மட்டுமல்ல, ஒரு பொய்யரும் கூட என்பது அவரின் கூற்றால் தெளிவாகியுள்ளது.

ஏற்கனவே கதிர்காமரை ஒரு இனத்துரோகியாக, குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாக அடையாளப்படுத்தி வைத்துள்ள தமிழ் மக்களுக்கு அவர் எத்தகைய பொய்யர் என்பதும் தெரிந்தே இருக்கும் நிலையில், ஒரு இந்தியர் அவரை கெட்டமனிதர் என உறுதி செய்துள்ளது புன்னகையை ஏற்படுத்தினாலும்... ஆச்சரியத்தையும் ஏற்படுத்தவே செய்துள்ளது.

சந்திரிகா அரசு ஆட்சிபீடம் ஏறியகாலத்திலிருந்து.இன்றுவரை கதிர்காமரின் ஒவ்வொரு இந்திய விஜயமும் இந்திய அரசியல் தலைமைகளையும் ஆதிகாரவர்க்கத்தையும் பேய்க்காட்டி பொய்யுரைத்து அதனை நம்பவைத்து, இந்திய அரசுக்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையே முரண்பாடுகளையும் பகைமையையும் ஏற்படுத்தும் கெட்ட நோக்கத்தை இலக்காகக் கொண்டதாகவே இருந்தன. எனினும் இந்திய அரசுக்கு அது புரியாமல் போனது துரதிஷ்டமேயாகும்.

சரி அவர் ஒரு கெட்ட மனிதர் என இந்தியர் ஒருவர் இனம்கண்டுகொண்டு பகிரங்கப்படுத்தி உள்ளது நல்ல சகுணமே அவருக்கு நன்றி.

செங்குட்டுவன்

# சிறிலங்காவின் புலனாய்வு அமைப்பும் தமிழர்தாயகம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தலும்



தமிழர் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுக்காலத்துக்கு முந்தைய காலத்தில் சிறிலங்காவில் புலனாய்வு அமைப்பு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததே இல்லை. அது பொலிஸ் நிர்வாகத்தின் கீழ் குற்றவியல் விசாரணைத் திணைக்களமாக (Criminal Investigation Department -CID) குற்றவியல் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் ஓர் அமைப்பாக மட்டுமே இயங்கியது.

சிறிலங்கா வரலாற்றில் தமிழர் போராட்டம் அரசியல் மாறுதல்களை ஏற்படுத்தத் தொடங்கிய காலத்தில் சிங்கள அரசின் பாதுகாப்பிற்கும், அதன் ஸ்திரத்தன்மைக்கும் ஏற்றதான ஒரு புலனாய்வு அமைப்பிற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்க அரசு ஆரம்பித்தது.

இதன் முதற்கட்டமாக சிங்கள அரசு தமிழர் தாயகப்பகுதிகளில் எழுச்சி பெற்ற விடுதலைப்போரை எழுச்சி பெறாமல் தடுக்கவும், ஒடுக்கவும் அதற்கு மேலாக அவ்விடுதலைப்போராட்டத்தை முற்றாகவே அழித்தொழிக்கவும் CID யினரை புலனாய்வு நடவடிக்கைக்காக தீவிரமாக ஈடுபடுத்தியது.

இப்புலனாய்வுப்பிரிவினரால் பன்முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் தமிழர் விடுதலைப்போரின் எழுச்சியை அடக்கி, ஒடுக்கமுடியாமல் போனது. மாறாக தமிழ் இளைஞர்களின் அளப்பெரிய அர்ப்பணிப்புக்களாலும் தேசியத்தலைவரின் மனோபலத்தாலும் மக்களின் தமிழுணர்வுமிக்க பங்களிப்புகளாலும் விடுதலைப்போர் ஓர் வலு க்க தமிழர் படையாக விடுதலைப்புலிகள் அமைப்பு எழுச்சி பெற்றது.

இவ்வெழுச்சியை அடுத்து 1985 களில் சிறிலங்கா அரசு தேசியப் பாதுகாப்பு சபையின் (National Security Council -NSC) கீழ் முதற் தேசிய புலனாய்வு அமைப்பாக தேசிய புலனாய்வுப்பணியகம் (National Inteligence Bureau - NIB) ஒன்றை நிறுவியது.

இப்பணியகம் தமிழரின் விடுதலைப்போராட்டம் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கான உளவு வலையமைப்பை விஸ்தரித்தது. அவ் உளவு வலையமைப்பால் கிடைக்கும் தகவல்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கைகளை அரச தலைமைப்பீடதிற்கு கொடுத்து வந்துள்ளது.

அதாவது தமிழ் இளைஞர்களின் மனங்களை திசைதிருப்புவதற்கான ஆலோசனைகள், இயக்கங்களுக்குள் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் உத்திகள், தமிழர் தேசியப்பலத்தை சிதைப்பதற்கான வழிமுறைகள், இந்திய மாநிலமான தமிழ்நாட்டுமக்களின் ஆதரவுத்தன்மை, தமிழ்ச் சமூகத்தின் மனநிலை, முஸ்லிம் சமூகத்தை தமிழ்த் தேசிய கட்டமைப்பிலிருந்து பிரித்தெடுக்கும் தந்திரோபாயங்கள் இவற்றுடன் இன்னும் பல பணிகளை முன்னெடுப்பதற்கான ஆய்வறிக்கைகளை NIB தயாரித்து அரசுக்கு வழங்கி வந்தது.

இப்பணிநிலைக்கடமைகளை செய்து வந்த போதிலும் NIB மறைமுகநடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. இவ்வகையான மறைமுக நடவடிக்கை பற்றிய ஓர் உண்மைச்சம்பவத்தை இங்கு நோக்குவோம்.

இந்திய மாநிலமான தமிழ்நாட்டிலுள்ள சென்னைப்பகுதியொன்றில் பாலசிங்கம் குடும்பம் வசித்து வந்த வீடு நேரக்கணிப்புக் குண்டுத்தாக்குலுக்குள்ளாகியது. இத்தாக்குதலின் சூத்திரதாரி NIB கந்தசாமி நாயுடு என சான்றுகள் பின்னர் வெளியாகியுள்ளன.

இப்படி அறியப்பட்ட கொலை முயற்சியையும், அறியப்படாத நாசவேலைகளையும் NIB மேற்கொண்டு வந்திருப்பினும் அப்பணியகத்தின் பிரதான பணி ஆய்வுகள் மேற்கொள்வதாகும். இவ்வாறான பணிகளை NIB முன்னெடுத்த போதிலும் புலனாய்வுப் பலம் பொருந்தியதாக அப்போது இருக்கவில்லை. அதற்கான செயற்திட்டங்கள் எதிலும் அரசு உச்ச கவனம் செலுத்தவும் இல்லை.

காலநகர்வில் சிறிலங்காவின் உள்ளக பாதுகாப்பிற்கு உகந்ததும், கூடிய பலம் வாய்ந்ததுமான புதிய புலனாய்வு கட்டமைப்புக்களை அரசு விஸ்த்தரித்தது. அக்கட்டமைப்புக்களை அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், இஸ்ரேல் போன்ற நாடுகளின் உள்ளகப் புலனாய்வு அமைப்புக்களை ஒத்த, பலம் பொருந்திய கட்டமைப்புக்களாக நிறுவ அரசு போதிய கவனம் செலுத்தியது. அதற்கான அனைத்து நிபுணத்துவ உதவிகளை அந்நாடுகளிடமிருந்து சிங்கள தேசம் பெற்றுக் கொண்டது.

இவ்வார்வமிக்க முன்னெடுப்புக்களால் சிறிலங்காவில் பல புலனாய்வுப்பிரிவுகள் உதயமாகின.

அவைகள் பொலிஸ் நிர்வாகத்தின் கீழ் கிளர்ச்சி முறியடிப்பு பிரிவு (COUNTER SUBVERSIVE UNIT - CSU) பயங்கரவாதப் புலன் விசாரணைப்பிரிவு (TERRORIST INVESTIGATION DIVISION - TID) விசேட புலனாய்வுப்பிரிவு (SPECIAL INVESTIGATION - UNITE SIU) விசேட பிரிவு (SPECIAL BRANCH-SB) பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் (POLICE NARCOTICS BUREAU - PNB) ஏமாற்று மோசடி விசாரணைப்பணியகம் (FRAUD INVESTIGATION BUREAU - FIB)குற்றக்கண்டுபிடிப்பு பணியகம் (CRIME DETECTIVE BUREAU - CDB)போன்றன இயங்கி வருகின்றன.

இவற்றில் CDB கொழும்பு நகரபாதுகாப்பை முதன்மைப்படுத்தி செயலாற்றி வந்தபோதும் அண்மையில் இப்பணியகம் கலைக்கப்பட்டுள்ளது. இதன் பணிப்பாளராக S.S.P கந்தசாமி இருந்துள்ளார். தற்போது நிலாப்தீன், ஜெயரட்ணம் ஆகியோரின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் கல்கிசை பொலிஸ் பிரிவு (MOUNTLAVINIA POLICE INTELLIGENCE GATHERING UNITE - MPIU) செயலாற்றி வருகின்றது.

இப்புலனாய்வு கட்டமைப்புக்களைவிட படைத்துறை தலைமயகத்தின் கீழ் இராணுவப் புலனாய்வுப் பிரிவு (DIRECTORETE OF MILITARY INTELLIGENCE - DMI), கடற்படை புலனாய்வுப் பிரிவு, விமாப்படை புலனாய்வுப் பிரிவு என்பனவும் உள்ளன.

1998 இன் பிற்பகுதியில் சிறிலங்கா அரசு வெளியிட்ட தகவலின்படி உள்ளகப்புலனாய்வுப் பணியகம் (DERECTORETE OF INTERNAL INTELLIGENCE - DII), வெளிநாட்டு புலனாய்வுப் பணியகம் (DIRECTORETE OF FOREIGN INTELLIGENCE - DFI) என இரு பெரும் அமைப்புக்களை அரசு நிறுவியுள்ளது.

**— நீலன் —**

இவற்றில் உள்ளகப் புலனாய்வுப்பணியக நிர்வாக கட்டமைப்புக்குள் உள்ளக பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுப் பிரிவுகளும் இணைத்துக்கொள்ளப் பட்டன. இப் பணியகத்தின் இயக்குநராக முன்னாள் பொலிஸ்மா அதிபர் சிறில் ஹேரத் உள்ளார். இதன் தலைமையகம் கொழும்பிலுள்ள கேம்பிறீச் பிளேசில் அமைந்துள்ளது.

வெளிநாட்டுப் புலனாய்வுப் பணியகத்தின் இயக்குனராக முன்னாள் DIG பிராங் டீசில்வா உள்ளார்.

இதன் அமைவிடம் கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்திற்கு எதிரே பஸ்தரிப்பிடத்துக்கு பின்புறமாக அமைந்துள்ளது. இதன் செயற்பாடுகளை உலகில் எல்லாப்பாகங்களிலும் உள்ள சிறிலங்கா தூதரக அதிகாரிகளே முன்னெடுத்துச் செல்பவர்களாக இருக்கின்றார்கள்.

பாகிஸ்தானிலுள்ள சிறிலங்கா தூதரக அதிகாரியாக முன்னால் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளில் ஒருவரான பிரிகேடியர் அப்துல் ரிஸ்வி சக்கியும், இலண்டனிலுள்ள சிறிலங்கா தூதரக அதிகாரியாக முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளில் ஒருவரான கேணல் பிதுருபொலவும், அவுஸ்திரேலியாவில் உள்ள சிறிலங்கா தூதராக மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் கடமையாற்றுகின்றார்கள்.

இவ்வதிகாரிகளை விட வெளிநாட்டு புலனாய்வு பணியகத்திற்கு முக்கிய தகவல் வழங்குநராக பிரபல எழுத்தாளரான ஆய்வாளர் ரொகான் குணரட்ண உள்ளார். இவர் சிறிலங்கா அரசின் அதி உயர் ஆற்றல் மிக்க புலனாய்வு அதிகாரியாக கடமையாற்றி வருகின்றபோதிலும் தன்னை ஓர் ஆய்வாளராக, எழுத்தாள்ராக அடையாளப்படுத்தி வருகின்றார். இம்மறைப்பை பயன்படுத்தி புலிகள் இயக்கத்தினரால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் நிதிசேகரிப்பு, ஆயுதக்கொள்வனவு, பிரசர்ரநடவடிக்கைகள், கப்பல் போக்குவரத்து போன்றவை பற்றிய தகவல்களைத்திரட்டித் தொகுத்து DFI இற்கு வழங்குவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றார்.

இது இப்படி இருக்க இராணுவப் புலனாய்வுப்பிரிவு (DMI) தமிழர் தாயகத்துக்கு அச்சுறுத்தல்களை கொடுத்துவரும் ஒரு புலனாய்வு சக்தியாக இருந்துவருகின்றது. இதன் ஆரம்ப இயக்குநராக மேஜர் ஜெனரல் பலகல்லவும் பின்னர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோனும் பணியாற்றியுள்ளார்கள். தற்போது பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண பணியாற்றிவருகின்றார். இப்பிரிவின் புலனாய்வு நண்பர்களாக PLOT மோகன்குழு, ராசிக்குழு, கருணாகுழு, டக்ளஸ்குழு மற்றும் ஏனைய தமிழ் விரோதக்குழுக்கள் உள்ளன.

இப்புலனாய்வுப் பிரிவானது புலிகள் இயக்கக் கட்டமைப்பினுள், பிரதேசத்தினுள் தம்முகவர்களை அமர்த்தி பெறுமதி வாய்ந்த தகவல்களை திரட்டுவதில், நாசவேலைகள், மறைமுகத் தாக்குதல்களை மேற்கொள்ளுதல், பொதுமக்களது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு பெரும் பயனுள்ள தகவல்களை களப்புலனாய்வாளர்களுடன் ஒருங்கிணைத்தல் ஆகிய முக்கிய பணிகளை ஆற்றிவருகின்றது. அதற்கு அப்பால் தமிழீழ தேசத்து புலனாய்வாளர்களின் நடவடிக்கைகளை முறியடிப்பதும் அவர்களது முதன்மைப்பணியாக இருந்து வருகின்றது.

மேலும் நீண்ட வீச்சு வேவு ரோந்து அணியின் (LONG RANGE RECONNAISSANCE PATROL - LRRP) தாக்குதல் நடவடிக்கைக்கான இலக்குகளை வகுத்துக் கொடுக்கின்றது. அதற்கான வழிகாட்டல், தகவல் ஒருங்கிணைப்புகளை செய்து கொடுப்பதிலும் DMI போதிய கவனம் செலுத்தி வருகின்றது.

இன்றைய சிறிலங்கா அரங்கில் பிரதான சக்தியாக விளங்கும் புலிகள் இயக்கத்தலைமைகளை குறிவைத்து DMIயும் LRRPயும் ஒருங்கிணைந்த தாக்குதல்களை மேற்கொண்டன, மேற்கொள்ளமுயற்சிக்கின்றன. இத்தகைய முயற்சிகளை நெருக்கடிநிறைந்த போர்க் காலத்திலும் சரி போர் ஓய்ந்த சமாதான காலத்திலும் சரி DMI மேற்கொண்டே வருகின்றது.

இத்தகைய எதிரியின் தாக்குதல் முயற்சிகளின்போது புலிகள் இயக்கத்தின் லெப்.கேணல் கங்கைஅமரன் ஆனைவிழுந்தானிலும், கேணல்.சங்கர் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியிலும் லெப். கேணல். நிசாம் மட்டக்களப்பிலும் கிளைமோர் தாக்குதல்களில் கொல்லப்பட்டார்கள்.

இச்சம்பவங்களுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் DMIயால் மேற்கொள்ளப்பட்ட நாசவேலைகள் மறைமுகத்தாக்குதல் முயற்சிகளையும் இங்கு நோக்குவோம்.

அதாவது 1992க்கும் 1996க்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளை எடுத்து நோக்குமிடத்து ஓமந்தை புலிகளின் தடைமுகாம் நேரக்கணிப்பு குண்டுவெடிப்பு, கொம்படி பயணிகள் இறங்குதுறை குண்டு வெடிப்பு, யாழ்ப்பாண பஸ்நிலைய அருகாமைக் குண்டுவெடிப்பு, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக் குண்டுவெடிப்பு என்பன நடைபெற்று அவற்றில் சில தமிழர்கள் கொல்லப்பட்டும் பல தமிழர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியும் உள்ளார்கள்.

இந் நாசவேலைகளை வவுனியா யோசேப் இராணுவ முகாமிலுள்ள DMI அதிகாரியான மேஜர் முத்தலிப் தனது நேரடி வழிகாட்டலில் செய்துள்ளார். இதனைவிட முத்தலிப் தாக்குதலுக்காக தயார்ப்படுத்தி மூன்று C4 வெடிமருந்துப் பொதிகளை கொடுத்து அனுப்பிய வவுனியாவைச் சேர்ந்த இராசமணி, ஒட்டுசுட்டான் சுந்தரலிங்கம், கிளிநொச்சி மோகனதாஸ் ஆகியோர் வெவ்வேறு காலகட்டங்களில் புலிகளிடமே ஒப்படைத்து தாம் தாய்நாட்டிற்கு புரியவேண்டிய பணியை அத்தமிழர்கள் செய்தார்கள். அத்தேசப்பற்றுணர்வாளர்களால் DMI யினரின் நாசவேலைகள் அக்காலத்தில் முறியடிக்கப்பட்டது.

இவைகள் எல்லா வற்றினையும் விடவும் புலிகளின் புலனாய்வு அமைப்பினரால் C4 வெடிமருந்து பொதிகள், கிளைமோர்கள், வாகனக் கண்ணிவெடிகள், கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்டு DMI

(25 ஆம் பக்கம் பார்க்க)

### பிளேயர்



ஒருவர்: உன்ர மகன் பெரிய பிளேயர் ஆவான் எண்டு சொன்னியே! இப்ப என்ன செய்யிறான்?
மற்றவர்:அவன் இப்ப ஹோட்டல்ல சப்பிளேயராக இருக்கிறான்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 23 . 07 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# ஏன் இத்தனை அவசரம்...?

கிழக்கில் புலிகளுடனான படையினரின் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருமாறு இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரை சிறிலங்கா அரசு கோரியுள்ளது.

அரசு கருணாகுழுவினரை வைத்துக்கொண்டு கிழக்கில் கட்டவிழ்த்துவிடும் தாக்குதல்களையடுத்து இந்தச் சந்திப்பினை புலிகள் இயக்கம் தவிர்த்துள்ளது.

புலிகளின் இந்தச் செயற்பாடு அரசு சமாதான போர்வைக்குள் பதுங்கிக்கொண்டு மேற்கொள்ளும் யுத்த நடவடிக்கைகளின் காத்திரத்தை வெளிப்படுத்து வதாக இருந்தது.

அத்தோடு, புலிகளின் இந்த கலந்துரையாடல் புறக்கணிப்புக்குப் பின்னர்கூட அதன் முக்கியத்துவத்தை அரசோ, அரச படைகளோ புரிந்துகொண்டதாகவோ அல்லது அதனை சரியாக எடை போட்டதாகவோ இல்லை. அதன் பின்னர் கூட கிழக்கின் நிலைமை சுமுகமற்றதாகவே தொடர்கிறது.

இந்த நிலையில் புலிகள் இயக்கம் கிழக்கின் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்களை வன்னிக்கு அழைத்து, கிழக்கின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்திருந்ததோடு, கிழக்கின் நிலைமை மட்டுமன்றி, ஒட்டுமொத்த யுத்தநிறுத்தத்தின் பாதுகாப்புத் தொடர்பாகவும் சமாதான முயற்சி தொடர்பாகவும் மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனால்தான் கிளிநொச்சியில் உலகவங்கிப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின்னர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போது; தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சமாதான வழி முறைகள் மூலம் தீர்வுகாண கொடுத்திருக்கும் வாய்ப்பை அரசாங்கம் தவற விட்டுவிட்டு, யுத்தத்திற்குள் தள்ளுவது வேதனை தருகிறது என நிலைமையின் யதார்த்தத்தினை சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் அரசோ கட்டுப்படுத்தவேண்டிய இராணுவ போக்கையோ, முன்னெடுக்கவேண்டிய சமாதான வழிமுறைகளுக்கான எந்த முன் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளாது, பொதுவான ஒரு வழமையின் செயற்பாடாக சந்திப்புக்களையும் பேச்சுக்களையும் முன்னெடுக்க விரும்புவது போலத் தெரிகிறது.

இதன் ஒரு கட்டமாகவே கிழக்கில் புலிகளுடனான படைத்தரப்பினரின் சந்திப்பினை ஒழுங்குபடுத்தி தருமாறு கோரியிருக்கின்றனர்.

உண்மையில் அரசு விசுவாசத்துடனும், இதயசுத்தியுடனும் செயற்படுமாக இருந்தால் கிழக்கில் நடத்திவரும் அட்டூழியங்களையும் அதற்கான பிரகிருதிகளையும் களையமுற்படவேண்டும்.

அதுவே அரசு கோரும் புலிகளுக்கும்- படைத்தரப்புக்குமிடையிலான சந்திப்புக்களை பயனுள்ளதாக மாற்றும்.

இத்தகையதொரு நிலையை அரசு ஒரு போதும் விரும்பப்போவதில்லை. காரணம் சுமுகமற்ற ஒரு சூழலும், தீர்க்கமான எந்த தீர்வை நோக்கிய முன்னெடுப்புகளும் தங்களின் அரசியல் முதலீட்டுக்கே அதிக ஆபத்தை ஏற்படுத்தும் என கருதுவதால் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் ஒரு செயலாகவே நாட்டை குழப்பி தமது காரியங்களை முன்னெடுத்துச் செல்ல முற்படுகின்றனர்.

ஆகவே அரசின் எந்தக்கோரிக்கையும், அழைப்பும் யதார்த்தத்தை மீறியதாக இருக்கும் வரை பயனுள்ள எந்த விளைவையும் தரப்போவதில்லை.

யார் குழப்பங்களுக்கெல்லாம் காரணமோ, அவர்களே குழப்பவாதிகளைத் தேடுவது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் ஒரு பாடல்வரியின் மூலமாகத்தான் புரியவைக்கலாம்.

அதாவது.... திருடனாப்பார்த்து திருந்தா விட்டால்.... திருட்டை ஒழிக்க முடியாது.... என்பதுதான் அது.

## தூரனின்பார்வை

இது எங்கள் கையைக் கொண்டே எங்கள் கண்களைக்

# தொடர்ந்தும் முன்னெடுக்கும் கோயபல்ஸ் பணி

"வருந்தாத இதயங்கள் இருந்தென்ன லாபம்
திருந்தாத உள்ளங்கள் பிறந்தென்ன லாபம்"

கவியரசர் கண்ணதாசனின் இந்தப்பாடலைக் கேட்கும்போதெல்லாம் நினைவுக்கு வருவது சிறிலங்காவின் கோயபல்ஸ்களின் மிகவும் பிரசித்தமானவரும் சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் ஆலோசகரும், வெளியுறவு அமைச்சரும், பொய்ப்பிரசார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவரும் தமிழ்ப் பெயரில் உலாவும் சிங்கள உணர்வாளரும், சிங்களப்பேரினவாதத் தலைமை யின் அடிவருடியுமான லக்ஷ்மன் கடிர்காமர் அவர்களின் சகுனி முகமேதான்.

இந்தளவுக்கு விரிவான வரைவிலக்கண விளக்கங்கள் அவரைப்பற்றிக் கூறிய பின்னர் அவர் என்ன செய்கிறார். இன்னும் என்ன செய்யக் கூடியவர் என்பது குறித்து எவருக்கும் விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

வாக்குமாறிப் போன அறளைபெயரும் வயதுக்கு அவர் வந்துவிட்டார் என்பதையே அவரின் அண்மைக்கால அறிக்கைகள், செயற்பாடுகள் யாவும் உறுதியாக நிரூபித்து வருகின்றன.

புதிய அரசு பதவியேற்று மீண்டும் அவரை வெளியுறவு அமைச்சராக சந்திரிகா அம்மையார் பட்டம் சூட்டியபோது பிரதமர் பதவிக்கனவில் இருந்த அவருக்கு ஞானம் வந்திருக்கவேண்டும்.

எவ்வளவுதான் விசுவாசமான அடிமையாக சந்திரிகாவின் காலடியைச்சுற்றிச் சுற்றி வலம் வந்தாலும், பேரினவாதத்திற்கு அனுசரணையாக உலகெங்கும் பறந்து பறந்து பிரசார ஊளையிட்டாலும் தனக்கு ஒரு கௌரவமான உயர் பதவியைத்தர பௌத்த சிங்கள ஆட்சி பீடங்கள் மனம் விரும்பாது என்பதை பிரதமர் பதவியளிப்பதாக ஆசைகாட்டி மோசம் செய்த போதே கதிர்காமர் அல்லது கடிர்காமர் அந்தக் கருங்காலிப் பெருமகனார் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஈனவாழ்வு வாழத் துணிந்துவிட்டவருக்குமான உணர்வு இல்லாமல் போவதில் வியப்பில்லை.

அவர் தொடர்ந்தும் தனது கோயபல்ஸ் பணியை தொடர்வதில் பெருமையும் கௌரவமும் அடைகிறார் போலும்.

கடந்த சில மாதங்களாக மீண்டும் வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்ற பின் இந்தியா, அமெரிக்கா, புதுடில்லி, வாஷிங்டன் என மாறி மாறி சமாதானச் செய்தி சொல்லப்போவதாகக் கூறிக்கொண்டு பறத்தலை மேற்கொள்ளும் அவர் அங்கிருந்தும் பின்னர் இங்கு வந்தும் விடும் அறிக்கைகள் கூறும் கருத்துக்கள் கைக்கூலித்தன கோமாளித்தனத்தின் உச்சக்கட்டமாகும்.

கடந்த ஐ.தே.முன்னணி ஆட்சி கலைக்கப்பட்டது முதலே கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்ட சமாதான நகர்வுகளின் எதிர்கால முன்னெடுப்பை மீண்டும் ஆச்சரியக் குறிநிலைக்காவது கொண்டுவர, தவிர்க்க முடியாத தேவைகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ள புதிய, ஐ.ம.சு முன்னணியின் தலைமையிலான, அறுதிப்பெரும்பான்மை பலமற்று நூலிழையில் ஊசலாடும் அரசு, எந்த வகையிலும் விசுவாசமான அர்ப்பணிப்புடன் கூடிய மனோநிலையில் அதை செயற்படுத்த முனையவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஆளும் முன்னணியின் பின்னணியில் அதனை இயக்குபவர்களாக இருக்கும் அனைத்துத்தரப்பினரும் இன்றையசமாதான முயற்சிகளையும் அதற்கான நோர்வே அரசின் அனுசரணையையும், அது தொடர்பான சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பையும் ஆரம்பம்முதலே எதிர்த்து வந்தவர்கள் என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இந்தப் பேச்சுக்களின் ஆரம்பக்கட்டத்தில் இருந்தே - அப்போது சந்திரிகா அம்மையாரின் விசேட ஆலோசகராக இருந்த கடிர்காமர் அதனை குழப்பியடிப்பதற்கான பல்வேறு மூலோபாயங்களை வகுத்து செயற்பட்டபோதும் அவை எதிர்பார்த்தவெற்றியை அடையவில்லை.

உதாரணமாகக் குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தை பெரிதுபடுத்தி இந்தியாவை அதற்குள் இழுத்துவிட்டு சமாதான முயற்சிகளுக்கு இடையூறுவிளைவிக்க அவர் எடுத்த முயற்சிகளைக் கூறமுடியும்.

1994களின் மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றிய சந்திரிகா தொலைநோக்குச் சிந்தனையுடன், கடிர்காமரை வெளியுறவு அமைச்சராக்கியபோது எவரும் அவரின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளவில்லை, மாறாக ஒரு தமிழருக்கு வெளியுறவுத்துறையைப் பொறுப்பளித்த பெருந்தன்மையான மனமுடையவர் என்றே எண்ணினர்.

இது எங்கள் கையைக் கொண்டே எங்கள் கண்களைக் குத்தும் ஒரு குள்ள நரித்தந்திரோபாய நடவடிக்கை தான் என்பதையுணர சமாதானத்திற்கான யுத்தம் என்ற சந்திரிகாவின் இராணுவ நடவடிக்கைக் காலம்வரை பொறுத்திருக்க வேண்டியிருந்தது.

இன்று அவர் அந்தக்காலத்தில் ஊர்ஊராக, நாடு நாடாகப் பறந்து திரிந்து விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்மக்களது விடுதலைப்போராட்டத்திற்கும் எதிராக மேற்கொண்ட சூறாவளிப் பொய்ப்பிரசாரங்களால் கிடைத்த மாபெரும் வெற்றிகள் என்று கூறப்பட்டவையனைத்தும் கடந்த இரண்டரை ஆண்டுகால சமாதான சூழலில் தோற்கடிக்கப்பட்டநிலையில் கடிர்காமர் இப்போது மீண்டும் தனது பிரசார உளவியல் நடவடிக்கையை 'அ'னாவிலிருந்து ஆரம்பிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

கடந்த வாரத்தில் இலங்கை வந்திருந்த ஜேர்மன் நாட்டு அதிகாரிகளுடன் பேசும்போது விடுதலைப் புலிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டு குழப்பமான நிலை நிலவுவதால் சமாதானப்பேச்சுக்களை முன்னெடுக்க அரசால் முடியாமலுள்ளது என்று கூறி குழப்பக்கருத்தை கொட்டியுள்ள கடிர்காமர் அதற்கு இரு தினங்கள் முன்னர் தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் எனவும் அறிக்கைவிடுத்திருந்தார்.

இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதில் தீவிரம்காட்டும் கதிர்காமர் சமாதான முயற்சிகள்குறித்து விளக்கவே அந்தந்தநாடுகளுக்குச் செல்வதாக வெளியே கூறுவது தான் வேடிக்கையாகும்.

உண்மையில் அவர் கருணா விவகாரம்



தொடர்பாக நாளொரு பொய்யும் பொழுதொரு பிதற்றலுமாக T.B.C. வானொலி சேவையூடாக மேற்கொண்ட பொய்ப் பிரசாரம் அவரின் தமிழினத்திற்கு எதிரான துரோகத்தன நடவடிக்கைகளிலேயே மிகவும் கீழ்த்தரமானதாகும்.

ஆனால் அவரின் பருப்பு இங்கு வேகவில்லை.

சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் புலிகளின் பதிலுக்குக் காத்திருப்பதாக சந்திரிகா அம்மையார் அதே ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜெஸ்கா பிஷ்ஷரிடம் கூறியுள்ள நிலையில், அம்மையாரின் ஆலோசகர் இவ்வாறு உளறியுள்ளார்.

உண்மையில் கொள்கைரீதியில், கருத்துரீதியில் முரண்பட்டு, எப்போது பிளவடையும் என்ற நிலையில் அரச கூட்டணிக் கட்சியின் மத்தியில் அதிகார மேலாதிக்கப்போட்டி நிலவிவரும் இக்கட்டான சூழலை சமாளிக்கத் திணறிக்கொண்டிருப்பது அரசாங்கமேதான்.

இந்த நிலையில் ஓட ஓட விரட்டப்பட்ட கருணா அரசாங்கத்தின் பாதுகாப்பில் ஒழிந்திருக்கும் நிலையில் விடுதலைப்புலிகள் தமது வலுவான ஸ்திரத்தன்மையை நிரூபித்து நிமிர்ந்து நிற்கையில் கடிர்காமர் புலிகளுக்குள் பிளவு என்றும் அதனால் குழப்பம் என்றும் கூறுவது கையாலாகாத் தனத்தின் அல்லது அறியாமையின் வெளிப்பாடேயாகும்.

மிஸ்டர் கடிர்காமரே வன்னிக்கு விஜயம்செய்து பார்க்கலாமே..


ஒரு தமிழ்த்துரோகியாக உங்களை ஓட ஓடவிரட்டாது சாதாரண சிங்கள அமைச்சராக வரவேற்க வன்னி தயார். வருகை தர நீங்கள் தயாரா?

உங்களை அண்மையில் இந்திய ஆய்வாளர் ஒருவர் கெட்டமனிதர் என்று பட்டம் வழங்கி அழைத்துள்ளார்.

வன்னிக்கு வரும் சர்வதேச அதிகாரிகள் உங்களை மோசமான பொய்யர் என முடிவு கட்டிக்கொண்டே செல்வார்கள் என்பதும் நிச்சயம்...

ஆனால் நீங்கள் இதற்காக வருந்தவும் மாட்டீர்கள் திருந்தவும் மாட்டீர்கள்.

ஏனெனில் உங்களின் பதவிப்பற்றும், எஜமானி விசுவாசமும் உங்களின் தமிழன் என்ற அடையாளத்தை தூக்கியெறியவைத்து வெகுகாலமாகிவிட்டது.





# புரிந்து கொண்டார்களா...?
# புரிந்து கொள்வார்களா...?

**சாத்வீகமும் சமரசமும் சிங்கள ஏகா திபத்திய வாதிகளிடம் தோற்றுப்போக எழு பதுகளில் எழுந்தது புலிகள் இயக்கம். தமிழர்களின் இடர் களுக்கெல்லாம் சரியான பாதையை 1983 யூலையில் திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் நேரடியாக களத்தில் இறங்கி நடத்திய வெற்றிகரத்தாக்கு தலையடுத்து தமிழர் களுக்குத் தெரிந்தது.**

**சிறி.இந்திரகுமார்**

தமிழர் வரலாற்றில் யூலைமாதம் கொடூர பல அழி வுகளை சந்தித்தாலும் உலகின் கவனத்தையீர்க்கும் வகையிலும் எழுச்சியைக் காட்டியதும் யூலை யில் என்றால் மிகையாகாது.

ஒரு இனத்தின் வீழ்ச் சியை மையமாகவைத்து தன் கொடூர கரங்களை அரசு அகல விரிக்கும்போது அந்த இனத்தின் இனமான ஆத்ம உணர்வுகள் கொப்பளிக்கத் தொடங்கும் என் பது வரலாற்றில் உலகில் பல பாகங்களிலும் நிதர்சனமான உண்மை.

யூதர்கள், யூதர்கள் இன்று அழிக்கும் பலஸ்தீனர்கள், தென்னாபிரிக்கமக்கள், எரித் திரிய மக்கள், கிழக்குத்தீமோர் மக்கள் என விடுதலையின் எல்லையைத் தொட்டமக்களும் விடுதலையின் எல்லையை எட்ட முனையும் மக்களும் உலகில் இருந்தார்கள், இருக்கிறார்கள்.

இனமான ஆத்ம உணர் வுகள் என்பது பரந்துபட்ட இனத் தின் ஆணிவேரிலிருந்து தோன்று வதால் தடைகள் தகர்ந்து போவதை ஆக்கிரமிப்பாளர் களும், மண்பறிப்பாளர்களும் புரிந்து கொள்வதேயில்லை.

விளைவு அழிவுகளிலி ருந்து புதிய தேசத்தின் பிரசவிப்பு கள் நிகழுகின்றன. அவற்றுக் கான முற்றுப்புள்ளிகளாகவும் அவை அமைகின்றன.

இன்று சுமார் மூன்று தசாப்தகால புரட்சிகர அரசியல் வரலாற்றில் தமிழர்விதியை எதிரிகளால் தலைகீழாக மாற்ற முடியாது போனதென்றால் புலிகள் இயக்கம் தான் என்பதும், புலிகள் இயக்கம் நிகழ்த்திய பல அற்புதமான புதிய எழுச்சிகளும் தான் என்பதும் வரலாற்றில் எழுதப்பட்ட விதியாகிவிட்டது.

யூலை என்றவுடன் தமிழர் வெலிக்கடை என்பர், யூலை இனக்கலவரம் என்பர், நவாலி முதல் தமிழர் தேசம் எங்கும் அழிக்கப்பட்ட தமிழர் உயிர்களும் சொத்துக்களும் நினைவுக்கு வரும்.

ஆனால் இவையாவற் றையும்விட இந்த அழிவுகளுக் குள்ளிருந்து தமிழர்கள் எழுந்தார் கள் என்றால் எப்படி?

சாத்வீகமும், சமரசமும் சிங்கள ஏகாதிபத்தியவாதி களிடம் தோற்றுப்போக எழுபது களில் எழுந்தது புலிகள் இயக் கம். தமிழர்களின் இடர்களுக் கெல்லாம் சரியான பாதையை 1983யூலையில் திருநெல்வேலி தபால் பெட்டி சந்தியில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் நேரடியாக களத்தில் இறங்கி நடத்திய வெற்றிகரத்தாக்கு தலையடுத்து தமிழர்களுக்குத் தெரிந்தது.

இதன் நீட்சியாய் அரசியல் கட்டமைப்புகளையும், இராணுவ படையணிகளையும் புதிய அரசியல் நகர்வுகளுக் கேற்ப தன்னை தக வமைத்துக் கொண்டு ஒரு அரசுக்குரிய சகல அடிக்கட்டுமான அமைப்புகளை யும் கொண்ட ஒரு பெரும் விருட்சமாக புலிகள் இயக்கம் நடைபோடுகிறது.

ஆனால் இத்தனைகால வரலாற்றின் பயணத்தில் இலங் கையின் இன்றைய அரசியலில் தமிழ்மக்களின் பலம் நிருப ணமாக்கப்பட்டதன் பின்னர்கூட ஞானம் பெறாதவர்களாய் சாக் கடை அரசியலிலேயே சிங்கள ஏகாதிபத்தியத்தின் அரசியல் குவிமையம் கொண்டுள்ளது.

வரலாற்றில் திரும்பிப் பார்க்க வேண்டியதும் நீட்சியாய் தொடராமல் தடுக்க வேண்டிய துமான துயரங்களை அபத்த மான அரசியலுக்கான முதலீடு களாக மாற்றுவதில்தான் இன்னமும் சிங்கள ஏகாதி பத்தியத்தின் செயற்பாடுகள் அமைகின்றன.

புரிந்து கொள்ளவேண் டிய பாடங்களை புரிந்து கொள்ளமறுப்பதன் பயன்தான், அமைதிக்காகவும் ஒரு தீர்வுக்கா கவும் நாடுகள் தோறும் சென்று பேச்சுக்களை நடத்தியும் சர்வ தேச சமூகத்தின் உதவியோடு சமாதான முயற்சிகளை மேற் கொள்ளுகிறபோதும் வரலாற்றில் வழங்கப்படும்வாய்ப்பாக இதனை இன்னமும் சிங்கள தேசம் புரிந்து கொள்ளவில்லை.

பதிலாக காலத்தை இழுத்தடிப்பதிலும் புலிகள் காட்டு கின்ற பொறுமையை புலிகளின் பலவீனமாகவும் கருதி, தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத்தப் படாத யுத்தம் ஒன்றிற்கான வாச லைத்திறந்து விட்டிருக்கிறார்கள்.

இது எதைக்காட்டுகிறது என்றால் எத்தனை யூலைகள் மட்டுமல்ல, எந்த சூழ்நிலையிலும் சிங்கள தேசம் அதன் அதிஉச்ச வரட்டுச்சிங்கள மேலாண்மை யிலிருந்து விடுபடப்போவ தில்லை என்பதையே காட்டு கிறது.

தமிழ்மக்கள் இன்றைய யதார்த்தத்தில் சிங்கள தேசத்தி டம் இருந்து எந்த அனுகூலங்க ளையும் எதிர்பார்ப்பது பொருத் தப்பாடுடையதாக இருக்காது.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளை தற் போது எடைபோடும் எவரும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியும்.

அதாவது சமாதான முயற்சியை முதலில் முன்னகர்த் திய ஐக்கியதேசிய முன்னணி அரசினுடைய காலத்தில் சமா தான பேச்சுக்கள் முட்டுக் கட்டை களை எட்டியபோதும் அது ஒரு கட்டத்துக்குமேல் முன் னகராது விட்டாலும் ஒரு கட்டத் துக்குக்கீழ் இறங்காமல் ஓரளவு இருந்தது என்பதை புரிந்துகொள்வர்.

ஆனால் இப்போது சமா தான முயற்சியை கையாளும் சுதந்திர ஐக்கிய மக்கள் விடு தலை முன்னணி அரசினுடைய தற்போதைய காலத்தில் சமா தான பேச்சு முன்னகராது போனாலும் அது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தைப் போல ஒரு கட்டத்தில் இருக்கக் கூடியதாககூட பாதுகாக்கப்பட வில்லை.

பதிலாக ஒரு கட்டத்துக் குக் கீழ் அது ஒரு யுத்தத்தை நோக்கி நகரத் தொடங்கிவிட்டது.

இது எதைக்காட்டுகிறது என்றால் தீர்வுகளையும், இணக் கங்களையும் அல்ல அரசு எதிர் பார்ப்பது, தீர்க்கப்படாத தமிழர் பிரச்சினை நீள வேண்டும் என்ப தையே இப்போதும் அரசு விரும்புகிறது.

எப்போதும் அரசு யுத்தம் ஒன்றை நேரடியாகத் தொடுக்கும் அல்லது யுத்தத்தை தொடங்கக் கூடியதாக தூண்டலில் ஈடுபடும்.

இந்த இரண்டுவித நடவடிக் கைகளுமே ஒரேவிளைவைத் தான் தரவல்லன.

அதைத்தான் அரசு இந்த யூலையிலும் தொடர்கிறது என் பதே இந்த யூலையில் தமிழர்க ளுக்கான செய்தி.

*சுமார் மூன்று தசாப்த கால புரட்சிகர அரசியல் வரலாற்றில் தமிழர்விதி எதிரிகளால் தலை கீழாக மாற்றமுடியாது போன தென்றால் புலி கள் இயக்கம் தான் என் பதும் புலிகள் இயக்கம் நிகழ்த்திய பல அற்புத மான புதிய எழுச்சிகளும் தான் என்பதும் வரலா ற்றில் எழுதப்பட்ட விதி யாகிவிட்டது.*

# நேர்நோக்கு

# நிதானமற்ற கூக்குரல்

1971 இலும் 1987இலும் ஆயுதக் கிளர்ச்சிசெய்து பெருமளவு சிங்கள இளைஞர்களின் அழிவை மட்டுமே அறுவடையாகப்பெற்றது ஜே.வி.பி. இவ்விரண்டு ஆயுதக்கிளர்ச்சிகளையும் உன்னிப்பாக அவதானித்தோரும், அது கொடுங்கரங்களால் அழிக்கப்பட்டதன் காரணத்தை ஆழமாக அறிந்தோரும். ஜே.வி.பி. மீதே இப்பொழுதும் குறைகூறி வருகின்றனர். அதாவது வெறும் தத்துவார்த்த ரீதியிலான "புரட்சியை" மட்டும் அது செய்யப்புறப்பட்டதே அவ்விரு கிளர்ச்சிகளும் தோல்வியுறக் காரணமாக இருந்தது என பலர் கூறுகின்றனர்.

இவ்வாறான ஆயுதக் கிளர்ச்சிகளால் "பயங்கரவாதிகளாக" ஆளும் வர்க்கத்தினரால் சித்திரிக்கப் பட்டுவந்த இவர்கள் பல அழிவுகளை சந்தித்தும் பலமுறை அஞ்ஞாதவாசங்களையும் மேற்கொண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்களின் தயவால் இப்பொழுது ஆட்சியாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

முதலாவது கிளர்ச்சிக்குப் பின் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராகப் பயன்படுத்தப்படவென சனநாயக அரசியலுக்கு இறக்கிவிடப்பட்ட இவர்களின் கட்சி 1983ஜ"லைக் கலவரத்தின் பின்னணியில் இருந்தது எனக் குற்றஞ்



சாட்டப்பட்டுத் தடை செய்யப்பட்டது. ஆனால் இக்கலவரத்தின் பின் னணியில் யார் இருந்தார்கள் என்பது பகிரங்கமான விடயம்.

பின்னர் 1987ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தின்பின்னர் இடம்பெற்ற கிளர்ச்சி வன்முறையில் ஐ.தே.கட்சிக்குச் சமனான வன்முறையில் ஈடுபட்டு பிரேமதாசவினால் கொடூரமாக அழிக்கப்பட்டார்கள். இரண்டாவது கிளர்ச்சிக்கு அவர்கள் கையில் எடுத்த அரசியல் ஆயுதம் இந்திய எதிர்ப்பு பிரேமதாச இவர்களைவிடத் தீவிரமான இந்திய எதிர்ப்பாளராக இருந்தமையால் அவருக்கு ஜே.வி.பி.யினரை அவ்வாறு கொடூரமான முறையில் ஒடுக்கத்தார்மீகபலம் கிடைத்தது. அதாவது இந்திய இராணுவத்தை அவர் வெளியேற்றியதன் மூலம் ஜே.வி.பியின் அரசியல் ஆயுதத்தைப் பறித்து அவர்களை அழிக்கமுடிந்தது.

அதன் போது தப்பி ஓடிய சோமவன்ச அமரசிங்கவால் இப்பொழுது ஜே.வி.பி.யின் கைப்பிடிக்குள்சிக்கியுள்ள ஆட்சி அமைத்த பின்பே சிறிலங்காவில் நிலைகொள்ள முடிந்திருக்கிறது.

ஆனால் அவர்கள் இப்பொழுதும் கூட நிதானமாக நடைமுறைச்சாத்தியமான ரீதியில் சிந்தித்துச் செயற்படுபவர்களாகவோ அல்லது பேசுபவர்களாகவோ இல்லை. இப்பொழுது உள்ள தேர்தல்முறை அக்கட்சிக்கு ஏற்படுத்தியுள்ள சாதகநிலைமை இருபிரதான கட்சிகள்மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பு என்பன அவர்களை ஆட்சிபீடத்துக்குக் கொண்டுவந்திருக்கிறதே தவிர அவர்களின் திட்டமிடல் அதற்குக் காரணமல்ல.

ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்ததற்கும் மாறாக அதிகளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்தமையும் இவர்களைப் போலவே இனவாதம் பேசியபோதும் திடீரென பௌத்தபிக்குகளைக் களத்தில் இறக்கிய ஜாதிகஹெல உறுமயவும் கூட பெற்றவெற்றியும் இதனையே காட்டுகிறது.

இங்கும் கூட ஜே.வி.பி.க்கு ஐக்கியதேசியக்கட்சியின் முன்னாள் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கிய தேர்தல் முறையே உதவியுள்ளது. அவ்வாறானதொரு தேர்தல் முறைமை உள்ளமையாலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சி இவ்வளவு விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியில் இவர்களுடன் கூட்டுச்சேர வேண்டியும் ஏற்பட்டது தவிர, ஜே.வி.பி. திட்டமிட்டு படிப்படியாக வளர்ச்சி காணவில்லை.

இப்பொழுதும்கூட அது யதார்த்தத்தைப் புரிந்துகொண்டதாக இல்லை. இல்லாவிடின் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேற்றவேண்டும் என ஜே.வி.பி.யின் தலைவரே வெளிப்படையாகக் கூறியிருக்கமாட்டார்.

ஜே.வி.பி.விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன தமிழ்மக்களின் உரிமைப்போராட்டம் சர்வதேச அங்கீகாரம் பெற்றதாகிவிட்டது. தமிழ்மக்களின் பிரச்சினை சமாதான வழிமுறைகள் மூலம் தீர்த்துவைக்கப்படவேண்டும் அவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து பிரச்சினையைத் தீர்த்துவைக்கவேண்டும் என்பது கேள்விக்கிடமின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அத்துடன் தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகளாகப் புலிகளையே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே விடுதலைப்புலிகளுடனான இணக்கப்பாடென்பதே இலங்கைத்தீவின் மீட்சிக்கு ஒரே வழி. ஜே.வி.பி.யினர் கூறுவதுபோல "நாட்டின்"இறைமை ஒருமைப்பாட்டுக்கும் அதுவே வழி.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றவேண்டுமென கூச்சலிடுவது ஜே.வி.பியின் முன்னையநிலைக்குப் பொருந்துவதாக இருக்கலாம்.இன்று அது முற்றிலும் பொருத்தப்பாடற்றதும் அதன் முதிர்ச்சியற்ற தன்மையையுமே காட்டுகிறது .அதிலும் அக்கட்சியின் தலைவரே இவ்வாறு கூறுவது ஜே.வி.பி மீது அனுதாபத்தையே ஏற்படுத்துகிறது.

**வேலவன்**

# மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் செயல்

சிறிலங்காவில் ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் எல்லோருமே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடும் காரியத்தில் தான் அதிக நாட்டம் கொள்பவர்களாக இருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் இந்தப் பேச்சுகளும் முயற்சிகளும் அதிகமாகவே உள்ளது.

குறிப்பாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் பிரதான அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.யினரின் போக்கே தீவிரம் கொண்டதாகவுள்ளது.



இதில் நாடாளுமன்றத்தில் கட்டிக்காக்கவேண்டிய சனநாயகப் பண்புகளையும், கடைப்பிடிக்கவேண்டிய சனநாயக நடைமுறைகளையும் மீறுவதிலும் அதனைக் குழப்புவதிலும் அதிகம் சண்டித்தனத்தைக் காட்டும் ◌ங்கை சிறுபான்மை இனங்கள் ம கட்டவிழ்த்துவிட்ட கொடூர வன்முறைகளுக்கும் அழிவுகளுக்கும் இவர்கள் பதில் கூறுபவர்களாக இருந்திருந்தால் தார்மீக அடிப்படையில் இவர்கள் அரசியலில் இருந்தே ஒதுங்கியிருக்கவேண்டும்.

ஆனால், இவை எவையும் நடந்ததா? இவர்கள் எல்லோருமே சனநாயகத்தையும் தார்மீகரீதியில் பொறுப்பேற்கவேண்டிய காரியங்களையும் தமது பதவிகளைக் காப்பாற்றவும் தமது அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்ளவுமே பாவிக்கப்படும் மிக மலினமான வார்த்தைகளாகவே சிறிலங்காவில் பயன்படுத்திவருகின்றனர்.

அண்மைய உதாரணங்கள் மூலமாக நோக்குவதாக இருந்தால் கூட, ஐக்கிய தேசிய முன்னணி அரசு பன்னிரெண்டாவது நாடாளுமன்ற தேர்தலில் அறுதிப்பெரும்பான்மையோடு அரசமைத்த போது நாட்டின் தலைவி என்றவகையில் சனநாயகத்தை மதித்தும், தார்மீக அடிப்படையில் அந்தக் கட்சிக்கு சகல ஆதரவையும் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் வழங்கவேண்டிய ஆதரவுக்குப் பதிலாக அந்தக் கட்சிக்கு ஏற்படுத்தக்கூடிய எல்லாவித இடையூறுகளையும் ஏற்படுத்தியதோடு, இறுதியில் பதவிக்காலம் முடியுமுன்னரே அந்த அரசை கலைத்த பெருமை இன்று சனநாயகத்தையும் தார்மீகத்தையும் எதிர்பார்க்கும் இவர்களையல்லவா சாரும்.

அத்தோடு நடந்து முடிந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சந்திரிகா ஜே.வி.பி.கூட்டு தார்மீக அடிப்படையில் நிரூபிக்கவேண்டிய பெரும்பான்மையை நிரூபித்தார்களா அல்லது நாடாளுமன்றத்தைத்தன்னும் சுமுகமாக நடைபெற ஒத்துழைப்பு நல்குகிறார்களா?

இவை எல்லாவற்றையுமே சிந்தித்ததாக இந்த சனநாயக விரோதிகள் வாய்பிதற்றுவது சிறிலங்காவின் அரசியலில் எத்துணை மலிவாக சனநாயகம் என்ற போர்வையில் போலிவாதிகள் செயற்படுகிறார்கள் என்பதை அம்பலப்படுத்துகிறது என்பதைத்தான் காட்டுகிறது.

நடந்து முடிந்த மகாணசபைக்கும் சபாநாயகர் பதவிக்கும் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்த முடியாது. ஆனால் இவர்கள் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் பாட முயல்வதை என்னவென்று சொல்வது?



ஜே.வி.பி.யினர் சனநாயக விழுமியங்களின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் புதிய மாற்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாக பிரசாரப்படுத்திவருவது வேடிக்கையிலும் வேடிக்கையாகவுள்ளது.

இப்போது நாடாளுமன்றில் உடனடி மாற்றமாக எதிர்பார்ப்பது ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து சபாநாயகராகத் தெரிவாகியிருக்கும் லொக் குபண்டார பதவிவிலகவேண்டுமென்பதே.

இதற்கு அவர்கள் கூறும் பிரதான காரணம் நடந்துமுடிந்த மாகாணசபைத் தேர்தலில் மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ள தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். ஆகவே சபாநாயகர் லொக்குபண்டார சபாநாயகர் பதவியை துறக்கவேண்டுமென்பதே. இது தார்மீக அடிப்படையில் நிகழவேண்டிய ஒரு மாற்றம் எனவும் தெரிவித்துவருகிறார்கள்.

இலங்கையில் அரசியல் வரலாற்றில் ஆட்சிபீடமேறிய பிரதான கட்சிகளாயினும் சரி ஏனைய எந்தக் கட்சிகளாயினும் சரி . சனநாயகப்பண்புகளை மதித்து நடந்ததாகவோ தார்மீக அடிப்படையில் செயற்பட்டதாகவோ இருக்கிறதா என்றால் எவரும் வாய்மூடிமௌனிகளாவே இருப்பர்.

அப்படி சனநாயகத்தை மதிப்பவர்களாகவும் தார்மீக அடிப்படையில் செயற்படுபவர்களாகவும் இருந்திருந்தால். இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று ஒருபோதும் இருந்திருக்கமுடியாது.

அத்தோடு இலங்கையில் தார்மீக அடிப்படையில் எத்தனையோ தடவை அரசியலில் பலமாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். அப்படி எவையுமே இலங்கையில் நடந்ததாக வரலாறே இல்லை.

**நக்கீரர்**

## காதலிக்கத் தயார்



ஒருவர்:- என்ன ராசன் சரிஞ்சு சரிஞ்சு காதலிச்சாய் இப்ப அவளின்ர வீட்டுப்பக்கமும் போறதில்லையாம்.

ராசன்:- காதலிக்க நான் இப்பவும் தயார்தான் அவள் கலியாணம் செய்வம் எண்டுறாள் அதுதான்.

# இன்றும் இறவா சனநாயகப்பண்பு

உலக அரசியலில் அவ்வப்போது ஆட்சியாளர்களை ஆட்டங்காண வைக்கும் சக்தி மக்களிடம் உண்டு என்பது நிகழ்த்தப்படுகின்ற அதிசயமாக உள்ளது. தேர்தலுடன் தமது கடமை முடிந்துவிட்டதெனக் கருதும் ஆசிய ஆபிரிக்க மக்களிடம் சில சந்தர்ப்பங்களில் விசேடமான இயல்பையும் காணமுடிகின்றது. வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் அத்தகைய சனநாயகப் பண்பு அருகி வந்தாலும் மேற்கு நாடுகள் தம்மை பாதுகாப்பதிலும் தமது மக்களை பேணுவதிலும் இன்றுமே அப்படியான பண்புகளை கொண்டிருக்கின்றனர்.



### பிலிப்பைன்ஸ்சின் பின் வாங்கல்

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு பணியாளரை ஈராக்கிய கிளர்ச்சியாளரிடமிருந்து பாதுகாப்பதற்காகப் பிலிப்பைன்ஸ் தனது படைகளை ஈராக்கிலிருந்து விலக்கியுள்ளது. அதனால் கிளர்ச்சியாளர்கள் தமது நியாயத் தன்மையை வெளிப்படுத்தி பிலிப்பைன்ஸ் நாட்டவரை விடுதலை செய்துள்ளனர். இது கிளர்ச்சிக்காரர்களின் போராட்ட அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றியாகும். ஏற்கனவே ஸ்பெயின் தனது படைகளை விலக்கிக் கொண்டதற்கான பின்னணியும் இவ்வாறான அணுகுமுறைக் கூடாகவே நிகழ்ந்துமுடிந்தது. மேலும் இவ்வாறான அணுகுமுறை தொடருமாயின் ஈராக்கிய கிளர்ச்சியாளர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் ஏற்படும். அமெரிக்கா தனது படைகளை பாதுகாக்க முடியாத நிலை ஏற்படும். அதன் மூலமாவது நாடுகளை ஆக்கிரமிக்கும் கொள்கைக்குத் தடைபோட முடியுமா என்ற முயற்சியாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது. உலகத்தை சூறையாடும் அமெரிக்கா சார்ந்த உலகத்திற்கு துணை போகும் வறிய நாடுகளின் தலைமைகளை விழித்தெழச் செய்ய வேண்டும். அல்லது விழிப்புணர்வுள்ள தலைவர்களைத் தெரிவுசெய்ய வேண்டும்.

பிலிப்பைன்ஸ் மக்களைப் பொறுத்தவரை அமெரிக்க ஆதிக்கத்தால் அழிந்துபோன மக்களாக உள்ளவர்கள் தமது பண்பாடுகளை நாகரிகங்களை பழக்க வழக்கங்களை அமெரிக்கர்கள் அடியோடு அழித்துக்கொண்டதுடன் மிக மோசமான கலாசார மக்களாகவும் அவர்களை மாற்றிவிட்டனர். ஆனால் அவர்களிடம் வளர்ந்திருந்த கத்தோலிக்க மதம் அதிக செல்வாக்குடையதாகவும் தேவாலயங்கள் பலமுடையவையாகவும் காணப்பட்டன. குறிப்பாக கத்தோலிக்க தேவாலயங்கள் எடுக்கும் முடிவுக்கு மக்கள் மட்டுமல்ல, ஆட்சியாளருமே கட்டுப்பட வேண்டிய நிலைதான் ஏற்படும். அதனையே பிலிப்பைன்ஸ் மக்கள் நிகழ்த்திக்காட்டியுள்ளனர். அமெரிக்க வல்லாதிக்கத்துக்கே தமது ஒரு பிரஜையின் பெறுமதி என்ன என்பதை தேவாலயங்கள் முன்னின்று மக்களைத் திரட்டி போராட்டத்தில் வெற்றியை ஈட்டியுள்ளனர். இது பிலிப்பைன்ஸ் மக்கள் தமக்குரியதாக மட்டுமன்றி, உலகத்துக்கானதாகவும் மாற்றியுள்ளனர். உலகில் அநேக நாடுகளில் மக்களின் போராட்டத்தை காண்பதே அரிதாக உள்ளது.

அத்தகைய சூழலில் பிலிப்பைன்ஸ் மக்கள் உலக மக்களுக்கு புதிய அனுபவத்தை மீளவும் நினைவுபடுத்தியுள்ளனர். மக்களின் எழுச்சிக்கு எந்த ஆதிக்க அரசும் கட்டுப்பட வேண்டும் என்பதே பொதுவான நிபந்தனையாக உள்ளது.

பிலிப்பைன்ஸ்சின் நடவடிக்கையை கண்டித்துள்ள அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் கிளர்ச்சியாளர்கள் இதனை ஒரு பாடமாக கொள்வார்கள் என கருத்து வெளியிட்டுள்ளனர். போராட்டத்தின் அணுகுமுறை உத்தி அதுவாயின் கிளர்ச்சியாளர்கள் அதனை கடைப்பிடிப்பதில் எந்தப் பாதிப்பும் கிளர்ச்சியாளருக்கு ஏற்பட்டுவிடாது.

### ஈராக்கில் தாக்குதல்

ஈராக்கில் கிளர்ச்சியாளரின் தாக்குதல் இடைக்கால அரசு அமைக்கப்பட்ட பின்பும் தொடருகின்றது என்னும் இடைக்கால அதிகார சபை வழங்கப்பட்ட பின்பே அதிகரித்துள்ளது. தற்போது ஈராக்கின் இடைக்கால அதிகாரிகளும் கிளர்ச்சியாளரின் இலக்குகளில் ஒன்றாக மாறிவிட்டது. இத்தாக்குதல்களை இடைக்கால அரசை கைமாற்றுவதால் சமாதானப் படுத்திவிடலாம். எனக் கருதிய அமெரிக்கத் தரப்புக்கு மீண்டும் நெருக்கடியாக கிளர்ச்சியாளர் மாறிவிட்டனர். இடைக்கால அரசு தடைகளையும், சட்டங்களையும் பிரகடனப்படுத்திக்கொண்டு ஆட்சியை ஒழுங்குபடுத்தலாமெனத் தவறான கணக்குப்போட்டுள்ளது. ஒரு வகையில் அமெரிக்க அதிகாரிகள் கொல்லப்படுவதற்குப் பதிலாக இடைக்கால ஈராக்கிய அதிகாரிகள் கொல்லப்படுகின்றனர் எனக் கூறலாம்.

இடைக்கால வரைபையும் அதிகார கைமாற்றலையும் புதிய மாதிரி குடியேற்ற அணுகுமுறையாக்க திட்டமிட்ட அமெரிக்கக் குடியேற்றவாதத்துக்கு ஆபத்தாக மாறிவிட்டது. இத்தகைய புதிய குடியேற்றவாதத்திற்கு சரியான பதிலை ஈராக் கிளர்ச்சி கொடுக்குமாயின் இன்னோர் அரசு மீதான ஆக்கிரமிப்பை கைவிடும் நிலை அமெரிக்காவுக்கு ஏற்படும்.

### ஸ்ரேலின் இணக்கம்

உலகத்தில் பல முன்னுதாரணங்களுக்கு அடிப்படையாக இருக்கும் இனம் யூதஇனம் என்பதில் அதிகம் கேள்விக்குட்படுத்த வேண்டியதில்லை. குறிப்பாக அரசியலில் தனித்தன்மையைக் காட்ட எப்போதும் யூதர்கள் ஒன்று சேருவார்கள். போரிலும் சரி, தமது இனத்தைப் பாதுகாப்பதிலும் சரி அரசியல் பகைமையைக் கடந்து கட்சிவேறுபாடின்றி ஒன்றிணைவார்கள். இஸ்ரேலிய அரசாங்கம் அநேகம் சிறுபான்மை அரசாங்கமாகவே ஆட்சிக்குள் வருவது வழக்கம். ஏனைய கட்சிகளது உதவி அல்லது எதிர்க்கட்சிகளது உதவி என்பவற்றை பெற்றுத்தனித்துவமான ஆட்சியை மேற்கொள்ளும். அவ்வாறே தற்போதும் ஏரியல் சரோனின் ஆளும் கட்சி தொழில் கட்சியுடன் இணைந்து ஆட்சியைப் பேணுவதுடன் பலஸ்தீன தீவிர வாதத்தின் தாக்குதல்களை முறியடிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏரியள் ஷரோனின் அரசாங்கம் ஆட்சியில் தொடரவேண்டும் என்பது ஆட்சியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைக்காக மட்டுமல்ல இஸ்ரேலிய மக்களை பாதுகாப்பதும் அதன் பொறுப்பென எதிர்க்கட்சி கருதுகின்றது. உலகத்தில் இஸ்ரேல் அதிக நெருக்கடிக்குள் சிக்குண்டிருப்பதுடன் பலஸ்தீனத்தின் தீவிரவாதத்தை பாதுகாக்கவேண்டுமாயின் ஏரியல் ஷரோனின் அரசு அவசியமானது. இதனை உணர்ந்த எதிர்க் கட்சிகள் கூட்டாக ஆட்சியைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருப்பது அதன் தனித்தன்மையைக் காட்டுகிறது.



உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இத்தகைய நடைமுறையை காண்பது கடினம் "ENTE BE AIRPORT" என்ற சம்பவத்திலும் யூத மக்களை மீட்டெடுக்கும் நோக்குடன் இரண்டு கட்சிகளும் ஒன்றாகச் செயற்பட்டதை மறுக்க முடியாது. எதிர்க் கட்சிகள் எப்படி ஆளும் தரப்பை வீழ்த்திவிட்டு ஆட்சியைப் பிடிப்பது எனக்கருதும் போதும் ஆளுங்கட்சி முன்வைப்பது எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற வழிமுறை பின்பற்றப்படும் போதும் யூதர்களது அரசியல் கட்சி அரசியலே தனித்துவமாக இயங்கிவருகிறது. யூதர்கள் பலஸ்தீன மக்களுக்கு செய்பவை எல்லாம் கொடுமைகள் என்பதை உணர்ந்த போது அவர்களது அரசியல் கலாசாரத்தை நிராகரிக்கவோ குறைத்து மதிப்பிடவோ கூடாது.

### பெர்னாண்டஸ் விவகாரம்

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சருக்கே அமெரிக்காவில் இந்த நிலையென்றால் சாதாரண பிரஜைகளை எப்படி அமெரிக்கா பார்க்கும் என்பது பிரதான கேள்வியாகும். ஆனால் பெர்னாண்டஸ் விவகாரம் விசேடமான தனித்தன்மை வாய்ந்த ஒரு விடயம். அவர் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும்போது அமெரிக்க எதிர்ப்புவாதத்தை அதிகம் கொண்டிருந்தவர் என்பதும் கவனிக்கத்தக்கது. ஆனாலும் அமெரிக்கர்கள் ஒரு அரசாங்கத்தின் உயர் பதவி வகிப்பவரை பரிசோதிப்பது என்பது இதுதான் முதல் தடவை என்பதல்ல. அவர்கள் இந்தியர்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதுதான் இங்கு முக்கியம். ஒரு அமெரிக்கர் கீழைத்தேச நாடுகளுக்கு வரும்போது கீழைத்தேச அரசுகள் கடைப்பிடிக்கும் ஏமாளித்தனமானதல்ல. அமெரிக்கரின் அணுகுமுறை அவர்கள் கீழைத்தேச ஆட்சியாளரையும், தீவிரவாதிகளையும் வேறுபடுத்திப்பார்ப்பதில்லை. எல்லோருமே ஒரே தரத்துடனே மதிப்பீடு செய்கின்றனர். இது கீழைத்தேச ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வதில்லை. மேற்குலக ஆட்சியாளர்கள் கீழைத்தேச தலைமைகளை பயன்படுத்துமளவுக்கும் பயன்படுத்திவிட்டு பின்னர் கைவிட்டு விடுவார்கள். சாதாரணமாகவே கீழைத்தேச மக்களை மூன்றாம் தர பிரஜைகளாகக் கருதுவதுபோன்றே தலைமைகளையும் அவர்கள் கருதுகின்றனர் என்று பெர்னாண்டஸ்சின் விடயமாவது உணர்த்துமாயின் சிறந்த மாறுதலை ஏற்படுத்தும். இந்த விடயத்தில் ஐரோப்பாவுக்குள் பிரித்தானியரும் அமெரிக்கரும் மிக இறுக்கமாகப்பின்பற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஜோர்ஜ் பெர் னாண்டஸ் விவகாரம் பாரதியஜனதாவின் ஆட்சிக் காலத்தின் போது ஏன் கிளரப்படவில்லை என்பது கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். அதனைத் தற்போதைய ஆட்சியாளர்கள் அரசியலாக்க முன்னர் பெர்னாண்டஸ் முந்திக்கொண்டது போலவும் அதனால் மாறுதல் ஏற்படும் என்பது போலவும் அவர் காட்டிக்கொள்ளத் தவறவில்லை. இது அமெரிக்கரின் அரசியலல என்பது றிச்சட் ஆர்மிரேஜ்சின் அவசர வருகை உணர்த்தியிருப்பதால் இந்தியாவுக்குள்ளேயுள்ள தலைமைகளிடமே இவ் அரசியல் உள்ளதென்பது புலனாகிறது.

எனவே ஆட்சியாளரின் அடிவருடித்தனத்தை மக்கள் கிளர்ந்தெழுந்து அழிக்கவேண்டும். அரசியலையும், அதன் தலைமையையும் மக்கள் தமக்குரியதாக ஆக்க வேண்டும். அதற்குத் தயாராகும் மக்கள் மட்டுமே தமது தனித்துவத்தையும், இனத்தையும் சுயாதிபத்தியத்தையும் பாதுகாப்பவர்களாக விளங்குவார்கள். மக்கள் தமது பண்பாடுகளை கலாசாரங்களையும் அடுத்த சந்ததிக்குக் கடத்துவது போன்று போராட்ட உணர்வையும் இயல்பையும் கடத்தவேண்டும். அடிமை வாழ்வை உடைத்தெறிந்து தனித்துவமான வாழ்வை கட்டியெழுப்ப வேண்டுமாயின் போராடவேண்டும். அப்போதுதான் மக்களை ஆட்சியாளரும், ஆதிக்க சக்திகளும் முதன்மைப்படுத்தும், முன்னிறுத்தும் பண்பு வளரும். அதுவே உலகாதிக்கத்துக்கு சரியான பதிலாக அமையும்.




**ஐங்கரன்**




# செல்பேசிகளுக்கான எரிபொருள் மின்கலம்...

புதிதாக செல்பேசிகளில் எரிபொருள்மின்கலம் 'Fuel cell' என்ற சக்தியாக்கி வருகின்றது.

இதுவரை செல்பேசிகளில் மீளேற்றி மின் கலங்களே பயன்படுகின்றன. இவற்றினால் மின்கலங்கள் மின் இறங்குகின்ற போதில் பயன்படுத்தமுடியாத நிலைமை இருக்கின்றது. இந்த வகையில் தொடர் செல்பேசி பயன்பாட்டிற்காக செல்பேசிகளில் எரிபொருள் மின்கலம் பயன்படுகின்றது.



Fuel Cell என அழைக்கப்படும். இது ஒருமின்பிறப்பாக்கி. ஒட்சிசன்,ஐதரசன் இருவாயுக்களையும் மின்கலங்களில் உள்ள அனோட், கதோட் இடையே நிகழ்த்தும் பாய்ச்சலினால் மின் பிறக்கின்றது. விண்கலங்களில் அமெரிக்கா எரிபொருள் மின்கலங்களையே ஆரம்பம் முதல் பயன்படுத்துகின்றது. இதனால் சூழல் மாசடைவு இல்லாமல் இருப்பதால் - ஊர்திகளில் எரிபொருள் மின்கலங்களை சக்தி பிறப்பாக்கிகளாகப் பயன்படுத்தும் ஆய்வுகள் நடக்கின்றன. ஆனால் யப்பான் முந்திக்கொண்டு செல்பேசியில் பயன்படுத்தப்படுகின்ற அளவுக்கு சிறிய எரிபொருள் மின்கலங்களை உற்பத்தி செய்துவிட்டது.

ஓரிரு ஆண்டுகளில் இந்த எரிபொருள் மின்கல செல்பேசிகள் பயன்பாட்டிற்கு வந்துவிடும். கடந்த வாரம் தொடக்கிவிட்டதன் விளக்கம் இது.

மீளவும் Broadcast Asia 2004 இற்கு செல்கிறோம். இப்பொழுது ஒளிபரப்பில் செய்கோள்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதே வேளை ஒலிபரப்பில் செய்கோள்களின் செல்வாக்கு அதிகரித்திருக்கிறதா? என்ற கேள்வி இருக்கின்றது.

இதற்கு இங்கு விடை கண்டோம். இப்பொழுது SPACE RADIO என்ற நிறுவனம் உலகளவில் செய்கோள் வானொலிகளை மக்கள் மயப்படுத்தி வருகின்றன. இதில் இப்பொழுது செய்கோள் வானொலி மிகச்சிறிய அளவில் நமது பணத்தில் 6000 ரூபா அளவுக்கு வந்துவிட்டது. இப்பொழுது KL என்ற ஒரு தமிழ் வானொலியும் செய்கோள் வழி உலகை ஆளத் தொடங்கிவிட்டது. இப்பொழுது ஐரோப்பிய அமெரிக்க வானொலிகளில் தமிழில் செய்கோள் வானொலிகள் இருக்கின்ற போதிலும் அது ஒரு செய்கோள் வழியாக மட்டும் பிராந்திய மட்டுப்பாட்டிற்குள் ஒலி பரப்புகளைச் செய்கின்றன.

பூமியின் மத்தியகோட்டிலிருந்து 36000 KM தொலைவில் மூன்று செய்கோள்களை 120 பாகை இடைவெளியில் நிறுத்தி பூமி முழுமையும் தொடர்பு படுத்தப்படுகின்றது. மூன்று செய்கோள்களும் தனித்தனியாக அவை நிற்கின்ற பிராந்தியப்பகுதியில் பாரிய பரப்பளவை ஆதிக்கம் செய்கின்றன. இப்படிப்பட்ட செய்கோள்களைக்கொண்டே பிராந்திய ரீதியாக ஒலி-ஒளிபரப்புகள் நடக்கின்றன. பி.பி.சி, CNN அல் - ஜசீரா போன்ற சில ஒளி-ஒலிபரப்புகளே முழுமையாக மூன்று செய்கோள்களைப் பயன்படுத்துகின்றன.

பிராந்திய மொழிகளின் ஒளி-ஒலிபரப்புகள் மூன்று செய்கோள்களையும் பயன்படுத்துவதில்லை. வானொலிகளும் அப்படியே.

இந்த நிலையில் SPACE RADIO என்ற நிறுவனம் உலகம் முழுமையிலும் கேட்கத்தக்கதாக வானொலி ஒலிபரப்புகளைச் செய்கின்றது. உலகம் பூராகவும் வாழும் பிராந்திய மொழிக்காரர்களுக்கு இது நல்ல ஒரு வரப்பிரசாதம் ஆகிவிட்டது.

இப்பொழுது இதனூடாக உலகம் முழுவதும் கேட்கத்தக்கதாக தமிழகத்தில் KL என்ற தமிழ் வானொலி வணிகத்துக்காக ஒலிக்கின்றது. SPACE RADIO இல் எவரும் வானொலியை ஒலிக்கவிடலாம். இதற்காக இந்த நிறுவனத்திற்கான செலவு ஆண்டுக்கு 70ஆயிரம் டொலர்கள் இது தொடர்பாக ஒரு இணைய நண்பர் கூறினார். உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்களுக்கு ஒரு செய்தியைச்சொல்ல இது மிக இலகுவான ஊடகம். மிக மலிவான, உலகம் முழுவதும் வாழும் மக்கள் கேட்கத்தக்கதான இந்த ஊடகம், பிராந்திய மொழிக்காரர்கள் அருகருகே இருப்பதற்கான ஊடகம். இந்த SPACE RADIO இப்பொழுதுள்ள கையடக்க வானொலிகள் அளவுக்கு செய்கோள் வானொலிகள் வந்துவிட்டன. உலகை இணையத்தளம் வழி தமிழ் வானொலிகள் உலகத்



தமிழரை இணைப்பது போல் கையடக்க நகரும் வானொலிகள் மூலம் SPACE RADIO வழியாகவும் இணைக்கப்பட வேண்டும் என அந்த இணைய நண்பர் எதிர்பார்க்கையை வெளியிட்டார்.

**த.அருவி**




01. இந்தவலி மார்பெலும்புக்குப் பின்புறம் அல்லது மார்பு முழுவதும் அல்லது முன்புறம் ஏற்படலாம்.

02. இந்த வலி பொதுவாகத் தாடைகளுக்கும் இடது கையின் கீழ்ப்புறமும், அல்லது வலதுகைக்கும், விரல்களுக்குள்ளும் பரவலாம்.

03 தொண்டை, தாடைகள், முதுகு, தோற்பட்டை எலும்புகளிடையில் அல்லது மேல் அடிவயிறு ஆகியவற்றிலும் வலி பரவுகிறது.

04 பாரம், எரிச்சல், நோவு, தசைச் சுருக்கம் போன்ற உணர்வுகள் ஏற்படலாம்.

## மாரடைப்பின் அறிகுறிகள்

05 உடல் உழைப்பின் போது, வலி உண்டாகலாம் அதனால் நோயாளி தான் செய்யும் வேலையை நிறுத்த நேரிடலாம்.

06 வயிறு புடைக்க உண்ட பிறகு அல்லது குளிர்ந்த காற்றுக்கு எதிராக நடந்த பிறகு வலி ஏற்படலாம்.

07 சூடான வாக்குவாதத்துக்கு அல்லது மனக்கிளர்ச்சிக்குப் பிறகு வலி உண்டாகலாம்.

08 இதயத்தின் ஒரு பகுதிககு இரத்தம் போதிய அளவில் செல்வது தற்காலிகமாகக் குறைவதால் நெஞ்சுவலி உண்டாகலாம். இந்த வலி 3-5 நிமிடக்களுக்கு மட்டுமே நீடிக்கிறது.

09 இதயத்துக்கு இரத்தம் செல்வது வெகுவாகக் குறைந்து நெஞ்சுத் தசையாழி (Myocardial Infarction) ஏற்படுவதன் காரணமாக உண்டாகும் வலி பொதுவாக பல மணி நேரம் நீடிக்கிறது.

## சிறுநீரகத்தில் கற்கள் எப்படி உண்டாகிறது

நாம் உண்ணும் உணவில் இருக்கும் புரதமானது செமிபாடடையப்பட்டு, உடலில் உறிஞ்சப்பட்ட பின் ஏற்படும் கழிவுகளின் யூரிக் ஆஸிட், பொஸ்பேட், அக்ஸலெட், சோடியம், கல்சியம், மக்னீசியம் போன்ற உப்புக்கள் கலந்திருக்கும். இதை சுத்தமாக்குவதற்கு சிறுநீரகத்தினுள் சென்று பிரிக்கப்படும் போது கல்சியம் பொஸ்பேட் மற்றும் அமோனியம் பொஸ்பேட் போன்றவை சிறுநீ மிகவும் அடர்த்தியாக இருக்கும் பட்சத்தில் சிறு கற்கள் போல படிந்துவிடுகிறது.

## சீரான பற்களைப் பெற என்ன செய்யவேண்டும்



பற்கள் சீராக அமையாத சூழ்நிலையில் 'கிளிப்' போட்டு சரி செய்யலாம். நல்ல சத்துணவு சாப்பிட்டு மகிழ்ச்சியுடனும், மன அமைதியுடனும் தாய் இருந்தால், பிறக்கும் குழந்தையும் ஆரோக்கியமாக இருக்கும். பற்களின் அமைப்பும் சீராக அமையும். குழந்தையின் பல் அமைப்புக்கு பாரம்பரியமும் ஒரு காரணம். பரிணாம வளர்ச்சியில் ஏற்படும் குறைகளும் பல் அமைப்பைப் பாதிக்கலாம். குழந்தையின் எதிர்கால முகஅமைப்பின் அழகை உத்தேசித்து, பற்களின் அமைப்பை ஆறு அல்லது ஏழு வயதிற்குள் முறைப்படுத்தி விடுவது நல்லது.

## வாயுத் தொல்லையா?


சிலருக்கு வயிற்றில் கடமுடா என்று காற்று வீசிக்கொண்டே இருக்கும். சாப்பிட்ட பின்னர் சில மணி நேரங்களுக்குள் வயிற்றில் இருந்து சத்தம் ஏற்படும். இது பக்கத்தில் நிற்பவர்களுக்குக் கூட கேட்கும். இதற்கு அதிகமாகச் சாப்பிடுவது அல்லது செரிமானக் கோளாறுகள் காரணமாக இருக்கலாம்.

சாப்பாட்டை நன்கு மென்று உண்ணாமல், உணவை வாயில் போட்டு உள்ளே தள்ளுபவர்களுக்கு இந்தப் பிரச்சினை ஏற்படும். இனிப்பு, புளிப்பு அல்லது பதப்படுத்தப்பட்ட உணவை உட்கொள்பவர்களுக்கு தொந்தரவு உருவாகும். இயற்கையான உணவை சாப்பிடுவது நல்லது. காலை உணவாகப் பழங்களையும் மதிய உணவாக வேகவைத்த காய்களையும் சாப்பிடலாம். சாப்பாட்டிற்கு முன்பு ஒரு பேணி வெந்நீரை அருந்துங்கள். அடிவயிற்றுக்கான உடற்பயிற்சி, நடப்பது ஆகியவை ஓரளவு சமாளிக்க உதவும்.

## கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவை குறைக்கவும், தவிர்க்கவும்

*இரத்தத்தில் உள்ள கொழுப்பானது திரண்டு இரத்தக்குழாய் அடைப்பு நோயை உண்டாக்குகிறது. கொழுப்புச் சத்து இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவை உயர்த்துகிறது. ஆகையால் இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவைக் குறைக்க, கொலஸ்ரோல் அதிகமுள்ள உணவுகளான முட்டையின் மஞ்சள் கரு, மீன்வகைகள், தேங்காய்எண்ணெய், கொழுப்புச் சத்து நிறைந்த பால் போன்றவற்றை தவிர்க்கவும்.*

### அடையாலம் தெரியேல்லை...



என்னப்பா ஆள் அடையாளமே தெரியாமல் மாறிற்றாய் - எங்க கனநாளாக் காணேல்ல.

உண்மையாவே - அப்ப இனி ஊருக்க நடமாடலாம். கடன்காறர் கண்டுபிடிக்க மாட்டினம்.

# சுயபொருளாதார வலுவுள்ளவர்களாக பெண்கள் அபிவிருத்தியடைய வேண்டும்

## பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் திட்டப்பணிப்பாளர் கமலாம்பாள்

*யுத்தம் எப்போதும் சிறுவர்களையும், பெண்களையும் தான் அதிக ஆபத்துக்கும் அவலத்திற்கும் உள்ளாகு வதுண்டு. எமது பிரதேசத்தில் இடைவிடாது தொடர்ந்த யுத்தத்தின் கோலத்தில் அதிகம் பெண்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.*

*ஆனால் இந்த அவலங்களுக்குள் பெண்கள் அள்ளுண்டு போகாமல் அவர்களை தங்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடியதாக அவர்களுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வரும் நிறுவனங் களில் முக்கியமாக பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது.*

*அந்தவகையில் பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் கமலாம்பாள் அவர்களை சந்தித்து அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக நாம் கேட்ட போது அவர் எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இவ்வார நேர்காணலாகும்.*

***பெண்கள் புனர்வாழ்வு என்ற அடிப்படையில் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் இதுவரையில் எவ்வாறான பாதிப்பிற்குள்ளான பெண்கள் இனங்காணப்பட்டுள்ளனர்?***

தமிழர் தாயகத்தில் தொடர்ந்து ஏற்பட்ட யுத்தம் காரணமாக பெண்களும் குழந்தைகளும் அதிக பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அவர்களை எடுத்துக்கொள்வோமாக இருந்தால் பெண்கள் தமது உறவினர்களை இழந்திருக்கின்றனர். இதைவிட குழந்தைகளை இழந்துள்ளனர், உடமைகளை இழந்துள்ளனர், இவற்றுடன் இவர்கள் உளப்பாதிப்பிற்குள்ளாகியும் உள்ளனர்.

உளப் பாதிப்பிற்கு உள்ளாகியவர்களுக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொண்டுள்ளோம். சமூகத்தால் பாதிக்கப்பட்ட அதாவது கணவர் இல்லாது, அவருக்கு தொழில் இல்லாது வாழ்க்கைச் செலவை கொண்டு நடத்த முடியாத நிலை, அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் தனது சொந்தக்காலில் தனித்து நிற்பதற்குத் தன்னும் சில வேளைகளில் பிழையான கண்ணோட்டத்துடன் அவர்களைப் பார்க்கின்றது. அவ்வாறானவர்களுக்கு நாங்கள் சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அவர்களுக்குரிய தொழில் அல்லது தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கின்றோம். பெண்கள் என்று சொன்னால் தமது சுய காலில் நிற்காமைதான் பெண்களை ஒரு சமூகம் குறைத்து மதிப்பிட முக்கிய காரணமாகும். திருமணமாவதற்கு முன் பெற்றோரில் தங்கி வாழ்கின்றமையும் திருமணமாகிய பின் கணவரின் கீழ் தங்கி வாழ்கின்றமைதான் இதற்கான பிரதான காரணமாகும்.

இவர்கள் எந்த ஒரு சிறு தேவைக்கும் இவ்வாறு அவர்களை நாடவேண்டிய ஒரு தேவை இருக்கிறது. இதனால் பெண்களுடைய கௌரவம் குறைத்து மதிக்கப்படுவதனால் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர். உண்மையில் பெண்கள் அபிவிருத்தி என்று பார்த்தால் ஒவ்வொரு பெண்ணும் தங்களுடைய காலில் சுயமாக சகல பொருளாதார வலுவுள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த வகையில் தான் எமது அபிவிருத்தியும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.


***முன்னர் போர்ப்பாதிப்பிற்குள்ளானவர்கள் என்று குறிப்பிட்டு இருந்தீர்கள் போர்ப் பாதிப்பு என்ற வகையில் அவற்றைக் கூற முடியுமா?***



போர்ப் பாதிப்பு என்ற வகையில் உளப் பாதிப்பிற்கு உள்ளாகிய மன நோயாளிகளாக உள்ள பெண்களின் நிலைபற்றிக் கூறுவோமாக இருந்தால் அவர்களை தெருவோரங்களிலும், பொது இடங்களிலும் உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் அவர்களை எடுத்துப் பராமரித்து வருகிறோம். அவர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் பல் வேறுபட்ட விதத்தில் உளபாதிப்பிற்குள்ளாகியுள்ளனர் அந்த வகையில் குடும்பங்களை இழந்தும், உறவினர்களை இழந்தும், சொத்துக்களை இழந்தும் அதன் தாக்கத்தினால் அதைப்பற்றி சிந்தித்து அதே சிந்தனையில் தொடர்ந்து இருந்து வருவதன் மூலம் இவ்வாறான பாதிப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

அந்த வகையிலே பாலாவியில் வசித்து வந்த ஒரு பெண் இராணுவத்தினரின் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டதனால் அவரது குடும்பம் அவரைக் கைவிட்ட நிலையில் பராமரிப்புகள் இன்றி அநாதரவாக திரிந்த அவரை எமது இல்லத்தில் இணைத்து இருக்கிறோம்.

இதைவிட தாய் விமானக் குண்டு வீச்சில் உடல் சிதறுண்டு கொல்லப்பட்ட பொழுது அந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு நின்றதினால், மூளை பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் எம்மிடம் உள்ளார்.



விமானக் குண்டு வீச்சு, எறிகணை வீச்சு என்பவற்றால் பாதிக்கப்பட்டும் சொத்துக்கள், வீடுகள் என்பவற்றை இழந்து மனப்பாதிப்பிற்கு உள்ளாகியவர்களும் என பல தரப்பட்ட வகையில் உடல் உள பாதிப் பிற்கு உட்பட்டவர்களைப் பராமரித்து வருகிறோம். இவற்றை விட தொடர் இடப்பெயர்வுகளால் முகாம்களில் அதாவது நலன்புரி நிலையங்களில் இருக்கின்றபொழுது சில ஆண்கள் பெண்களை திருமணம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் முதல் திருமணம் செய்தவராக இருந்தவர்கள் இவர்கள் சில பெண்களை ஏமாற்றிவிட்டுச் சென்றமை, சிலவேளை ஒரு குழந்தையுடன் தாயை கைவிட்டுச் சென்றமை. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களும் தொடர்ந்து இடப்பெயர்வுகள் மூலம் மூளை வளர்ச்சி குன்றியவர்கள் தமது உறவினர்களை கைவிட்ட நிலையில் அநாதரவான நிலையில் மேலும் உள நலப்பாதிப்பிற்கு உள்ளான நிலையில் காணப்பட்டவர்கள் என பலதரப்பட்டவர்களும் தொடர்ந்து ஏற்பட்ட யுத்தம் காரணமாக உறவினரைப் பிரிந்து யுத்தப் பாதிப்பிற்கு உள்ளான இளம் பெண்களையும் உள்வாங்கி அவர்களுக்கான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வருகின்றோம்.

***இவ்வாறு போரின் பாதிப்பின் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எவ்வாறான புனர்வாழ்வு நடவடிக்கைகளை எந்த வகையில் மேற் கொண்டு வருகின்றீர்கள்.***

பாதிக்கப்பட்ட பெண்கள் என்று குறிப்பிடுகையில் உள வளப்பாதிப்புக்கு உள்ளானவர்களை ஒன்று சேர்த்து வெற்றிமனை என்ற பராமரிப்பு நிலையத்திலும் அதே போல் ஆண்களால் ஏமாற்றப்பட்டு கைவிடப்பட்ட பெண்களுக்கு என்று சொல்லி மலர்ச்சோலை தாய் சேய் நலன் காப்பகம் என்ற ஒன்றையும் அடுத்து இளம் பெண்கள் பிற மாவட்டங்களில் இருந்து உறவினர்களைப் பிரிந்து பராமரிப்பவர்கள் இன்றிக் காணப்பட்ட பெண்களை பராமரிப்பதற்கென மேரி இல்லம் என்ற பராமரிப்பு நிலையத்தையும் மூளை வளர்ச்சி குன்றிய பெண்களுக்கு நிறைமதி இல்லம் என்ற பராமரிப்பு இல்லத்தினையும் அதே நேரம் யுத்தத்தினால் தாய் தந்தையரை இழந்த இளம் குழந்தைகள் அல்லது தகப்பனை இழந்து கல்வி கற்கமுடியாது இருந்த குழந்தைகள் போன்றோரை ஒன்று சேர்த்து செந்தளிர் சிறுவர் இல்லம் என்ற ஒரு இல்லத்தினை முல்லைத்தீவில் அமைத்து அதன் மூலம் யுத்தப் பாதிப்பிற்கு உள்ளாகிப் பெரும் கஷ்ரப்பட்ட சிறார்களை உள்வாங்கி அவர்களுக்கான கல்வி சுகாதாரம் அடிப்படை

**நேர்காணல்**
**சு.பிரபா**

வசதி என்பவற்றை உரிய முறையில் செய்து கொடுத்து அவர்களை உரிய முறையில் பராமரித்து வருகின்றோம்.

இவற்றைவிட குடும்பத் தலைவர்களை இழந்த இராணுவத்தினால் கணவன்மார் கொல்லப்பட்டும் கணவனைப் பிரிந்து இருக்கிற பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை என்ற வகையில் அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை வழங்கி வருமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுதல், இவர்களது குழந்தைகளின் கல்வி ஊக்குவிப்பு என்ற அடிப்படையில் மாலை நேரக் கல்வியினை வழங்கிவருகின்றோம். அத்தோடு கற்றல் உபகரணங்கள் போக்குவரத்து வசதிகள் செய்து வருகிறோம்.

***இவ்வாறான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற பொழுது இதற்கான நிதி ஒதுக்கீடுகள் எங்கிருந்து கிடைக்கப் பெறுகின்றன.?***

எங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் என்று குறிப்பிடுகையில் கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் என்று சொன்னால் சில சர்வதேச நிறுவனங்களின் நிதிமூலம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களினுடைய நிதியுதவியுடன் சிலவேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றோம். வேறு ஒரு சிலவேலைத் திட்டங்கள். வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் நிதியுதவியுடன் எங்களுடைய பெரிய அளவிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அடுத்து உழைப்பாளரை இழந்த பெண்களுக்கு என்று சொல்லி தொழில்சார் பயிற்சிகளை வழங்க பயிற்சிக் கல்லூரி ஒன்றினை அமைத்துள்ளோம். அந்தக் கல்லூரி மூலம் மரவேலை, மேசன் வேலை, இலத்திரனியல், தட்டச்சுப் பயிற்சி போன்ற பயிற்சிகளை நோர்வே அபிவிருத்தி நிதியத்தின் நிதிமூலம் மேற்கொண்டு வருகின்றோம். இவற்றுடன் தையல் பயிற்சி, பூவேலை என்பன எமது அதாவது, பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகின்றோம். இவற்றைவிடக் கிராமங்களில் நாங்கள் செய்து வருகின்ற வருமான அதிகரிப்புத் திட்டங்கள் மூலம் பல பெண்கள் பயனடைந்துள்ளனர். இதுவரை யில் 10000 இற்கு மேற்பட்ட பெண்கள் கிராமங்களில் பயனடைந்துள்ளனர். அவர்கள் இன்று கிராமங்களில் தமது வாழ்க்கைத் தேவைக்கு ஏற்ப வருமானத்தை ஈட்டக்கூடிய அளவிற்கு பயனடைந்துள்ளனர்.

***தமிழர் தாயகத்தில் பெண்கள் அபிவிருத்தி என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் எவ்வாறான திட்டங்களை மேற் கொள்ளவுள்ளீர்கள்?***

கூடுதலாக மிகவும் பின் தங்கிய பிரதேசங்களில் கட்டாயம் பெண்களை பாடசாலைகளுக்கு விடாமல் இருந்து வந்துள்ளார்கள். கட்டாயம் பெண்கள் படிக்கவேண்டும் என்ற வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அது தொடர்பான வேலைகளையும் அந்தக் கிராமத்திற்கு பெண்களுக்குரிய தொழிற் பயிற்சிகளை வழங்குதல் அவர்கள் இடையில் இடை விலகியவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குதல் தொடர்ந்து தொடர்ச்சியாக பின்தங்கிய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இடங்களிலும் தொடர் பயிற்சிகளை வழங்கவுள்ளோம். அத்தோடு அவர்களுக்குரிய தொழில் வாய்ப்பையும் அதற்கான நிதியுதவியினையும் செய்து அதன் மூலம் அவர்களை அபிவிருத்திப்பாதைக்கு இட்டுச் செல்லவுள்ளோம். கிராமங்களில் சிறுவர் உரிமை தொடர்பாக அதற்குரிய நிறுவனங்களுடன் இணைத்து பயிற்சிகளை வழங்குதல் பெண்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் இத்திட்டங்கள் தற்பொழுதும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

# அரசியல் துறவிகளின் கத்துக் குட்டித் தனம்

**பு.சத்தியமூர்த்தி**



தன்னைக் கொல்ல வந்தவனையே மன்னித்தவர் கௌதமபுத்தர். பெரும்போர் புரிந்து கலிங்கத்தை வென்றிருந்த நிலையில், யுத்தமன நிலையிலிருந்து அசோகச் சக்கரவர்த்தியை மீட்டெடுத்துத் தர்மோபதேசம் செய்தவர் அந்த மகான். அவரின் பெயரால் அவர் போதித்த தத்துவங்களின் பேறான பௌத்த மதத்தின் பெயரால் சமூகத்தில் அதிகாரம் செலுத்தும் பௌத்த பிட்சுகளின் போக்கினால் கௌதம புத்தரே கதறியழக்கூடிய சூழல் சிறிலங்காவிலே சம்பவித்திருக்கிறது.

விகாரைகளிலிருந்து தர்மோபதேசங்கள் மூலம் பஞ்ச சீலத்தைப் பரிபாலிக்கவேண்டிய பிட்சுக்கள், சிங்கள சிறிலங்காவிலே இன்று செய்வது என்ன? காவியுடை என்ற கவசத்தைப் போர்த்தியபடி அவர்கள் புரியும் கைங்கரியங்கள், மத குருக்கள் புரியக்கூடியனவாக இல்லை. இவ்வாறு சுட்டப்படுவோர் இன்று சிங்கள அதி தேசியவாத அரசியலிற் குதித்துள்ள பிக்குகளே. சிறிலங்காவின் அரசியற்களத்தில் பிட்சுகளின் ஈடுபாடும், செல்வாக்கும் காலாதி காலமாக நீடித்து வருவது வெளிப்படையானதெனினும், தற்போதைய காலப் பகுதியில் நிகழ்ந்திருப்பது போலவே பிட்சுகளின் நேரடி அரசியற் பிரவேசம் என்பது எப்போதுமே இந்திருக்கவில்லை. இதன் விளைவாக பிட்சுகள் **'King makers'** என்ற நிலையிலிருந்து கீழிறங்கி 'அரசியல் வாதிகள்' ஏனும் கட்டத்தை அடைந்திருக்கிறார்கள்.

இந்தப் பிட்சு அரசியல் வாதிகள் சாதாரண அரசியல்வாதிகளே அஞ்சி நடுங்கக்கூடியளவுக்கு அறிக்கை விடுவதில், தீவிரமாகப் பேசுவதில் நிபுணத்துவம் பெற்று விளங்குகின்றனர்.



''தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத் தலைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர காலச் சட்டத்தை அரசாங்கம் உடனடியாகப் பிரகடனப்படுத்த வேண்டும்''

இவ்வாறு தெரிவித்திருப்பது ஜே.வி.பி.யினரோ ஆயுதப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகளோ அல்ல. ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான எல்லாவெல மேதானந்த தேரர் ஆவார்.

ஐயா, மனித உயிர்களுக்கு எவ்வித பெறுமதியுமே இல்லை எனும் நிலையை இலங்கைத் தீவில் உருவாக்கியதல்லவா இந்த அவசரகாலச் சட்டம்? நாட்டின் ஆயுதப்படைகளின் கைகளில் அனைத்து அதிகாரங்களையும் தூக்கிக் கொடுத்துவிடுவதல்லவா அவசர காலச்சட்டம்? ஒரு நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கிறதென்பதன் அர்த்தமே அந் நாட்டில் இயல்பு நிலை இல்லை என்பதல்லவா? அப்படியாயின் ஜாதிக ஹெல உறுமய நாட்டில் இயல்பற்றதொரு சூழல் நிலவ வேண்டுமென விரும்புகிறதா?

25 வருடங்களாகத் தொடர்ந்தும் அமுலிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டுமென பல மட்டங்களிலும் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்ற சூழலில், அவசரகாலச் சட்டத்தையும் பிரகடனப்படுத்தும்படி கேட்பது எவ்வளவு குரூரமானது? இதனைத் துறவறம் பூண்ட மதகுருக்கள் தெரிவிப்பதென்பது இன்னமும் சகிக்க முடியாததாக உள்ளதல்லவா?

இலங்கைத்தீவின் சுபீட்ச வாழ்வுக்கு போர் முற்றாக நிறுத்தப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படல் வேண்டுமென்பது உலகம் முழுவதுமே ஏற்றுக் கொண்டுவிட்ட விடயம். இவ்வாறான சமாதானத்துக்கு இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளை நீக்குவதற்கான அரசியற்தீர்வொன்று முன்வைக்கப்படுதல் அவசியம். அந்தத் தீர்வினைக் கண்டறியும், சென்றடையும் நீண்ட அரசியல் வேலைத்திட்டம் அதிககாலத்தை விழுங்கக் கூடியதென்பதால் யுத்தத்தால் மிகக்கடுமையாகப் பாதிக்கபட்டு அல்லலுறும் தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரு இடைக்கால நிர்வாகம் அவசியமானதாகும். இந்த இடைக் கால நிர்வாகத்தைவழங்குதல்' என்பதே இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களின் இன்றைய சூழல் மையமாகியுள்ள நிலையில் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்திருக்கும் கருத்தைக் கூர்ந்து கவனியுங்கள்.

ஐ.தே. முன்னணி அரசினால் புலிகளிடம் அர்ப்பணிப்புச் செய்ய முடியாமற் போன இடைக்கால நிர்வாக அதிகார சபையினை தற்போதைய அரசு தாம்பாளத்தில் வைத்து வழங்க ஆயத்தமாக இருப்பது சனாதிபதியின் அண்மைய உரையில் உறுதியாகத் தெரிகிறது. அவ்வாறு அரசு தயாராக இருக்குமானால் இனத்தின் காவலர்களான மகாசங்கத்தினர் உயிரைப் பணயம் வைத்தாவது அரசின் சதியை தோற்கடிக்க வேண்டும்"

உங்கள் கண்களில் முன்னே கலிங்கப்போர் களத்தில் அசோகச்சக்கரவர்த்திக்கு தர்மோபதேசம் செய்யும் கௌதம புத்தர் தெரிகிறாரா வாசகர்களே? உண்மையில் கௌதம புத்தரின் இடத்தில் எல்லாவெல மேதானந்த தேரர் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்று சிந்திக்கிறீர்களா?

இடைக்கால நிர்வாக சபை என்ற துருப்பு சீட்டைப் பற்றிக்கொண்டு இந்த சிங்கள அதி தீவிரவாதசக்திகள் தொங்குமாக இருந்தால் ஒருவேளை சமாதானப் பேச்சுக்கள் முன்னகர முடியாமற் போகுமானால் இலங்கைத்தீவுக்கு என்ன நடக்கும்? யுத்தத்தை நோக்கி நாடு 'பையப் பையப்' பயணிப்பது தவிர்க்க முடியாததாகிவிடக் கூடுமல்லவா? மறுவளமாக வெளிநாடுகளின் நிதி உதவியையே நாட்டின் மீண்டெழும் செலவுகளைச் சமாளிக்கக்கூட நம்பியிருக்க வேண்டிய அளவுக்கு கேவலமாகிவிட்ட சிறிலங்காவின் பொருளாதாரத்துக்கு என்ன நடக்கும்? வாழ்க்கைச்செலவு உயர்வு, தொழில்வாய்ப்பின்மை, இழப்புகள், அழிவுகள் இவ்வளவையும் தாங்கப்போவது யார்? நாங்கள் என்ன சொல்கிறோம்? அதன் பின் விளைவுகள் என்ன? என்பது குறித்து இந்த பிக்குகளுக்கு .பிரக்ஞை எந்தளவுக்கு இருக்கிறது.

துன்புறும் மக்களை அதிலிருந்து மீட்டெடுப்பது ஒரு துறவியின் பண்பா? அல்லது துன்பப்படுபவனை மேலும் வதைப்பதுடன், வதைப்பவனுக்கும் மேலதிகமான ஆதரவை சம்பாதித்துக்கொடுப்பது ஒரு மதகுருவுக்குரிய செயலா? இது தென்னிலங்கையின் அதிதீவிர பௌத்த சிங்களவர்களின் சிந்தனைக்குச் சமர்ப்பணம்.

JHU ன் தலைவர் இப்படிச் சொல்கிறாரென்றால், அதன் செயலாளர் என்ன சொல்கிறார் பாருங்கள்!

"விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுக்களின் பின்னால் மறைந்து கொண்டு அவர்களது பொலிஸ் நிலையங்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைத்துவருவது குறித்து அரசாங்கம் மௌனமாக இருப்பது, அரசு மீதான சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் கவலையையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.''

எப்படியிருக்கிறது உடுவே தம்மாலோக தேரரது கூற்று? இவ்வளவு மலினமாகப் பேசி சிங்களத் தேசியவாதிகளை வெறியூட்டி அரசியல் செய்யத்தானா வேண்டும்? அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் புலிகள் ஒரு பொலிஸ் நிலையத்தை அமைப்பதென்பது யதார்த்தமானதா? போர் நிறுத்த ஒப்பந்தமும் கண்காணிப்புக்குழுவும் அதனை அனுமதிக்குமா? வெறிகொண்டலையும் சிங்களப்படைகளும் படைப்புலனாய்வுச் சேவைகளும் புளியங்காய் பறித்துக்கொண்டா இருப்பார்கள்? பகுத்தறிவுக்குச் சம்பந்தமில்லாது பேசும் இவர்களை என்னவென்று சொல்வது?

உடுவே தம்மாலோக தேரர் அத்தோடு சும்மா இருந்துவிடவில்லை. இன்னுமொரு அறிக்கையையும் விடுக்கிறார் பாருங்கள்:

''தமிழீழ விடுதலைப் புலிகளிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். கருணா ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கி இராணுவத்தினருக்கு எதிராகப் போராடிய போதிலும் தற்போது ஆயுதங்களைக்கைவிட்டு சனநாயக வழிமுறையில் கிழக்கை ஆட்சிசெய்ய விரும்புகிறார். நாட்டின் நலனைக்கருத்திற் கொண்டு இந்த விடயத்தில் கருணாவிற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படவேண்டும்.''

இவ்வாறு உதவிகள் வழங்குவதனூடாக தமிழ் மக்களின் போராட்டச் சக்தியை நலிவடையச் செய்யவேண்டுமென்னும் குரூரம் தொனிக்கிறதல்லவா இந்த பிட்சு அரசியல்வாதியின் உரையில்? அதாவது எந்த அறநெறிக்கும் உட்பட்டுச் சிந்திக்கவேண்டும், பேசவேண்டும், நடக்கவேண்டுமென்றும் கருத்துநிலையிலேயே இந்த தர்மோபதேசம் செய்யும் 'துறவிகள்' இல்லையென்பதே இங்கு கவனிக்கப்படவேண்டியது.

இவர்களே யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற ஆனந்த சங்கரிக்குத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவி வழங்க முன்வந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளையும் ஒரே தளத்துக்குக் கொண்டுவந்து ஒப்புநோக்குங்கள். துலாம்பரமாகத் தெரிவது என்ன? ஒன்றுபட்டதமிழ் மக்களின் சக்தியென்பதை இந்தத்துறவி அரசியல்வாதிகள் சகித்துக்கொள்ள முடியாமலிருக்கிறார்கள் என்பதே அல்லவா?

ஒரு சமூகத்துக்கு வழிகாட்டுவதென்பது இன்னொரு சமூகத்தை அழிப்பதற்கான பாதையில் அவர்களை இறக்கிவிடுதல் என்பதல்ல. ஆரோக்கிமான வழியில் சிந்திக்கத் தூண்டி அடுத்த சமூகத்தின் மன உணர்வுகளை, தேவைகளைப் புரிந்துகொள்ளும்படி தூண்டுவதாகும். 'உன்னைப்போல் உன் அயலவரையும் நேசி' என்றார் ஒரு மகான். உண்மையில் ஒரு துறவி தன் மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய செய்தி இதுதான்.\ இந்தப் பாதையில் தென்னிலங்கையின் பௌத்த விகாரைகளில் உறையும் பிட்சுகள் பயணித்திருந்தால் இலங்கைத்தீவு இன்றைய அவலத்தைச் சந்திக்க நேர்ந்திருக்காதல்லவா? அதோடு ஹிங்குராங் கொட புபுல விகாரையில் 14 ஆயுதபாணிகள் கரந்துறைந்திருக்கவும் முடியாதல்லவா?

அல்லைப்பிட்டிச்சந்தியில் சிங்களப்படையினரால் கேடயமாகக் கொண்டுவரப்பட்ட மக்கள் ஒன்றாக்கப்பட்டனர். அவர்களை அங்குவைத்து விடுவிப்பதான பாவனையில் அது நிகழ்ந்தது. ஆனால் உண்மையில் என்ன நிகழ்ந்தது?

எல்லாரையும் திரட்டியபடையினர் மூவர் - மூவராக கைகோர்த்துச் செல்லுமாறு பணிக்கப்பட்டனர். அவர்களும் ஏதோ தம்மை விடுவிக்கத்தான் இப்படிச் செய்கிறார்கள் என நினைத்தபடி - கைகோர்த்தபடி தேவாலயம் நோக்கி நகர்ந்தனர்.

அங்கு தேவாலயத்துக்கு அண்மையாக படையினர் பற்றைகளுள் பதுங்கியிருந்தனர். சுடுகலன்கள் இல்லாமல் கத்திகள் - பொல்லுகள், அலவாங்குகள் சகிதம் அவர்கள் பதுங்கியிருந்தனர்.

தேவாலயத்துள் தஞ்சமடைந்திருந்த மக்கள் வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

தாம் விடுதலை செய்யப்படுகிறோம் என்ற நிலையில் திரும்பியவர்கள் மீது பற்றைகளுள் பதுங்கியிருந்த படையினர் பாய்ந்து தாக்கி - அவர்களைப் படுகாயப்படுத்தினர் மிருகத்தனமாக சிங்களப் படைகளால் அவர்கள் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலில் அவர்கள் கடும் காயங்களுக்குட்பட்டனர்.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 06



இதன் பின் மீளவும் படையினர் - மக்களை ஒன்று திரட்டினர். மீளவும் ஒரு தெரிதல்.

திடகாத்திரமான இளைஞர்கள் 25பேர்வரை தனியாக்கப்பட்டனர். அவர்களை பொருட்களையிறக்கிவிட்டுத் திருப்பிஅனுப்புவதற்காகக் கூறி அவர்களைப் படைகள் கொண்டு சென்றுவிட்டன. ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். இந்த 25பேரும் கடைசிவரை திரும்பவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. ஆனால் அங்கு நடந்ததாக கருதப்படும் சம்பவம் ஒன்று பின்னர் வெளிப்பட்டது. அல்லைப்பிட்டியில் மக்கள் விடுவிக்கப்பட்டபின்பும் அல்லைப்பிட்டி அலுமினிய ஆலையில் மக்களில் ஒரு பகுதியினர் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் கடைசியிலேயே விடுவிக்கப்பட்டனர்

இதற்கிடையில் மண்டைதீவுப்பகுதியில் நிலைகொண்டிருந்த போராளிகளுக்கும் சிங்களப்படைகளுக்கும் இடையே கடும்மோதல் ஒன்று நிகழ்ந்தது. இந்த கடும்மோதலில் 46 போராளிகள் வீரச்சாவைத் தழுவினர். போராளிகள் வீரச்சாவைத்தழுவிய அந்தத் தாக்குதலுடன் படையினரால் பிடித்துச்செல்லப்பட்ட மக்களும் பலியெடுக்கப்பட்டனர். அந்தப் படுகொலைகளுக்கு சாட்சியாக எவரும் இருக்கவில்லை. ஆனால் பின்னர் எடுக்கப்பட்ட சிதைவுகளே கொல்லப்பட்டோரின் எண்ணிக்கையை உறுதிசெய்தது.

2ஆம் நாளின் முடிவில் ஏறக்குறைய சிங்களப்படைகளின் திருவிளையாடல் முடிவுக்கு வந்து விட்டது. சிங்களப்படைகள் அணி முழுமையாக மண்டைதீவை ஆக்கிரமித்துவிட்டன. அதன்பின் ஊர் காவற்துறை முதல் அல்லைப்பிட்டிவரையான பகுதிகள் விடுவிக்கப்பட்டன. ஒருபகுதிப்படைகள் ஊர்காவற்துறையின் பின்பகுதிக்கு சென்றுவிட்டன. மண்டைதீவு படைகள் கடல்வழியாக தமது வழங்களை வைத்துக் கொண்டன.

தீவக மக்களுக்கான பாதை அதாவது அராலித்துறை வழிப்பாதை மீளவும் திறக்கப்பட்டது. அன்றுடன் தீவகம் வெறிச்சோடியது. ஒரு லட்சத்துக்கும் அதிகமக்கள் வாழ்ந்திருந்த தீவகத்தின் 90 விழுக்காடு தொகை சாரிசாரியாக ஓரிருநாட்களுக்குள்ளேயே வெளியேறத் தொடங்கிவிட்டனர். இரவுவேளை ஏரிக்கடலை சிங்களப்படையின் பராவெளிச்சம் - உலங்குவானூர்தி தேடுவெளிச்சத் தாக்குதலுக்கு மத்தியில் தோணிகள் வழியாகவும் - கடலை நடந்தும் கடந்தும் வெளியேறிக்கொண்டிருந்தனர். அதிலும் சிங்களப்படைகளால் பிடிக்கப்பட்ட தம் உறவுகளின் நிலை என்னவென்பது அறியாமலும் - கொல்லப்பட்ட உறவுகளின் உடல்களை அவசர அவசரமாக தகனம் - அடக்கம் செய்துவிட்டு - 2ஆம் ஈழப்போரின் அவலம் மிகுந்த யாழ்ப்பாணத்தின் முதல் இடப்பெயர்வு நடந்தது.

2ஆம் ஈழப்போரில் முதல் இடப்பெயர்வு தென்தமிழீழத்திலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களை கால்நடையாகவும் கடல்கடந்தும் நடந்தது.

2ஆம் ஈழப்போர்ரில் இது யாழ்ப்பாணத்தின் முதல்பெரும் இடப்பெயர்வு இதற்கிடையில் ஒரு சுவாரஸ்யமான தப்பித்தல். அல்லைப்பிட்டி அலுமினிய ஆலையில் நடந்தது.

அங்கு இருந்தவர்களில் பாடசாலை அதிபரும் ஒருவர் . இரவு நேரம் அங்கிருந்து தப்ப அவர் திட்டமிட்டார். இரவு - சிறுநீரகழிக்கவென வெளியேறினார். அவர் அப்படியே பதுங்கிப் பதுங்கி நடந்தார். உட்புற தரவைவெளிலிருந்து பிரதான வீதிக்குவர படையினர் கண்டுவிட்டனர். படையினர் குரலெழுப்ப உடனடியாக தரையில் வீழ்ந்த அவர், படையினரின் தேடல் தணியும்வரை காத்திருந்தார். அதன்பின் பிரதட்டைசெய்து கடற்கரை நோக்கி நகர்ந்தார். சுமார் 500 மீற்றர் பிரதட்டை செய்து அவர் நகர்ந்தார். ஒருவாறு பிரதட்டைமூலம் கடலை அடைந்த அவர், யாழ்ப்பாணம் நோக்கி கடலில் நடக்கத் தொடங்கினார். நீச்சல் அனுபவம் சிறிதும் இல்லாத அவர் கடலில் களங்கட்டித் தடிகளை பிடித்தவாறு நடக்கத்தொடங்கி - நாவாந்துறையை வந்தடைந்தார்

துருவன்

---

தொல்லியல்

# ஆனைக்கோட்டை மனிதனும் சிந்து வெளி எழுத்தும்

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எலும்புக் கூடுகள் சிந்து வெளிக்கால வரி வடிவ எழுத்து முத்திரை என்பன யாழ் ஆனைக் கோட்டையில் எடுக் கப்பட்டன. 1980 இல் எடுக்கப்பட்ட இவைபற்றிய அறி முகத்தை இங்கு தருகிறேன்.

யாழ்ப்பாண நகருக்கு மேற்காக உள்ள வட்டுக்கோட்டைக்கான கல்லுண்டாய் வெளிக்கான வீதியில் உள்ள காக்கைதீவுக்கு அண்மையாக உள்ள ஆனைக்கோட்டை வெளியின் மண்கும்பல்கள் எம் மூதாதைகளின் வாழ்வின் சுவடுகளை கொண்டவை. இங்கு 2000முதல் 3000வரையான ஆண்டு காலத்திற்கான மனித மூதாதைகளின் பயன்பாட்டு மட்பாண்டங்கள் உள்ளன. 1980இல் இது கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு இருந்த மணற்கும்பம் ஒன்றில் மணல் ஏற்றிய போது அடக்க மையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ஈம அடக்கம் தொல்லியலாளர் முனைவர் பொ.ரகுபதியால் அகழாய்வு செய்யப்பட்டது. இதன்போது அடக்கம் செய்யப்பட்ட நிலையில் இரு எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. இவற்றுடன் அக்கால அடக்க முறைக்குரிய மண்பானைகள், சிப்பிகள், - நண்டுக்கோதுகள், ஆமைஓடுகள், விலங்கு எலும்புகள், என்பன உணவு எச்சங்களாக எடுக்கப்பட்டன. 2 எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. 3 அடி ஆழத்தில் நீளக்கிடத்திய நிலையில் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. இவற்றுடன் மிகச்சிறப்பான எழுத்துகளை கொண்ட முத்திரை ஒன்றும் எடுக்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்தின் மிகத்தொன்மையான எழுத்துவரிவடிவமாகும். இதில் இருந்த எழுத்துக்கள் கோவேத என வாசிக்கப்பட்டது.



(எழுத்து முத்திரை)

இதுபற்றி இந்திய அரசின் தொல் எழுத்து ஆய்வாளரான முனைவர் - R.V.ரமேஸ் - எழுதிய ஆய்வில் - இது சிந்து வெளி நாகரிக எழுத்து வரிவடிவத்தின் ஒத்தவடிவம் எனக்குறிப்பிட்டார். இது ஈழத்தில் தமிழனின் தொன்மைவாழ்வை வெளிச்சத்துககு கொண்டு வந்த சான்றாக அப்போது வர்ணிக்கப்பட்டது.

1980இல் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் எழுத்துமுத்திரை என்பன காலக்கணிப்புக்குட்படுத்தப்படவே இல்லை. ஆயினும் ஒப்பீட்டு காலக்கணிப்புப்படி அவை 2500 ஆண்டுகள் தொன்மையானவை என தென்னாசியாவின் முதன்மை தொல்லியலாளரான - சிறிலங்காவின் தொல்லியல் திணைக்கள முன்னாள் ஆணையாளர் முனைவர் எஸ்.யு. தெரணியகலை குறிப்பிடுகின்றார்.

(படங்கள்:- கிருஸ்ணா. ரகுபதி)



இந்த எலும்புக் கூடுகளுக்கும் - எழுத்து முத்திரைக்கும் நிகழ்ந்த பரிதாபக்கதையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இந்த எலும்புக்கூடுகளுக்கும், எழுத்துமுத்திரையும் இவற்றுடன் எடுக்கப்பட்ட சான்றுகளும் யாழ் பல் கலைக்கழகத்தில் வைக்கப் பட்டிருந்தன. 1987இல் இந்திய இராணுவம் தழிழர் தாயகத்தில் மேற்கொண்ட போரின்போது - யாழ்.பல்கலைக்கழகத்துள் நுழைந்து அழிப்புக்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது. இரு எலும்புக் கூடுகளையும் - சான்றுகளையும் கூட இந்தியபடைகள் அழித்து விட்டன. எழுத்துமுத்திரை பேராசிரியர் ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்டு- தஞ்சைப் பல்கலைக் கழகத்திடம் கையளிக்கப்பட்டதாவும் - இப்பொழுது அதன் தொல்லியல் கலைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.



அது உண்மையில் யாழ்ப்பாண மனித வாழ்வின் மிகுந்த தொன்மைச்சான்று. தமிழன் இலங்கையில் சோழருடன் வந்த குடி என்ற சிங்கள இனவாதிகளின் பரப்புரையை முறியடிக்க கிடைத்த அரும்பெரும் சான்று.

பொறுப்பற்ற தன்மையால் அவை இழக்கப் பட்டது ஒரு பரிதாபம் தான்.

எமது தொல்பொருள்களுக்கு வெளிநாட்டில் இருக்கும் மதிப்பு என்ன என்பதை ஆனைக்கோட்டை மனிதனும்- எழுத்து முத்திரையும் நிரூபித்துள்ளன.

குரலோன்

---


## யார் சமைப்பது...



*மாமா:-* மருமோன் - பிள்ளைக்கு உந்தசமையலப்பற்றி அப்பிடியிப் பிடியெல்லாம் அதிகம் தெரியாது.


*மருமகன்:-* அப்பிடியெண்டால்.

*மாமா:-* நீங்கள் எப்பிடிச் சமைச்சாலும் அவள் சாப்பிடுவாள்.




# கூடுதிரும்ப முடியாக் குருவிகள்





மா.தீபன்

அன்று ஞாயிற்றுக்கிழமை கண்ணனுக்கு அது விடுமுறை நாள். விடுமுறை நாளென்றும் பார்க்காமல் காலையில் வேளைக்கு எழுந்து வேலைகளை முடித்துவிட்டு தொலைபேசிக்கருகிலேயே உட்கார்ந்திருந்தான் கண்ணன்.

கடந்த இரண்டு நாட்களாக தொலைபேசி அழைப்பொன்றை எதிர்பார்த்திருந்தான் கண்ணன். அழைப்பு வரவில்லை. இன்று விடுமுறை நாளென்பதால் கண்டிப்பாக சாந்தன் தொடர்பெடுப்பான் என்று தெரியும். அதுதான் ஆவலோடு அதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். நேரஞ் செல்லச் செல்ல அழைப்பு வராததால் அவனது மனம் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தது. எழுந்து செல்வதும் பின்னர் திரும்பி வந்துஉட்கார்வதுமாக இருந்தான். தனது மன நிலையை நினைக்க கண்ணனுக்கு பள்ளிக் கூடத்தில தமிழ் வாத்தியார் நளவெண்பா படிப்பித்தது நினைவுக்கு வந்தது.

கண்ணனுக்கு தமிழ் படிப்பித்தது கந்தசாமி வாத்தியார். அவரின்ர வகுப்பெண்டால் அவனுக்கு சரியான விருப்பம் மிகவும் அழகாகவும், நகைச்சுவையாகவும் பாடம் நடத்துவார். அவர் நளவெண்பா படிப்பிக்கேக்க நளன் அன்னத்தை தூது விட்ட பின்னர் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்ததை அழகாகச் சொல்லி விளங்கப் படுத்துவார். தன்ர இப்போதைய நிலையை அதோடு ஒப்பிட்டுப்பார்க்க கண்ணனுக்கு சிரிப்பு வந்தது.

ஒருகிழமைக்கு முன்னர் தான் சாந்தன் ஊருக்குப் போயிருந்தான் போன உடனே தொடர்பெடுப்பதாய் சொன்னவன் கொழும்பில நிண்டு கதைக்கேக்க சொன்னவன் ஊருக்குபோன உடனே தொடர்பெடுக்கிறதாய் இன்னும் எடுக்கேல என்ன பிரச்சினையோ தெரியாது. தனக்குள்ளே எண்ணிக் கொண்டான் கண்ணன்.

கண்ணன் யாழ்ப்பாணம் வலிகாமத்தைச் சேர்ந்தவன் சாந்தனும் அந்த இடம் தான். ஒரே ஊர் ஒரே வயது என்பதால் இருவருக்குமான நட்பு சின்ன வயதிலிருந்தே தொடங்கி விட்டது. இரண்டு பேருமே வகுப்பில ஒண்டாத்தான் படித்தார்கள். இருவருமே படிப்பில கெட்டிக்காரர்கள். வகுப்பில இரண்டு பேருக்கும் தான் போட்டி எண்டாலும் கண்ணன் விட மாட்டான். அவன்தான் முதலாம் பிள்ளையாக வருவான் அடுத்ததாகத்தான் சாந்தன் வருவான்.

படிப்பை மாதிரி விளையாட்டிலும் இருவரும் சலைத்தவர்களல்ல. இல்ல விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு பேருமே நிறைய நிறைய பரிசுகள் வாங்கியிருக்கினம். பங்கு கொள்ளும் விளையாட்டுக்களில் பல தடவைகள் இருவருமே முதலிரண்டு இடத்தை பெறுவார்கள். பள்ளிக்கூடத்தில இருவரும் ஒரே இல்லத்தில் இருப்பதில் இரண்டு பேருக்கும் சரியான சந்தோசம்.

ஓட்டப் போட்டி என்றால் கண்ணனுக்கு சரியான விருப்பம். அதிலும் மரதன் ஓட்டம் என்றால் இன்னும் விருப்பம். ஆனால் நீண்ட தூரம் ஓடுறதெண்டா கண்ணனுக்கு வேப்பங்காய்தான். இருந்தாலும் கண்ணன் மரதன் ஓடும் போதும் பின்னாலே சைக்கிள்ள போய் உற்சாகப்படுத்தி அவனை பரிசு வாங்கவைச்சிடுவான். கண்ணன் பரிசு வாங்குறதில அவனுக்குத்தான் கூடுதல் மகிழ்ச்சி.

படிப்பு விளையாட்டு மாதிரி தான் இரண்டு பேருக்குமே குழப்படி செய்வதென்றால் சர்க்கரைச் சாப்பிடுவது போல் தான். வீதியால் சைக்கிளில் வரும் போது ஏதாவது வம்பு வேலை செய்து போட்டு ஒண்டுந்தெரியாத ஆக்கள் மாதிரி வந்திடுவார்கள்.

எட்டாம் ஆண்டு படிக்கும் போது ஆங்கில வாத்தி அடிக்கடி வீட்டு வேலை தந்து ஆக்கினைப் படுத்தும். அடுத்தநாள் செய்து கொண்டு போகாட்டி பூசை தான் நடக்கும். தண்டனை எண்டு சொல்லி வெளியில வெய்யிலுக்க நிப்பாட்டி போடும். ஒரு நாள் விளையாட்டு ருசியில இரண்டு பேருமே வீட்டுப் பாடம் செய்யாமல் போய் வாத்தியாரிட்ட மாட்டுப்பட அவரும் வஞ்சகமில்லாமல் இருவரையும் வெய்யிலுக்க நிப்பாட்டிப்போட்டார். அதால இரண்டு பேருக்குமே வாத்தியர் மேல சரியான கோபம். உவருக்கு செய்யிறம் வேலை எண்டு கறுவிக் கொண்டினம்.

மறுநாள் பள்ளிக் கூடம் வரேக்க "மச்சான் ஆங்கில வாத்திக்கு ஏதாவது செய்ய வேண்டுமென" சாந்தன் கூற கண்ணனும் சரியென்றவாறே பாடசாலை வந்தார்கள். பிறகு அண்டே இடைவேளை நேரம் பார்த்து ஆங்கில வாத்தியாற்ர சைக்கிளைத் தேடி இரண்டு பேரும் போய் ஆக்கள் ஆரும் வருகினமோ என்று சாந்தன் காவல் பார்க்க தயாராய் கொண்டு வந்த ஊசியால வாத்தியின்ர சைக்கிள் ரயரில கண்ணன் குத்தி காற்றுப் போக வைக்கபிறகு ஒண்டும் தெரியாத அப்பாவியளாய் இரண்டு பேரும் வகுப்பில வந்து இருந்தார்கள்.

பேந்து பாடசாலை விட்டதும் காத்துப் போன சைக்கிளை வாத்தியார் உருட்டிக் கொண்டு போக "என்ன சேர் காத்துப் போட்டுதே" எண்டு ஒண்டும் தெரியாத ஆக்கள் மாதிரி கேட்டு அவரிட்ட சைக்கிளை வாங்கி பக்கத்து கடையில கொண்டு போய் ஒட்டிக்கொண்டு வந்து கொடுத்து வாத்தியாரிட்ட நல்ல பேர் எடுத்துபோட்டார்கள். பிறகு அதை வைத்தே பல தடவை அவரிட்டயிருந்து தப்பிக் கொண்டார்கள்.

கண்ணனுக்கு மாங்காய் என்றால் நல்ல விருப்பம். பள்ளிக் கூடம் விட்டு வரேக்க கந்தையா அண்ணையின்ர மாந்தோப்பைக் கண்டால் இரண்டு பேருக்குமே வாய் ஊறும். "மாங்காய் சாப்பிடுவமே" என்று கண்ணன் கேட்க மறுக்காமல் சரியென்று சாந்தன் சொல்ல பிறகென்ன பசியையும் மறந்து பக்கத்துப் பனங்கூடலுக்குள்ள மறைவாசைக்கிளை விட்டு பூட்டிப்போட்டு களவா மாந்தோப்புக் குள்ள உள்ளட்டுபோடுவினம். மரத்திலிருந்து மாங்காய் சாப்பிடும்போது சாந்தன் சொல்லுவான் "மச்சான் இப்படி களவா மரத்திலேறி மாங்காய் பிடுங்கி சாப்பிடுறதிலும் ஒரு சுகம் இருக்கு என்னடா"

இப்படியான இருவரின் திடீர் திக்கு விஜயங்கள் அருகிலுள்ள மாந்தோப்பு, தென்னந்தோப்பு என்று இடைக்கிடை நடக்கும்.

விடுமுறைநாட்கள் என்றால் இரண்டு பேருக்கும் கொண்டாட்டம் தான். கீரிமலை கசூரினா பீச், வில்லூன்றி என்று ஒரு குட்டிச் சுற்றுலாவே செய்து விடுவார்கள்.

ஒரு முறை சுற்றுலா முடித்து விட்டு, இரவு படம் பார்த்து விட்டு, வீடு திரும்ப நடுச் சாமமாகிவிட்டது. வீடு போகும் வழியில் வருகின்ற சுடலையில் பேய் நிக்குமென்று ஆளையால் மாறிமாறி வெறுட்டி பின்னர் மற்றவன் இருக்கின்றான் என்ற துணிவில் வீடு வந்து சேர்ந்தார்கள்.

ஒரு முறை இவர்களது ஊர் கோவில் திருவிழா நடந்தபோது இருவரும் எட்டு முலவேட்டி கட்டிக் கொண்டுபோக நினைத்தார்கள். எல்லாறையும் கோவிலுக்கு அனுப்பிப் போட்டு இரண்டு பேரும் தனியாக வீட்டில் நின்று, வேட்டிக்கட்டத் தெரியாமல் அந்தரப்பட்டார்கள். ஆளையால் மாறி வேட்டிக் கட்டுவதும். சரிவராமல் பிறகு அவிழ்ப்பதுமாக நீண்ட முயற்சியின் பின் ஒருவாறு கட்டி முடித்து, கோவிலுக்கு வந்தார்கள். ஒழுங்காக வேட்டி கட்டாததால் நடக்க முடியாமல் இரண்டு பேரும் கோவி லில் அந்தரப்பட்டுக் கொண்டு இடை யிலேயே திரும்பிவிட்டார்கள்.

வெளிநாட்டுக்கு வந்த பின்னர் இப்பொழுதும் கூட புதிதாக உடுப்புப் போடும் போது சாந்தன் இதை நின்னவு படுத்துவான்.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நாட்டு நிலைமை மாறதொடங்கியது. அவர்களால் சரியாகபடிக்கவும் முடியவில்லை. நாட்டில் நடக்கின்ற குழப்பங்கள் அவர்களை படிக்க விடவில்லை. இதனால் பரிட்சையும் எடுக்க முடியாமல் போயிற்று.

முன்புபோல் அடிக்கடி வெளியில் போகமுடியவதில்லை. வெளியில் போகவே பயமாய்யிருந்தது. ஒரு நாள் கூட பிரிந்திராத அவர்கள் இடைக்கிடைதான் சந்தித்தார்கள். இருவரும் ஒன்றாக வெளியில் திரிந்தே பல நாட்களாகிவிட்டது.

நாட்டு நிலைமைகள் மோசமடைய இரண்டு பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்ப இருவீட்டாரும் நினைத்தார்கள். இரண்டுபேருக்குமே வெளிநாடு செல்ல விருப்ப மில்லை. ஆனாலும் வீட்டாரின் வற்புறுத்தலாலும் இருவரும் ஒண்டாகத்தான் செல்வது என்பதாலும் அரை மனதோடு சம்மதித்தார்கள்.

இருவரும் விரும்பிய மாதிரியே இரண்டு பேரும் ஒன்றாக ஓரே நாட்டுக்கு செல்வதையிட்டு இருவருக்கும் சரியான சந்தோசம். இங்கு வந்ததும் இருவருக்கும் ஒரே இடத்திலேயே வேலை கிடைத்தது. இருவரும் ஒரு அறை எடுத்து ஒன்றாகவே தங்கினார்கள்.

ஊரை விட்டுப்பிரிந்து வந்தாலும் தாங்கள் இருவரும் பிரியாமல் ஒன்றாய்யிருப்பதையிட்டு இரண்டு பேருக்குமே சந்தோசம் தான்.

வெளிநாட்டில் இருந்தாலும் அவர்கள் நினைவு ஊரிலேயே இருந்தது. ஊரை பார்க்க ஆசைப் பட்டார்கள். நாட்டு நிலைமை சீராக இல்லாததால் அதுசாத்தியப்படவில்லை. தற்போது நிலவும் சமாதான சூழலில் இருவரும் ஊருக்குப் போக விரும்பினார்கள்.

ஊருக்குப் போக விடுப்புக் கேட்டு இருவருமே ஒன்றாகத்தான் விண்ணப்பித்திருந்தார்கள். இருவரும் நீண்டகால விடுப்புப்பெறுவதால் வேலையில் சிக்கல் வரும் என்பதால் சாந்தனுக்கு மட்டுமே விடுமுறையில் செல்ல அனுமதிக்கிடைத்தது. கண்ணனை விட்டுவிட்டு தான் மட்டும் தனியே ஊருக்குப்போக சாந்தன் விரும்பவில்லை. தான்போக வில்லை என்று மறுத்துவிட்டான். கண்ணன் தான் அவனைபேசி, வற்புறுத்தி ஊருக்கு அனுப்பி வைத்தான்.

(23ஆம் பக்கம் பார்க்க..)


## அப்பாவின் திட்டு



வீட்டில அப்பா திட்ட ஆரம்பித்ததும் நான் வெளியே போய் விடுவேன்.

ஓ....அது தான் நீ எப்போதும் வெளியே சுற்றும் காரணம்.





## மண்ணின் மைந்தர்களின் கதை



# இயலாது என்பது இவனுடனேயே செத்துவிட்டது

**— க. மிரேசு —**

தூரத்தே... டப்.., டப்,... டப்..,டப், என்று மெலிதாய் கேட்ட சுடுகருவியின் வேட்டோசை, நேரம் செல்லச் செல்ல பெரும்பாலும் டப்.., டப்.., டப்.., டப்.., என காதை செவிடாக்கும் வரை கேட்டு எமது இருப்பிடத்தை அந்தச் சத்தம் வந்து சேரும் போது, அந்த வேட்டுச்சத்ததிற்குரியவனும் எம்முடன் வந்து சேர்ந்தே இருப்பான். ஆனால் அவனை முந்திக்கொண்டு எமது பொறுப்பாளரின் கடுமையான குரல் அதட்டலுடன் வெளிவரும்.

யாரடா அது... கன நேரமாய் சுட்டுக்கொண்டே வந்தது காவலரணில் தொடங்கி கட்டளை மையம்வரை சுட்டுக்கொண்டு வந்தது? என கடுமை நிறைந்த குரலில் கேட்கும் போதே! நாம் ஒருவரை ஒருவர் பார்த்து சந்தேகிக்கும் கண்களுடன் எங்களது விழி பிதுங்க தலையை குனிந்தவாறே, நிற்போம். ஏனெனில், தலை நிமிர்ந்தால் எல்லாம் சங்கடமாகிவிடும். எனவே தொடர்ந்து மௌனமாகவே இருக்க, ஒருவன் மாத்திரம் கொடுப்பில் சிரிப்பு. இராணுவ வர்ணமிட்ட வட்டக்கவிப்புடன்(தொப்பி) காணப்படுவான். அவனிடம் எதுவித சலனமும் இருக்காது. சுட்டுக்கொண்டு வந்தது அவன் தான் என்றாலும் பொறுப்பாளர் கேட்பதற்காய் அவனை நாம் காட்டிக்கொடுக்கவும் இயலாது, காரணம் அந்த குறிதவறாது சுடும் பரந்த சூட்டாளனின் சூட்டுத் திறமைக்கு மதிப்பளிக்கவேண்டும். அதைவிட பொறுப்பாளரிடம் சொல்லி அவனிடம் தற்செயலாக மாட்டிக்கொண்டால்? என்ற பயத்துடன் ஒருவரும் சொல்லாமல் விட்டுவிட்டோம். கண்டித்து எமக்கான விளக்க உரையை தந்த பொறுப்பாளர், அவ்விடத்தைவிட்டுச் சென்றதும் தண்டனைக்கு பயந்த நாம் தப்பிவிட்டோமா என்ற பிரமிப்பு உண்டாகும்.

அந்தப்பிரமிப்பிற்குள்ளும், முடியுமென்றால் என்னுடன் சுட்டுப்பாருங்கள் என்ற சவால் நிறைந்த அந்த மிடுக்கான குரல் கேட்கும். உண்மையில் அந்தத்சவாலில் தோற்றுப்போனவர்களே அதிகம். ஆனால் ஒருஉண்மை. அந்த சவால் நிறைந்த மிடுக்கான குரலின் சுடுகருவி எத்தினை எத்தினையோ எதிரிகளை"குறிதவறாது சுட்டு வீழ்த்தியதையும், குறிதவறாத அவனது சூட்டினால் மின்னிடும் நேரமதில் எம் போராளிகளின் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டதையும், அதே குறிதவறாத தூரத்தின் சூட்டு வலுவால் பல சண்டைகள் வெற்றியாய் அமைந்ததும் எமதுதாயக விடுதலைப்போரின் ஆன்மாவின் அதிசயம்மிக்க உண்மையாகி விட்டது. அந்த உண்மைக்கு பாத்திரமானவன்தான் மாவீரன் மேஜர் பிரபலியன் ஆவான்.

ஓயாதஅலைகள்-3 நடந்து கொண்டிருந்த போது விஞ்ஞானகுளம் சண்டையில் ஒரு கட்டத்தில் எதிரியின் குழுவொன்று சுட்டுச்சுட்டு முன்னேறின. அந்த நேரத்தில் பிரபலியனின் துப்பாக்கி முந்திக்கொண்டு மிக ஆறுதலாக டப்...டப்... எனச் சுட்டுக்கொண்டே இருந்தது. வந்த எதிரியில் பல பேர் இறந்து விழுந்து கொண்டிருக்க, எஞ்சியவன் தப்பி ஓடினான். டேய் ஓடுறான் விடாதே சுடுங்கடா என்று சொல்ல எல்லோரும் சேர்ந்து சுட்டுக்கொண்டிருக்க, முன்னே 150, 200, 250 யாரையும் கடந்து ஓடிக்கொண்டிருந்த எதிரிகளை ஒவ் வொருவராக சுட்டுக்கொண்டே இருந்தான். எப்படியடா என்ர "எய்ம்" என்று இக் கட்டான களத்திலும் தனது மேற்சட்டை கழுத்து முனையை எடுத்து விட்டுக்கொண்டு கேட்டுச் சிரித்து விட்டு தனது அணிகளுடன் முன்னேறத் தொடங்கினான்.

உண்மையிலேயே மாவீரன் மேஜர் பிரபலியன் வித்தியாசமான செயற்திறன் கொண்டவன். தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்ட நாளிலிருந்து இன்றும் அவன் அமைத்துத் தந்த "முகமாலை" எமது காவலரண் பகுதியில் தனது இறுதி மூச்சை தமிழ்த்தேசத்திற்காய் உவந்தளித்த இறுதிநாள்வரை அவன் களத்திலேயே நின்றான் என்பது ஒரு வரலாற்று உண்மையாகிவிட்டது. உண்மையில் சொல்வதென்றால் மாவீரன் மேஜர் பிரபலியன் களத்திலே எப்படி இயங்கினான் என்பது எல்லோருக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது. பல்வேறு சண்டைகளில் பல காயங்கள் ஏற்பட்டு தசை, எலும்பு, தோல் குருதிக்குழாய்கள் இப்படி எதை எதையோ இழந்தும் இரண்டு கால்களும் என்பு முறிவினால் பாதிக்கப்பட்டு, ஒரு கால் அதனது தசைநார் செயலை இழந்தும் மற்றயகால் தனது நரம்புச் செயற்பாட்டை இழந்தபோதும் அவன் களத்திலே செயலாற்றிக்கொண்டே இருந்தான். அவனது கால்படாத களமில்லையென்ற அளவிற்கு ஈழ விடுதலைச்சண்டையில் அவன் சேவையாற்றியுள்ளான்.

இவற்றையெல்லாம்விட அவனது வலதுகை காயமடைந்து முற்றிலுமாக செயலற்று இருந்தது. இடதுகையிலும் காயம் இருந்தது. அதிலும் இரண்டு விரல்கள் இயங்கு நிலை அற்று மடிந்தவண்ணமே இருந்தது. என்றாலும் அவனது கரங்கள் ஏதோ ஒரு மிதமிஞ்சிய சக்தியினால் கருவியை, இறுக பற்றி குறிதவறாது சுடுவது இயற்கைக்கு மிஞ்சிய சக்தியாகவே இருப்பதை நாம் உணர்ந்தோம். அந்த இயலாத கையிலே, மாவீரன் மேஜர் பிரபலியன் தேனீர் குடிப்பதே ஒரு அதிசயம்தான். இடதுகையின் உதவியுடன் வலது கையில் பேணியை பிடித்து, வலது கையின் சாதாரண உதவியுடன், இடது கையில்மூன்று விரலின் உதவியுடன் தூக்கி குடிப்பான். சிலவேளை தட்டுப்பட்டு விழுந்து காலில் ஊத்துப்பட்டு சுட்டுவிடுவதும் உண்டு. அந்த நேரங்களில் அவனைப் பார்க்கவே அழுகை வரும். நாங்கள் உதவி செய்கிறோம் என்றாலும் இல்லைவேண்டாம், போராட்டத்திற்கு என வந்த நான் எனது வேலையை நானே செய்ய வேண்டும் என்பான்.

இதைவிட தேனீர் அருந்த அவனே சில ஏற்பாட்டைச் செய்வான் உயரமான இடத்தில் பேணியை வைக்கச்சொல்லிவிட்டு தனது இடது கையின் மூன்று விரல்களின் உதவியுடன் சரித்துக்குடிப்பான். பெரும்பாலும் அவன் சாப்பிடும்போது சொற்ப உணவையே சாப்பிட்டுமுடிப்பான். மற்றயது பெரும்பாலும் சிதறி கொட்டிவிடும். ஆனால் அவனது இடது கையின் எஞ்சிய மூன்று விரலில் ஒன்றே சுடுவிரலாகும். அது எப்போதும் குறிதவறாது சுட்டுக்கொண்டே இருந்ததுதான் உண்மை.

பரந்தன் படைத்தளத்தின் பகல்ச் சண்டையில் பிரபலியனும் பங்கேற்றான். அதற்கு முன் நடந்த சண்டை ஒன்றில் பங்கேற்று காயமடைந்திருந்த போதும், ஏதோ பொறுப்பாளருக்கு பம்மாத்துவிட்டுவிட்டு வந்து விட்டான். பகலில் தொடங்கிய சண்டை இரவும் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. குறித்த இடத்தில் எதிரியானவன் தொடர்ந்து எம்மை நோக்கி சுட்டுக்கொண்டே இருந்தான். சில நிமிடங்கள் எதிரியின் தாக்குதல் வந்த திசையை அவதானித்துக்கொண்டே இருந்தவன் உந்துகணை செலுத்தியுடனிருந்த, போராளி ஒருவனையும் கூட்டிக்கொண்டு, எதிரி கைவிட்டுச் சென்ற இயந்திரத்துப்பாக்கி ஒன்றையும் எடுத்துக்கொண்டு முன் நகர்ந்தான். சுமார் 20 நிமிடங்களின் பின் பெருத்தவெடியோசையுடன் அடுத்தடுத்து தொடர்ச்சியாக நான்கு உந்துகணையும் இயந்திரத்துப்பாக்கியின் சத்தமும் இடைவிடாது கேட்டு ஓய்ந்தது. எதிரியின் பக்கம் எதுவித அரவமும் இல்லாமல் அந்த இடம் ஓய்வுபெற, இரண்டு நிமிடத்திற்குள்ளாக ஓடிவந்து விட்டான். வந்தவன் நாம் கைப்பற்றிய எதிரியின் காப்பரண் ஒன்றில் அசந்துபடுக்க, எதிரியின் எறிகணை மழை அந்த இடத்தை சுற்றிலும் தூர ஆரம்பித்தது.

மறுநாள் காலை தொடங்கிய சண்டை தொடர்ந்து இடைவிடாது பேரலை போல் தொடர்ந்தவண்ணமேயிருந்தது. எமது அணியையும் கட்டன் கீதனின் அணியையும் முன்னேற விடாமல் எதிரிதாக்கிக்கொண்டு இருந்தான். எதிரியின் இடர் நிறைந்த அந்தக்களப்பகுதியில் நாம் கட்டம் கட்டமாக நகர்ந்துகொண்டிருக்க, முன்னேறித்தாக்கும் முயற்சியில் நகர்ந்துகொண்டிருக்கும் கட்டன் கீதன், எதிரியின் எறிகணைச்சிதறல் ஒன்றில் காயமடைந்து வீரச்சாவு அடைந்து விடவே, அவனது இடத்திற்கு பிரபலியன் வந்து சேர்ந்தான். எதிரியின் சூட்டாளன் ஒருவன் நாம் நிலைகொண்டு தாக்கிக்கொண்டி ருந்த காவலரணின் ஓடுகளை சுக்குநூறாக்கிக்கொண்டிருந்தான். எதிரியின் நிலையை நன்கு தெரிந்து கொண்ட பிரபலியன் எம்மை பக்கவாட்டாக நகரச்சொல்லிவிட்டு எழுந்து நின்று எதிரியின் காவலரணை நோக்கி உந்துகணை ஒன்றை செலுத்தினான். மீண்டும் இன்னுமொன்றை செலுத்தியதன் பின் எதிரியின் தாக்குதலைக் காணவில்லை.

இப்படியாக மாவீரன் பிரபலியனின் விடுதலைப்பயணமானது இயலாது என்ற சொல்லை அகராதியில் இருந்து அகற்றிவிட்ட ஒன்றாகவே இருந்தது. நிச்சயமாக விடுதலைப் பற்றையும் கடந்து விடுதலை வெறி கொண்டு சண்டைக்களங்களில் எதிரிக்கு சிம்ம சொப்பனமாய் நின்று, எவ்வேளையிலும் இடைவிடாது சண்டை செய்த பிரபலியனை கண்டவர்கள் எவருமே எதையும் முடியாது, இயலாது என்று சொல்லுவதே கிடையாது. பிரபலியனை தவிர்ந்த எவரும் அப்படிச்சொல்லவும் முடியாது என்ற நிலையைத் தோற்றுவித்தான். தசைநார் பாதிப்புற்று, நரம்பு செயலிழந்த பாதத்துடன் பாதணியை சணல் கொண்டு கட்டி கால் இழுபட... இழுபட... சண்டைக்கான கட்டளையை நடைபேசியில் கொடுத்து, திசையைக்கையால் சுட்டிக்காட்டி அந்தா சுடு.... அந்தா ஓடுறான்.. சுடு...சுடு என்று சொல்லிச்சொல்லி ஓட்டமும் நடையுமாக செல்லும் போது இயலாத கால் தட்டுப்பட்டு விழுந்து..... விழுந்து... எழும்பிச் சண்டை செய்தவன் என்றால் அது பிரபலியனா கவே் இருக்கமுடியும்.

ஓயாதஅலையின் வேகம் பரந்தன் பகல் சண்டையையும் கடந்து இத்தாவில் சரித்திரச்சமரிற்கு அழைத்துச்சென்றது. அணிகள் தயார் படுத்தப்பட்டன. எல்லாம் முடிவுற்று சண்டைக்கான நகர்வு ஆரம்பமானது. பல கடல் மைல்கள் கடலில் பயணித்து, குடாரப்பில் தரையிறங்கி மேலும் பல மைல் நடந்து சி நீர் ஏரியை சுமார் இரண்டு மைல் கடந்து,

(23பக்கம் பார்க்க...)



# இளைய நாதம்

## சிந்தனைத் துளிகள் சில

- பண்புள்ள நடத்தை என்பது எந்த எந்த இடத்துக்குச் சென்றாலும் நுழைவுச் சீட்டாகப் பயன்படும்.
- சிறிய தியாகங்கள் மூலம் தான் நல்ல நடத்தைகளைப் பின்பற்ற முடியும்.
- தவறான வழியில் பெற்றபணத்தைக் கொண்டு உண்பதை விட பிறக்காமலே இருந்திருக்கலாம்.
- நாம் எப்போதும் பணிவது என்பது இயலாது ஆனால் பணிவோடு பேசலாம் இல்லையா?

செ.தர்ஷாந்தினி

## சொற்சிலம்பம் - 45

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னை | ச | கா | ச | லா | வ | ா |
| ய் | க் | ப | ய் | ழ | கே | பூ |
| லி | ன் | து | ர | ளை | ரு | ங் |
| ங் | ள | ய | மா | வ் | டி | ல் |
| மு | ம | உ | ம் | ந் | தா | ன் |
| எ | ல | ரி | தா | ம் | தி | கி |
| னி | கோ | மு | ளி | ளீ | ண | நா |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 43 இன் விடைகள்

01. கணவாய்.
02. முரல்.
03. வாலை.

01. தாய்.
02. மாதா.

### சொற்சிலம்பம் - 43 இன் பரிசுக்குரியவர்

சி.யுமேஷ்யதுசங்கர்,
தரம் -03,
விடத்தற்பளை மிருசுவில்

### சொற்சிலம்பம் - 43 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கா. திவேஜன், காளிகோவிலடி, ஏழாலைகிழக்கு ஏழாலை.
02. சு.பிரதீப், தரம்- 06, மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயம்.
03. சு. பிரியங்கா, மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயம்.
04. ச. சசிவதனி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
05. எம்.ரதீஷன், இல.03, கனகாம்பிகைக் குளம், இரணைமடு.
06. த. வசந்தி, சோரன்பற்று, பளை.

01. இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் இருவரின் பெயர்கள்?

01) ....................................

02) ....................................

02. வீட்டில் வளர்க்கும் பிராணிகள் இரண்டு?

01) ....................................

02) ....................................

பெயர் :- ....................................

முகவரி :-....................................

....................................

*சொற்சிலம்பம் - 45*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

## எங்கள் விலங்குகள்



எங்களுடைய காட்டுக்குள் இருக்கிற விலங்குகளைப் பற்றி அறிந்து கொண்டே வருகிறோமல்லவா? இன்றைக்கு பொதுவாக எங்களின் காட்டுக்குள் என்னென்ன விலங்குகள் இருக்கிறதென்ற விபரங்களை தருகிறோம். முதலில்ல நாங்கள் இதை அறிந்து கொள்ளவேண்டும்.

எங்களின் காடுகளுள் ஊர்வன விலங்குகளும் உள்ளன. பெரிய விலங்குகளில் யானை சிறுத்தை, கரடி, பன்றி? முள்ளம்பன்றி, நரி, மான், மரை உக்கிலான்(சருகுமான்) புலுட்டைமான், காட்டுப்பூனைகள், மர அணில், தேவாங்கு , குரங்கு இனங்கள், என்பவை குறிப் பிடக்கூடியவை. இவற்றில் மான், குரங்கு காட்டுப்பூனைகளில் பலவகைகள் உள்ளன.

ஊர்வன வகைகளில் -


ஓணான், பல்லி, பச்சோந்தி, உடும்பு, கபரக் கொய்யா, அழுங்கு (எறும்பு தின்னி ஆமை) என்பவையும்.

பாம்புகளில் -

நாக பாம்பு, விரியன் பாம்பு இனங்கள், 'கண்டன்கருவளை', ஆகிய விடபாம்புகளும், சாரை உள்ளிட்ட விடமற்ற பாம்புகளும் இருக்கின்றன. இவற்றை விட நீரிலும்-நிலத்திலும் வாழும் ஈருடக உயிரினங்களான தவளை இனங்களும் இருக்கின்றன.

இவற்றில் முதல்கட்டமாக பெரிய விலங்குகளை நாம் தனித்தனியாகப் பார்த்து வருகிறோம்.

### தொலைஞ்சு போச்சுது...



*ஒருவர்:-* என்னுடைய சம்பளக் கவர் தொலைஞ்சு போட்டுது.

**மற்றவர்:-** அதையேன் சிரிச்சுக் கொண்டே சொல்கிறீர்கள்.

*ஒருவர்:-* கவர்மட்டுந்தானே தொலைஞ்சது பணம் அப்படியே இருக்குதே.


### நல்ல சிறுவன்

மாடி வீட்டுப் பைனோடுங்
கூடிவிளை யாடுவேன்
ஏழை வீட்டுப் பையனோடும்
தோழனாக வாழுவேன்!

சிறுவரோடு சிறுனாகக்
கறுவில்லாமல் வாழுவேன்!
பெரியவர்க்கும் பெருமை தந்தே
அரிய தொண்டு செய்யுவேன்


கேடு செய்த பையனுக்கும்
நாடி நன்மை செய்யுவேன்
பேதமின்றி யாவ ரையும்
ஆதரித்து வாழுவேன்.

### கைவண்ணம்



இ.சுகந்தினி,
தரம் ~02
உடையார் கட்டு
தோராவில்

## கரடியின் சப்பாத்துக் கடை பகுதி -01





கவிதைகள்

நீலவானம்
நினைத்து நினைத்துச் சிரித்தது:
இதயம் இனிக்க
இறங்கிக் கொஞ்சம்
எட்டிப்பார்த்தது:
உரக்கக் கைதட்டி
ஓகோ என்று சிரித்தது:
கதிரவக் கதிர்களுக்குள்
முழுகி எழுந்து
முக்கி முக்கிச் சிரித்தது
"முகில்களே! இன்று
உங்களுக்கு விடுமுறை" என்று
மூன்று முறை சொல்லியது!
எத்தனை வருடத்து
ஏக்கம் இது!
எண்ணத்தில் ரணமென கனத்த
நோக்களின் வீக்கம் இது!
பறவைக்கூட்டங்களின்
பஞ்சென்ற இறக்கைகள்
தடவிச் செல்லும் வானத்தை
எத்தனை தடவைகள் தான்
இந்த இயந்திரப்பறவைகள்
கீறிக் காயப்படுத்தின!
நவாலியில் நரபலியும்
நாகர்கோவில் பாடசாலை
பச்சிளங்களும்
இன்னும் எத்தனை காலம் கடந்தாலும்
இதயம் மறக்குமோ!
இயந்திரக்கழுகுகளின்
நகக்கீறல்களில்
வதைபட்ட நெஞ்சங்களில்
வசந்தக்காற்றின் வருடல்கள் இன்று!

சேதி கேட்ட மாத்திரத்தே
கால்கள் புவியீர்ப்பு களைந்தன!

மானுடத்தைக் கீறிய கைகளின் நகங்கள்
ஒடிக்கப்பட்டு விட
முதுகு சொறியவே இங்கு அடுத்தவரிடம்
வழிந்து கொள்ள வேண்டிய நிலையில்!

நெஞ்சம் மட்டும் இருக்கும் நீலவானம்
கைகளில்லையே தனக்கு- இக்
கயவர் படையை
களைந்துவிட என்று
எத்தனை தரம் நொந்திருக்கும்!
ஏங்கி ஏங்கிச் சொரிந்திருக்கும!
அத்தனைக்கும் சேர்த்து இன்று
அந்த மாதிரி ஒரு அடி!

கண்டன அறிக்கைகளும்
கண் துடைப்புக்களும்
என்று நம்மைக் காப்பாற்றின்?
வானத்து அவதாரங்களுக்காய்
பார்த்து வாழாதிருப்பவர்கள்
அல்லர் புலிகள்!!
வென்று வாரும்!
வேங்கைகளின் முகவரியை
சொல்லி வாரும்!- என்று
சூரியப் புதல்வன் சுட்டிய திசையில்
எழுந்திட்ட பூகம்பங்களின்
புறப்பாடுகளே இவை!

நவாலி மண்ணில்
தலை பிரியக்கிடந்த- அந்த
சின்னஞ்சிறுவனின் முகம்
சிரிப்பது தெரிகிறது
நாகர்கோவில்
மகாவித்தியாலயத்தில்
ஆவியாய்த் தெரியும்
எங்கள் குஞ்சுகள்
கல்லெறிந்து மகிழ
கொண்டு வாரும்-அந்த
கருகிய கழுகுகளை!!

சு. ஞாலவன்





## அசிங்கமான வாய்களுக்குள் அவலாகிப் போகாதே!

கரி அல்ல முகத்தில்
கரிகாலன் கால ஒளி பெண்ணே.
கண்ணைத்திற
வெளியில் பார்.
மண்ணில் காலைவை.
"மகிமை"
நீ...
மடமை அல்லவே
படலை கட்டி
பாட்டியின் காவலில்
பூட்டிய வீட்டுக்குள் இருந்த நீ
பூட்டிவை ஆதிக்கப்பூதத்தை.
அதே வீட்டுக்குள்
காலம் காட்டிய வீரத்தோடு
கோட்டைவிட்டு வெளியில் வா...நீ

வேட்டை நாய்களின் விசப்பல்லு
வெறும் வாய்க்குள் மோதட்டும்.
வெளியில் வா நீ....
அவலாகிப்போகாதே....
அசிங்கமான வாய்களுக்குள்

பெண்கள் புயலான தேசம்
இது - அவள்
கண்கள் வேலான தேசம்
இது.
பெண்ணே! பேதை அல்ல நீ
"மேதை"
காதைக் கூர்மையாக்கு...
அதோ...பூட்டிய விலங்கு....
நெறு...நெறு....நெறு.

பி. நாவழகி



## இலக்கியப்பகிர்வு

## "இங்கிருந்து!"

நண்பர்கள் வெளியீடாக 2001இல் வெளியான சிறுகதைத்தொகுப்பு நூல் "இங்கிருந்து" ஆகும். தாட்சாயினி, இயல்வாணன், கோகுல ராகவன், சி.சிவாணி, சத்திய பாலன்,ச.இராகவன், ச.சாரங்கன், த.பிரபாகரன், ஆ.இரவீந்திரன், ச.குமுதினி, சி.கதிர்காமநாதன், உடுவில் அரவிந்தன் ஆகிய பன்னிரண்டு சிறுகதையாளர்களின் சிறுகதைகள் இதில் உள்ளன.




இவர்களில் சத்தியபாலன் அவர்கள் ஏற்கனவே சற்று அனுபவம் உள்ள சிறுக்தையாளர். ஏனையவர்கள் புதியவர்கள். இவர்களுக்குள்ளும் அனுபுவ வேறுபாடுகள் உண்டுதான், என்றாலும் இக்காலப்பகுதியில் இவர்கள் முதன்மையானவர்கள். களத்தில் இருக்கின்றார்கள்.

ஈழத்து இலக்கிய உலகில் இவர்களை நாலாம் தலைமுறை எழுத்தாளர்களாக இலக்கிய உலகம் கணிக்கும் என நம்பலாம்.

வழமையாகவே புதிதாக முகிழ்ந்து எழும் இலக்கியப் படைப்பாளிகள் சிலகாலம் இலக்கிய உலகில் ஆட்சி செய்வார்கள், எழுதிக்குவிப்பார்கள். பிரசுரித்து மகிழ்வார்கள். பின்னர் பல்வேறு சோலிகளுக்கிடையில் காணாமல் போய்விடுவார்கள். ஒரு சிலர்தான் தொடர்ந்து இலக்கியம் படைப்பார்கள், படைக்கின்றார்கள்.

எங்கள் இலக்கியவாதிகளில் பலர் சிறுகதையாளர்களாக இருந்தால் என்ன? கவிதையாளர்களாக இருந்தால் என்ன? இது பொது விதியாக அமைந்து விடுகின்றது.

இந்த பன்னிரு படைப்பாளிகளும் என்னவிதமாக மாறப்போகின்றார்கள் என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கவேண்டும். இப்போது இவர்களது கதைகளைப் பார்ப்போம்.

இவர்களின் கதைகளின் அடிச்சரடு ஒன்று தான். தங்கள் உணர்வுகளை எந்தவிதமான பாசாங்கும் இல்லாமல் வெளிப்படுத்த முனைந்துள்ளனர்.

ஒருகாலத்தில் ஈழத்துச் சிறுகதைகளில வேறுபட்டு நின்ற உருவ உள்ளடக்கப் பிரச்சினைகளுக்கு அப்பால் இவர்கள் உருவ உள்ளடக்கங்களைப் பிரக்ஞை பூர்வமாக விளக்கிக்கொண்டு எழுத முனைந்துள்ளார்கள் என்று சொல்லலாம். அதில் அவர்கள் பூரணத்துவம் அடைந்துள்ளார்களா என்பது நுணுகி ஆராயப்படவேண்டியது.

இராணுவ அடக்குமுறைக்குள் வாழ்கின்ற மக்களும் அந்த அடக்குமுறைக்கு எதிரான உணர்வுகளை வெளிக்காட்டும் மனோபலமுமே இந்தக்கதைகளின் கருப்பொருள். இதனைவிட வேறு கருப்பொருளை அவர்களால் தேடமுடியாது. காரணம் அவர்களது சூழல். இந்தச்சூழலே இவர்களை ஒரு மையத்து வட்டங்களாக இவர்களின் படைப்புக்களை ஒரே தன்மை கொண்டவையாக மாற்றுகின்ற பிரதான காரணியாக அமைய வைக்கிறது.

இந்தப்பொதுவிதிக்கு உட்படாத சில கதைகள் கூட காலம் காலமாக எமது எழுத்தாளர்கள் எழுதிக்களைத்த பழைய விடயங்களையே கருப்பொருளாகக்கொண்டு வழமை பேசுகின்றன.

தாட்சாயினியின் "மழை" ஒரு குறியீட்டுக் கதை. மழை இராணுவ மீறல்களுக்கான குறியீடு. பொருந்துமா? என குப்பிளான் ஐ.சண்முகன் அவர்கள் கேட்பது நியாயமானது. கதையின் கதைநாயகி மழையால் சந்தோசப் படுகின்றாள். இந்த மழை பரிசுத்தமான மழை தூய்மையாய் ஆற்றில் குளித்து வருகின்ற மழை. சின்ன வயதில் நின்றிருக்கின்றாள் இந்த மழையில். மழைக்குளிரைப் பரிசளிக்க மழைக்குள் திணறி சந்தோசித்து என சந்தோஷிக்கும் பெண். அதேமழை இராணுவமாக...? எவ்வளவு தூரம் பொருந்தும்.

இயல்வாணனின் முடவன் நடை வெளிவந்த காலத்தில் பேசப்பட்ட கதை. மீள் பிரசுரமும் செய்யப்பட்டது. வன்னியில் (புதுக்குடியிருப்பு) ஈழநாடு வெளியான போது அதில் இக்கதை மீள்பிரசுரம் செய்யப்பட்டது. அக்காலத்தைய யாழ்ப்பாணத்து அவல வாழ்க்கையினை இக்கதை மிக நேர்த்தியாக வெளிப்படுத்தியது.

கோகுல ராகவனின் "ஆனந்தம்" போராளிகளை தம்பிள்ளைகளாகப் போற்றும் பெற்றோரைக்காட்டுகின்றது. சிவாணியின் "இரவு" கதை மற்றொரு யாழ்ப்பாணத்து அவலம் "அம்மாவும் அப்பாவும் சாய்ந்து கொண்டு இருக்கும் போது அவையின்ரை வெளிச்சத்தில் சோறுதின்னும் இரவுகள் போலும்" அந்த அவலத்தின் வெளிப்பாடு.

ந.சத்தியபாலனின் "திறமிழக்கும் கனவுகள்" ஒரு வழக்கமான கதை. ச.இராகவனின் "மாறிப்போன அடையாளம்" நல்ல கதைகளில் ஒன்று. அதில் முதலாவது பந்தியில் சிலவரிகள் இல்லாமலே கதை வந்தால் பிரச்சினை இல்லை. அல்லது அது வேறு மாதிரியாகத் நாசூக்காக சொல்லப்பட்டிருக்க வேண்டும். தமிழகத்து சில பெண் கவிஞர்கள் போல சில சொற்களை வேண்டுமென சேர்த்தது போல உள்ளது.

ச. சாரங்காவின் "வானம் மட்டுமல்ல தேசமும்" என்ற கதை சேர்க்கைத் தன்மை அதில் கொண்ட கதை இயல்பானதாக அமைந்ததால் சுவைக்கமுடியவில்லை.

த.பிரபாகரனின் "ஆலமரம்" கதையும் ஒரு வழக்கமான கதையே. இதுபோன்ற கதைகளைப் படித்த உணர்வு ஏற்படுகிறது. ஆ.இரவீந்திரனின் "மின்"கதை அக்காலத்து யாழ்ப்பாணத்தை கிண்டல் செய்யும் கதை.

ச.குமுதினியின் "அமாவாசை நிலவுகள்" பெண்ணின் அவலத்தை வெளிப்படுத்தும் ஒரு கதை. தான் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை எதிர்கொள்ளமுடியாத பெண் இங்கே வெளிப்படுத்தப்படுகின்றாள்.

சி.கதிர்காமநாதனின் "கொன்று போடாதேங்கோ" கதையும் குறியீட்டுப்பாணியில் எழுதப்பட்ட கதை. முயலின் அவலம் இங்கே யாழ்ப்பாணத்து பொதுமகனின் அவலமாகின்றது.

உடுவில் அரவிந்தனின் "உறவுப் பாலம்"உண்மை நிகழ்வானபடியால் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லை.

மொத்தத்தில் இங்கு சில வாழ்தல் பற்றிய அனுபவங்கள் பகிரப்படுகின்றன. மண் சார்ந்த துன்பங்கள் துயரங்களை வெளிப்படுத்துவதில் நாம் முயன்றிருக்கின்றோம். என படைப்பாளிகள் நூலில் கூறுவதை முழுமையாக வெளிப்படுத்தி உள்ளார்கள்.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## வீடு

# ஏக்கங்கள்; பெருமூச்சுக்கள்

மாதர்தனை இழிவு செய்யும் மடமை தனைக் கொழுத்திடுவோம் என்றான் பாரதி. மகளிர்களின் உரிமைகள் பற்றி உரத்த சிந்தனை பரவலாக ஒலிக்கின்ற இன்றும் குடும்பங்களில் பெண்கள் நிலை உயர்ந்ததாகத் தெரியவில்லை.

இன்றைய எமது பெண்களின் பல் வேறு பிரச்சினைகளில் கொழுந்து விட்டெறிவது சீதனம் எனும் அரக்கன் என்றால் அது மிகையாகாது. மனமொத்து ஆணும் பெண்ணும் இணையும் இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்க முக்கிய தடைக்கல்லாக பணம் தலை விரித்தாடுகிறது. இன்று பெண்களின் நியாயமான, உரிமையான பரஸ்பர தேவையை இருபாலருக்கும் இருக்கின்ற திருமணத்தை ஒப்பேற்றுவதில் பெண்களை உடைய வைக்குமளவுக்கு பணப்பேய் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. விலங்குகளுக்கு இருக்கின்ற உரிமை கூட இன்றைய பெண்களுக்கு இவ்விடயத்தில் இல்லை என்றால் அது மிகையாகாது.

கலியாணம் என்பதே வர்த்தக மயமாகிவிட்ட இன்றைய நிலையில் முதிர் கன்னிகளாக ஏக்கங்களுடன், பெருமூச்சுக்களுடனும் பெண்கள் வாடுகிறார்கள். சந்தை வியாபாரமாகிவிட்ட திருமணத்தை நிறைவேற்றுவதில் தரகர்களின் குளறுபடிகளும், ஈவிரக்கமற்ற ஆணாதிக்கச் சிந்தனை வசப்பட்ட சமூகப் போக்குகளும் பெண்ணினத்தை இழிவுபடுத்தி வேதனைக் குள்ளாக்கு கிறது.

சீதனம் இல்லாமையினால் தவிக்கும் பெண்களின் சோக வரலாற்றை பெரும் காவியங்களாகவே எழுதிவிடலாம். ஒரு சமூக நோய் போல் பரவியுள்ள சீதனப்பேய், பெண்களின் அபிலாசைகளைப் புறம் தள்ளி, உடல் ரீதியிலும், உளவியல் ரீதியிலும் அவர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.



வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது போல, இன்று திருமண வயதைக் கடந்தும், பற்றிக்கொள்ள ஒரு துணையின்றி பரிதவிக்கும் பெண்களின் இந்த அவல நிலைக்கு தீர்வு காணாது விட்டால், சமூகச் சீர்கேடுகள் பல்கிப் பெருகுவதைத் தடுத்து நிறுத்திட எவராலும் முடியாது.

இன்று பெண்பிள்ளைகள், குடும்பங்களில் சுமையாகக் கருதப் படுகின்ற நிலை அதிக இடங்களில் காணவே செய்கிறது. அறிவியல் ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களோ, சீதனத்திற்கு ஏதிரான சட்டங்களோ, பெண்கல்வி, பென் விடுதலை, பெண்ணியச் சிந்தனை முதலான படிகள் கூட சீதனக் கொடுமையிலிருந்து பெண்களைக் காக்கவில்லை.

பெண்களுக்கு இவ் விடயத்தில் இழைக்கப்படுகின்ற அநீதிகளை இச் சமூகம் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது. எனினும் இக்கொடிய விலங்கை உடைத்து, பெண்ணுக்குரிய நீதி காட்டும் நிலை ஏற்படவில்லை. இந்தக் காலக்கேடுக்கு யார் காரணம்?

படித்து பதவி பெற்று கைநிறையச் சம்பளம் வாங்குகின்ற பெண்கள் கூட இச்சீதனக் கொடுமையினால் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு டாக்டரான பெண் சாதாரன பெண்னை விட அதிக சீதனம் கொடுக்க வேண்டிய அவல நிலை இன்று இங்குள்ளது.

சீதனத்தை எதிர்த்துப் போராட பெண்களும் துணிவதில்லை. இவ்விவகாரத்தில் பெண் விடுதலை ஆர்வலர்களின் செயற்பாடு கூட தீவிரமாக இல்லை எனலாம்.

எனினும் போராளிகள் மத்தியில் சீதனமற்ற திருமணங்கள் நிறைவேறி வருவது ஒரு எடுத்துக் காட்டாக கொள்ளக் கூடிய விடயமாகும். சில காதல் திருமணங்களிலும் இந்த நிலையைக் காணமுடிகிறது. எனினும் பல காதல் திருமணங்களில் கூட சீதனம் புகுந்து விளையாடுவதைக் காணலாம்.

இது தவிர வெளிநாட்டுப் பணப் புழக்கத்தினால் புலப் பெயர்வின் பின்னர், சீதனச் சந்தையில் பெண்கள் விலைப்படுத்தப்படுவது இன்னமும் சிரமமாகியுள்ளது. கொடுப்பதற்குப் போட்டி போடும் போது எப்படித் தவிர்க்க முடியும்?

சீதனம் இல்லாவிட்டால் சிரிப்பொலி இல்லை என்ற அவல நிலை எமது தமிழ்ச் சமூகத்திலிருந்து தூக்கி எறியப்பட வேண்டும்.

இன்று இந்நிலையால் வாடுகின்ற முதிர்கன்னிகளும் திருமணத்தையே இழந்து முதுமையடைந்து விட்டவர்களும் விடுகின்ற பெருமூச்சுக்கள், நச்சு வாயுவாக மாறி எமது இனத்தையே ஒரு நாள் அழித்தொழித்து விடும்.

இளைஞர்களே சிந்தியுங்கள்!

**ச.முருகானந்தன்.**

# இழப்புக்கள்

உலக மயமாதல் போர்வைக்குள்ளே நின்று
எங்கள் உயிர்களை உறிஞ்சுகின்ற
சர்வதேசப் பயங்கர வாதியா உலக நீதிபதி?

ஆயுதங்களால் மட்டுமா நாடுகள் அழிக்கப்படுகின்றன?
அத்துமீறி சந்தைப்படுத்திச் சுரண்டும்
சகட்டு மேணிப் பொருட்களாலும் தான்!

இயற்கை நன்நீர் நிறைந்த நாட்டில்
போத்தல் நீரை ஏன் அனுமதித்தோம்?
உடன் உணவு எங்கும் நிறைந்திருக்கையில்
இரசாயனப் பொருட்களால் பாதுகாக்கப்பட்ட
செயற்கை உணவுகளையும் பானங்களையும்
எதற்காக அனுமதித்தோம்?

வாழை இலையும், கடதாசியும் நிறைந்திருக்க
பிளாஸ்ரிக்கில் தஞ்சமடைந்தோம்.
யாருக்கும் எதைப் பற்றியும் அக்கறையில்லை
இலகு வாழ்வு என்ற போலி மயக்கத்தில்
இருந்த வளங்களையும், சுகங்களையும் இழந்தோம்.
பைகளை பணத்தால் நிரப்பும் தரகு வியாபாரிகள்
அரச இயந்திரத்தையும் கைக்குள் போட்டனர்.

சர்வதேசக் குப்பைக் கூடையாகிவிட்ட
இந்து சமுத்திர முத்திலிருந்து விடைபெற்று
இயற்கை அன்னை தூரப் போனாள்.
எமது மண்ணும், சூழலும் மாசுபட
மழையும், மாரியும் எட்டிப் போயின
மரங்களும், பயிர்களும் செழிப்புற மறுத்தன.

ஓடங்களுக்குப் பதிலாக ஒட்டகங்கள்
ஆற்றைக் கடக்கத் தேவைப்படலாம்
பெருகி ஓடும் வாகனங்களின் புகைகளினால்
எம் பிராணவாயு கற்பிழந்து போனது
எம் பிராணனும் காவுகொள்ளப்பட்டன
மெல்ல மெல்ல மௌனமாய் நாம் அறியாமலே...

ஓசோன் படலங்களில் ஓட்டை விழுவதைப் பற்றி
யாரும் கவலைப்படுவதாயில்லை!
உணவில் ஊற்றிவிட்ட இரசாயனப் பொருட்கள்
ஈரலைக் கருக்கி இதயத்தை மடக்கி, புற்றுநோய் பெருக்கி
மெல்ல மெல்ல மௌனமாய் கொல்கின்ற ா.

இப்போது புதிய அச்சுறுத்தலாய் குளோனிங்!
ஐயகோ! வேண்டாம். வேண்டவே வேண் ாம்.
எதுவும் இயற்கையாய் இருந்தால் தான
இனிக்கும் எம் வாழ்வு!

வாழையிலையில் சாப்பிட ஆசையாக இ ருக்கிறது.
மீண்டும் வருமோ அந்த நல்ல நாள்?

**M.சந்திரகாந்தா**

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

வீடு,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# இப்படிச் செய்யலாம்...

விருந்தினர்களோ, நண்பர்களோ வந்து விட்டால், அவர்களை உபசரிக்க குளிர்ந்த பானமோ, கோப்பியோ, தேநீரோ கொடுக்க வேண்டியிருக்கிறது. சீனி கிடைக்காத இந்தக் காலத்தில் பெண்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சினை. சீனி இல்லாமல் சில பானங்களைத் தயாரிக்க முடியும். அதைக் கற்றுக் கொள்ள வேண்டும். தேநீரில் பாலைச் சேர்க்காமல் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கொஞ்சம் ஐஸ் சேர்த்து விட்டால், அது ஒரு சுவையான பானமாகி விடும். பழரசங்களைச் சீனி சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்பதில்லை. அவைகளில் கொஞ்சம் உப்பும் மிளகாய்த்தூளும் கலந்துக் கொடுக்கலாம். இந்த இரண்டு பானங்களும் இயற்கையான சுவையைக் கொடுக்கின்றன.

* * *

நுளம்புகளை ஒழிக்க ஒரு வழி இருக்கிறது. மாம்பூக்களை சேகரித்துக் கொண்டு வந்து வெயிலில் காயவையுங்கள். அதை இரவில் நெருப்புத் தணலில் போட்டுப் படுக்கும் அறையில் வையுங் கள். நுளம்புகள் வரவே வராது.

* * *

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 1தொடக்கம் 4 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –01**
N.ஜெயறஞ்சினி,
பாலமுருகன் வீதி,
இலுப்பைக்கடவை,
மன்னார்.

**பரிசுத்திட்டம் –02**
வி.தவமலர்,
இல.59,
சாமியார் வீதி,
கொழும்புத் துறை,
யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் –03**
க.யசோதா,
மே/பா.Dr சி. பேரம்பலம்,
சில்வா வீதி,
வட்டக்கச்சி.

**பரிசுத்திட்டம் –04**
S.றமேஸ்வரி,
ரகுகடை, ஒலுமடு,
நெடுங்கேணி.

பரிசில்களை நாங்கள் அனுப்பிவைக்கும் கடிதத்துடன் பரிசு பெற்றவரை உறுதிப்படுத்தி எமது அலுவலகத்தில் வந்து பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.




## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர். நீங்கள் செய்ய வேண்டியது கீழ்காணும்கூப்பனை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பவேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது. உங்கள் கூப்பன்களை வெள்ளிநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

**குமரகுரு பரிசுத்திட்டம்–06**

பெயர்:.............................................

முகவரி:.............................................

.............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# இருளில் இருப்பவருக்கு வெளிச்சம் கொடுக்கவேண்டாமா?

பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனும் மனித மாண்புகளின் மகத்துவங்களைக் காக்க கை கொடுக்கவேண்டும். மனிதர்கள் யாவரும் உப்பாய் இருப்பது மேலானது என்று அறிஞர் பலர் கூறுகிறார்கள். நாட்டின் வளர்ச்சிக்கு சிறார்களின் வளர்ச்சி மிக முக்கியமானது. "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" இச் சிறுவர்களை நற்பிரஜையாக்குவது அல்லது பூரண மனிதனாக்குவது இன்றிருக்கும் பெரியோர்களே ஆவர்.

அண்மைக்காலமாக சிறு வயதிலேயே பாடசாலைக்கல்வியை இடைநிறுத்திய சிறுவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்க்கும் முகமாகத் தமிழீழத்தின் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்களின் விடா முயற்சியினாலும், பெற்றோர்களின் விழிப்புணர்வினாலும் இடைவிலகிய மாணவர்கள் பாடசாலை செல்வது யாவரும் அறிந்ததே.

பாதைகள் வகுத்தபின் பயணத்தைத் தொடர்ந்த மாணவர்கள் சந்தித்த துன்பங்களும், துயரங்களும் ஏராளம். ஒரே ஒரு சம்பவத்தை இந்த இடத்தில் தெரிவிக்கவேண்டும். யாழிலிருந்து இடம்பெயர்ந்து அம்பலப்பொருமாள் குளத்தில் குடியேறிய அக் குடும்பம் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. பிள்ளைகள் கூட கூலி வேலை செய்து பிழைப்பை நடத்திக்கொண்டிருந்தபோது இடைவிலகிய மாணவர்களில் அவர்களும் அடங்கினர். மீண்டும் அச்சிறுவர்கள் அக்கராயன் ம.வி.யில் சேர்க்கப்பட்டு கல்வியைத் தொடர்ந்துகொண்டிருந்தனர். வறுமை வாட்டியபோதும் கல்வியைத் தேடி நகர்ந்த மாணவர்கள் எதிர்கொண்ட முதற் பிரச்சினை போக்குவரத்து சிரமம், காலையில் 6மணிக்கு வீட்டைவிட்டுச் சென்றால் வழி நெடுகிலும் யானைப்பயம் வானளாவிய காடு நடையில் போவது சின்னஞ்சிறு உள்ளங்கள் எத்துணை பயம் கொள்ளும். போக்கு வரத்துக்காக அச்சிறுவர்கள் பஸ்சுக்குக் காத்திருந்து பயணிப்பார்கள். அன்றும் அப்படியே அச்சிறுவர்களின் பயணம் தொடர்ந்தது. பஸ் நடத்துநர் "தம்பியவை இனிமேல் சீசன் ரிக்கற் எடுக்காமல் ஏறேலாது" அச்சிறுவர்களின் முகம் வாடியது அருகிலிருந்த பெரியவர் ஒருவர் அச்சிறுவனிடம் வினாக்களைத் தொடுத்தார். அவன் கூறியது; அப்பாவுக்குக் கால் இல்லை, அம்மாதான் கூலி வேலைக்குப் போறவா நடந்து போவதற்கு யானைப்பயம் சைக்கிள் வாங்குவதற்கு வசதியில்லை. அதனால்தான் நாங்கள் பஸ்சில் வருகிறோம். சீசன்ரிக்கற் எடுக்கக் காசு இருந்தால் நாங்கள் இன்று



சாப்பிடாமல் வரமாட்டோம் என தன்கதை சொல்லி முடித்தான்.

இந்தநிலையில் யாரை யார். குறை சொல்வது. போரைத்தொடுத்து மக்களின் வாழ்விடங்களை அழித்து, அவர்களை அங்கவீனர்களாக்கிய அம்மையாரின் ஆட்சியையா? கல்வி கற்க விரும்பிய மாணவனையா? பஸ் நடத்துநரையா? பெற்றோர்களையா? ஒன்றுமே புரியவில்லை.

இந்நிலையை யார்? எப்போது? எப்படி உணர்வது உணர்த்துவது ஊரைவிட்டு வந்தவர்களுக்கு ஏக்கங்கள் ஏராளம். விதைக்க வேண்டி காலத்தில் விதைத்தால்தானே ஏற்ற காலத்தில் அறுவடைசெய்யலாம். சுகமாய் இருப்பவனுக்கு வைத்தியன் தேவையில்லை. வியாதியாய் இருப்பவனுக்கே வைத்தியன் தேவை இதை ஏன் உணர மறுக்கிறது எமது சமூகம் A-9 வீதிகளிலே பட்டுப் போர்த்திய செம்புகளுடன் நிதி சேகரிக்கின்றனா. பொருளாதார பின்னடைவு, ஏழ்மையில் வாழுகின்ற அல்லது போரால் பாதிக்கப்பட்டு அங்கங்கள் இழந்து அனாதைகள் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்காக எம்மண்ணில் ஏன் இன்னும் செம்புகள் எழவில்லை? அன்னசத்திரம் அமைப்பதிலும் பார்க்க ஏழைக்கு ஓர் எழுத்தறிவித்தல் மேன்மை என்பதை இவர்கள் புரியவில்லையா?

அவஸ்தையில் வாழ்கிறவர்களுக்கு ஆறுதலும், இருளில் இருப்பவர்களுக்கு வெளிச்சமும் கொடுக்க வேண்டாமா? எம் தேசம் நாசமடைவதை நினைத்து யார் மீது பழி போட முடியும்? நம்மை நாமே நொந்துகொண்டு வாழ்வை ஓட்டுவதா? அறிவுப்பசியைப் போக்க ஏங்கிநிற்கும் சிறார்களை ஒரு கணம் திரும்பிப்பாருங்கள், ஒரு கண்ணியமான கடமை என்பதை உணர்ந்து சுமைகளை சுகமாக்கி உங்கள் உதவு கரங்களை நீட்டுங்கள்.

**பா.றுஜினா**

---



# ஏ9-ஏரம்பு

வணக்கம் பிள்ளையள்! எப்படி எல்லோரும் இருக்கிறீயள்? உங்களுக்கு உள்ளுக்குள்ள யோசனையா இருக்கும். யாழ்ப்பாணம் போறதாய் சொன்ன மனுசன், என்னடா இன்னும் போய்ச்சேரவில்லையோ எண்டு. லைன் பஸ்ஸில போறதை விட வான் ஒண்டிலை போனால் கொஞ்சம் வசதியாய் இருக்கும். அங்கால வீட்டடியில கொண்டு போய் இறக்குவினம் எண்டு நினைச்சுப் போற வானிலை வெளிக்கிட்டன். அதிலையும் பாருங்கோ, எனக்கு உந்தப் புதினம் பார்க்கிறதெண்டால் நல்ல விருப்பம். அதாலை ட்ரைவர் சீற்றுக்குப் பக்கத்திலை உட்கார்ந்து கொண்டன். எங்கட சனத்தையும், வீதியின்ரகரையோர காட்சிகளையும் எண்டு இப்படி இயற்கையை ரசித்துக் கொண்டு பயணம் செய்யிறதில ஒரு அலாதியான இன்பம் பாருங்கோ!

கொஞ்ச நேரம் போயிருப்போம். ஆனா எனக்கு இருப்புக் கொள்ளேல்லை. ட்ரைவரின்ர வாகன ஓட்டம் சகிக்கேலாம இருந்திச்சு. "தம்பி! அப்பிடி ஒண்டும் அவசரமில்லை. கொஞ்சம் பார்த்துப் போம்!" "அப்புவுக்கு என்ன பயமாயிருக்கோ? பார்த்து நிதானமாய்ப் போறதுக்கு ஏதாவது வண்டில் மாட்டில ஏறியிருக்கலாம் தானே! 'ஹயஸ்' இல 160 மட்டும் ஜப்பான் காரன் வேகம் வைச்சிருக்கிறது என்ன வடிவு பார்க்கவே! வயசு போகப் போகத் தான் நைனியளுக்கு உயிரில பற்றுக் கூடுது. ஹி...ஹி.....!!" எண்டு பதில் வந்திச்சு. "தம்பி! உயிருக்கு பயந்தொண்டும் நான் அப்படிச் சொல்லேல்லை. உந்த ஓட்டம் ஓடி, தற்சமயம் ஏதாவது நடந்திட்டுது எண்டால்,ஏன் எங்களுக்குள்ள இப்படி வீண் இழப்புக்கள்! குண்டு வீச்சுக்கள் இல்லை எண்டாலும், ஒவ்வொரு நாளும் எங்கேயாவது ஒண்டை இழந்து கொண்டுதானே இருக்கிறம். கொஞ்சம் யோசிச்சுப்பாரும்! மற்றது ஜப்பான்காரன் தங்கட றோட்டுகளை நினைச்சுக் கொண்டுதான் 160கி.மீ/மணி. வைச்சிருக்கிறான். மற்றது யப்பானில வாகனம் ஓடுகின்ற ஆக்களின்ர மூளைக்கு முன்னாலை, எங்கடையலின்ர ஏணி வைச்சாலும் எட்டாது. பாரும்! விரலுக்கேற்ற வீக்கம் தான் வரோனும்." "பேந்தென்ன வேறவோல இல்லாமலே அரசாங்கம் புதுசா தார் போட்டிருக்கு? ஊர்ந்து போகோணும் எண்டால் வண்டில் மாட்டுக்குக் கிரவல் றோட்டே நல்லாக் காணும். அவங்கள் ஆரோ ஓடத் தெரியாம ஓடி அடிபட்டால், நானும் அப்படியே! எத்தினை வருஷமா ட்ரைவரா இருக்கிறன். இதுவரை ஒருக்கால் எண்டாலும் அடிபட்ட சம்பவம் நடந்திருக்கே? என்னோட திறமையில எனக்கு நம்பிக்கையிருக்கு!"

தம்பி கோவப்படாமல் கேளும்! இதெல்லாம் ஒழுங்கான றோட்டில்லை. உதவி வழங்கிற நாடுகளுக் குக்கணக்குக்காட்டிறதுக்காக அரசாங்கம் கொஞ்சம் மண் போட்டுத்தார் பூசியிருக்கு. உதிலை போகேக்கிள்ளை அவதானமா, குறைஞ்ச வேகத்திலைதான் போகவேணும். அதை விட்டுட்டு உம்மட திறமையைக் காட்டிறதுக்கு நடுறோட்டில சாகசம் செய்யக்கூடாது! விபத்து நடக்கிறவரைக்கும் எல்லா ட்ரைவர்மாரும் தாங்கள் பெரிய திறமைசாலியள் எண்டுதான் நினைச்சிருப்பினம். அடிபட்டாப்பிறகு அது பாவத்தை ரத்தவெள்ளத்தில தவிக்க விட்டிட்டு கழண்டிடுவினம். ஒண்டை நீர் விளங்கிக் கொள்ளோணும். கனகாலமா நீர் விபத்தொண்டையும் சந்திக்காததுக்குக் காரணம் உம்மட திறமை எண்டு நினைக்கிறீர். அப்படியில்லை! உம்மட ஓட்டத்தால மிரண்டு போய் ஓரத்தில ஒதுங்கிப்போகினம் எல்லோ அவையள் தான்! உப்பிடி ஆராவது நாளாந்த வியாபாரியள் முட்டை, போத்திலெண்டு ஏதாவது கொண்டு வந்து, இந்த ஓட்டத்தால நிலை குலைஞ்சு விழுந்திச்சினமெண்டால், வருமானம் இழந்து போய் நிக்கிற அந்தக் குடும்பங்களின்ரை நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப்பாரும்" மனசில பட்டதை நான் சொன்னன். நான் சொன்னதில நியாயம் இருந்ததாலயோ என்னவோ, ஒரு முறைப்புப்பார்வையால பதிலளிச்சுப்போட்டு அவன் திரும்பினான்.

எங்களில ஒரு அடிப்படையான பிரச்சினை இருக்குப்பாருங்கோ 'சாரதி அனுமதிப்பத்திரம்' எண்டால் வாகனத்தை எப்பிடி இயக்கிறது எண்டு காட்டிற தெண்டு தான் கனபேர் நினைக்கினம். ஆனால் பாதசாரியளுக்கு முக்கியத்துவம் குடுத்து, சக வாகனங்களுக்கு நெரிசல் ஏற்படுத்தாமல், முழுவீதிப்போக்குவரத்தும் சுமூகமாக இயங்கிறதுக்கு ஒத்துழைக்கிறவன் தான் ஒழுங்கான சாரதி. அதை விளங்கிக்கொள்ளாட்டி சவுதிச்சட்டம் தான் கொண்டு வரோணும். களவு எடுக்கிறவனுக்கு கை எடுக்கிற மாதிரி, வாகனத்திலை இறுக்கி அமத்திறவனுக்கு முழங்காலுக்குக்கீழ முறிக்க வேணும். இப்பிடியெல்லாம் மனசில நினைச்சிக் கொண்டிருந்தனான், றோட்டைப்பார்த்தன். "தம்பி! கொஞ்சத்தால வலப்பக்கத்தில துயிலும் இல்லம் வருகிது" சீற்றில நிமிர்ந்து இருந்து கொண்டு எங்களுக்காக எல்லாத்தையும் தாங்கி, உயிரையும் குடுத்த அந்த எங்கட குஞ்சுகள் படுத்திருக்கிற இடத்தைப் பார்க்கிறதுக்குத் தயார் ஆனன். '20 கி.மீ/மணிக்கு' என்ற அறிவிப்புப் பலகையும் வந்தது. வேகம் குறையவில்லை. "தம்பி! துயிலும் இல்லம் மீண்டும் ஞாபகப்படுத்தினன். என்ன? 80-90 இல போறனான். 20 குறைஞ்சு 60 இல போறன். காணாதே! முறைத்த பார்வையோட சூடாகப்பதில் வந்திச்சு.

"வாகனத்தை ஓரமா நிற்பாட்ட முடியுமோ? நான் இறங்கப்போறன். என்னால இதில, இப்படி வரேலாது.

வாகனம் நிறுத்தப்பட்டிச்சு. நான் இறங்கினன். எனக்குப் பக்கத்திலை என்னோட பாக் வந்து விழுந்திச்சு "எனக்கென்ன! ஆனால் காசொண்டும் திருப்பித்தரமாட்டன்" இன்னும் ஏதோதோ கனக்கச் சொன்னான் அவன். "டேய்! என்னைப் பொறுத்தவரையில நீயும் ஒரு உயிர்தான் உந்த வேகத்தில போய் அடிபட்டு நீ செத்தால், உன்னை நம்பியிருக்கிற உன்ர குடும்பத்துக்கு நான் கொடுக்கிற, என்னால முடிஞ்ச ஒரு உதவித்தொகையா அது இருக்கட்டும்! நீ வைச்சுக்கொள்! எனக்கு வேண்டாம்!" திரும்பிப்பார்த்தன், வானில இருந்து கனபேர் இறங்கியிருப்பது தெரிஞ்சிது ஏதோ பாவம் செய்ததை உணர்ந்தவையள் போல, ஒருத்தரையொருத்தர் அமைதியா பார்த்திச்சினம். கடந்து வந்த துயிலும் இல்லம் தூரத்தில தெரிஞ்சிது, ஓம்! கண்ணுக்கெட்டின நடைதூரம் தான். இறங்க விருப்பம் இல்லாத மனச்சாட்சி உறுத்தாத ஒரு சிலரோடை நாங்கள் வந்த வாகனம் தூரத்தில போய்க்கொண்டிருந்திச்சு.

பாக்கைத் தோளில போட்டுக்கொண்டு, துயிலும் இல்லத்தை நோக்கி நடக்கத் தொடங்கினன். சே! அந்தக்காலத்தில தன்னால போரில கொல்லப்பட்ட எதிரி மன்னனான எல்லாளனுக்கு ஞாபகச்சின்னத்தோட ஸ்தூபி ஒண்டை துட்டகைமுனு எண்ட சிங்கள மன்னன் ஸ்தாபிச்சவன். தன்னோட போரிட்டு மாண்ட மன்னனுக்கு, எல்லாருக்கும் மரியாதை செலுத்தித்தான் போவேணும் எண்டிற நடைமுறையைக் கடுமையாகக் கடைப்பிடிச்சான்.

எதிரி மன்னனோட வீரத்துக்கு மதிப்புக்கொடுக்கோணும் எண்டிறதில அவ்வளவுக்கு அவன் உறுதியா இருந்தான். நாங்கள் என்னடா எண்டால் எங்களுக்காகச்செத்த பிள்ளையளின்ர தியாகத்திற்கு மதிப்பளிக்கோணும் எண்டிறதைக்கூட விளங்கிக்கொள்ளேலாம நிக்கிறோம் சே! என்ன பிறவியள்!

இந்தச் சிந்தனையில தூரம் தெரியேல்லை. நிமிர்ந்து பார்த்தன் துயிலும் இல்ல நுழைவாயில் முன்னுக்குத் தெரிஞ்சிது. ஏதோ ஒரு பாவம் செய்து விட்ட குற்ற உணர்வோட உள்ளுக்குள்ள காலடி எடுத்து வைச்சன். தெரிஞ்சதும், தெரியாததுமெண்டு கன குஞ்சுகளின்ரை கல்லறையள் விழி நிறையக் கிடந்திச்சு. ஏதோ கத்தி அழவேணும் போல இருந்துச்சு. நடுப்பக்கத்தில போய் நிண்டு கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தன். அழவேணும் போல இருந்ததை அதுக்கு மேல அடக்க இயலாமப்போச்சு முன்னுக்கு இருந்த ஒரு கல்லறையை கண்ணில ஒற்றிக்கொண்டன். நெஞ்சு சாய ரெண்டு கையாலையும் அதைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு, என்னோட காதை விதை குழியோடை நல்லா அழுத்தினன். 'என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ! எங்கட விடுதலைக்காய் எத்தினையோ துன்பங்களையும் தாங்கிக்கொண்டு உயிரையும் தந்த உங்களின்ரை தியாகங்களைப்புரிஞ்சு கொண்டு மதிப்பளிக்கத் தெரியாத எல்லாரையும் மன்னிச்சுக்கொள்ளுங்கோ!!" எங்கட மாவீரச் செல்வங்களோட அண்டைக்கு முழுக்க இருந்தன். அது எனக்குப் பிடிச்சிருந்திச்சு; மனசுக்கு ஏதோ ஒண்டையும் தந்திச்சு.

எங்களுக்காக உயிரை விட்ட எங்கட பிள்ளையளின்ரை கல்லறையளைக்கூட காக்க முடியாமல் கோப்பாயில அவன் சிங்களவன் புல்டோசரால இடிச்சு உடைச்சு அழிக்கப் பார்த்துக் கொண்டிருந்த பாவியள் நாங்கள். ஒரு இராணுவச்சூழலில ஒண்டும் செய்யேலாத நிலைமையில அந்தப்பாவச்செயலை பார்த்துக் கொண்டிருந்தம் ஆனால் இப்பையிருக்கிற சூழலிலை வடிவாய் எல்லாம் செய்து வாறவேளையில.. இப்பிடிச் சே! எங்கட குஞ்சுகளுக்கு மரியாதை கொடுக்கத் தெரியாத இந்த வாகனத்தில என்னால இருக்கேலாது. என்னோட சேர்ந்து மனச்சாட்சி உறுத்தினால் நீங்களும் இறங்குங்கோ" எண்டு மேலும் கதைக்க முடியாமல் தொண்டை அடைக்கிற குரலிலை மற்றப் பிரயாணிகளுக்குச்சொன்னன்.

### ஒரே கத்தரிக்காய்....



எந்த நாளும் ஒரே கத்தரிக்காய் கறியெண்டா எப்பிடித்தின்னுறது.

ஆர் சொன்னது ஒரே கத்தரிக்காய் எண்டு. வேற வேற கத்தரிக்காய்தானே சமைச்சனான்.




## ஆசிச்செய்தி

**"மக்களின் மனம் நிறைந்த வங்கி மக்கள் வங்கி"**

இலங்கை முழுவதும் தனது மகத்தான பணியினை ஆற்றி 43ஆவது அகவையை நிறைவு செய்யும் மக்கள் வங்கியினை மனமார வாழ்த்துகின்றேன்.

கடந்த 01.07.2004இல் தனது 43வது பணியின் நிறைவு நாளை நிறைவு செய்தபோதும், முல்லைத்தீவில் இந்த நிறைவுநாளை கொண்டாடுவதில் பெருமை அடைகின்றேன். 1990ம் ஆண்டிற்குப் பிற்பாடு இந்த மண்ணில் மக்கள் வங்கியின் நிறைவுநாள் கொண்டாட வழிவகுத்த மாவீரர்களைப் போற்றுகின்றேன்.

மக்களின் தேவை அறிந்து சேவைசெய்யும் இந்த வங்கி மக்களுக்குப் பயன்தரக்கூடிய பல கணக்குகளை ஆரம்பித்து உலகிலேயே மக்களின் மனதில் வென்ற வங்கியாகத் திகழ்கின்றது.

பலசிரமங்களுக்கு மத்தியில் வன்னிப் பகுதியிலும் தனது பணியினை திறம்பட ஆற்றி வருகின்றது. மிக மகிழ்ச்சியான செய்தி என்ன வென்றால் எமது முல்லைத்தீவு கிளை மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்போரில் ஜயசிறி சீட்டிழுப்பு மூலம் 2003ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட ஏழு (7) வாடிக்கையாளர்களுக்கு எமது முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா - சுகுமார் தங்க நாணயம் 23.07.2004 இன்று பரிசளிக்கவுள்ளார். அனைவரும் அதிஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்படவேண்டும். மக்கள் வங்கியின் நிறைவான சேவையினைப் பெற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

திரு. செல்வேந்திரன்,
முகாமையாளர், மக்கள் வங்கி,
முல்லைத்தீவு.

எவ்வகையான படமென்றாலும் அழகான முறையில்
சட்டம் இட்டுக்கொள்ளவும் அலுமாரி வீடுகளுக்கான
மின்னல் சோக்கேஸ் அனைத்தையும் பிற்றிங்
செய்து கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம்
ஒளிர்ச் செல்வம்
படமாடம்
முதன்மைச்சாலை
முல்லைத்தீவு







பலசரக்குப் பொருட்கள், பத்திரிகைகள்
என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
அறிவு வைரவர்
பல்பொருள் வாணிபம்
முதன்மைச்சாலை
முல்லைத்தீவு






# முல்லைத்தீவில்

## 43வது வருட சேவையில் மக்கள் வங்கி

PEOPLE'S BANK

43 வது வருடகால சேவையினை இலங்கை முழுவதும் ஆற்றி மக்களின மனங்களில் நிறைந்துள்ள மக்கள் வங்கியின் சேவையினை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

---

## முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ-து

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமானது அதன் எல்லைப் பரப்பில் கீழ்வரும் சேவைகளைச் செய்து வருகின்றது.

- நுகர்ச்சி வியாபாரம்.
- உப்பு அரிசி ஆலை.
- கடலுணவு ஏற்றுமதி நடவடிக்கை.
- மின்னியற் பொருட்கள் உட்பட கடற்றொழில் உபகரண விற்பனை.
- எரிபொருள் விற்பனை.
- யமஹா வெளியிணைப்பு இயந்திரத்தின் விற்பனை முகவர். (முல்லைத்தீவு மாவட்டம்.)
- கடற்றொழில் வங்கிச் சேவை.

பிரதான வீதி,
முல்லைத்தீவு.

(சி-9156)

---

மக்கள் வங்கியின் பணி
தொடர வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்.

## செல்லையா பல்பொருள் வாணிபம்

உரிமையாளர்:-செல்வம்
முதன்மைச்சாலை,
முல்லைத்தீவு.

(சி-9153)

---

## கலையரசி நகை மாடம்

43 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
மக்கள் வங்கிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

குறித்த தவணையில் நகைகளை ஓடர் கொடுத்து
பெற்றுக் கொள்ளவும், றெடிமேற்றாக உடன்
பெற்றுக் கொள்ளவும்
உங்கள் நம்பிக்கை ஸ்தாபனம்



## கலையரசி நகை மாடம்

முதன்மைச் சாலை,
முல்லைத்தீவு.

முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு.

(சி-9155)

---

## இன்பழகி நகைமாடம்

43 ஆம் ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யும் மக்கள் வங்கியினையும் அதன் சேவையினையும் மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை,
கைதேர்ந்த தொழில்
வல்லுனர்களால் மனதைக்
கவர்ந்த டிசைன்களில்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,



## இன்பழகி நகைமாடம்

பிரதான வீதி,முல்லைத்தீவு.
பிரதான வீதி,முள்ளியவளை.

(சி-9157)

---

## கரைதுறைப்பற்று பலநோக்கு கூ.சங்கம்

நெல் கொள்வனவு
அரிசி ஆலை
வெதுப்பகம்
போட்டோப்பிரதி
கட்டட நிர்மாணவேலைகள்
கிராமிய வங்கி
நிவாரணநுகர்ச்சி

### அனைத்து சேவையினையும் ஆற்றுகின்றன.

கரைதுறைப்பற்று பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்,
முதன்மைச்சாலை,
முல்லைத்தீவு.

(சி-9158)

# காணி விலை மலிவு; அங்கே வரத் தயாரா?

போருக்குப் பின்னான புனரமைப்பு அல்லது மீள் கட்டுமானம், சமாதானகால அபிவிருத்தி எதிலும் கண்டுகொள்ளாமல் கைவிடப்பட்ட பல பகுதிகள் இன்னும் அழிந்தபடியே தான் கிடக்கின்றன.

நடக்கின்ற புனரமைப்புப் பணிகளும் நகரப்பகுதிகளை மட்டுமே மையமாகக்கொண்டிருப்பதால் போரில் அழிந்த பிறபகுதிகள், இராணுவப் பிடியிலிருந்த கிராமங்கள் எல்லாம் கவனிப்பாரின்றியே இருக்கின்றன.

நகரப்பகுதிகளில் காணி விலை மிகவும் உச்சத்திலிருக்கிறது. மீள்கட்டுமானப்பணிகள் நகரப்பகுதிகளில் நடப்பதால் பலரும் நகரத்தையே நோக்கி நகர்கிறார்கள்.

அலுவலகங்கள், நிறுவனங்கள், தொழிற்துறை நிலையங்கள் எல்லாம் நகரப்பகுதிகளில் குவிவதால் அதனோடிணைந்து சனங்கள் நகர்வதும் தவிர்க்கமுடியாததாகிறது. இது நகரப்பகுதிகளில் எல்லாவற்றிலும் நெருக்கடியை ஏற்படுத்தி விடுகிறது.

யாழ்ப்பாண நகர்ப்பகுதியிலும் புறநகர்ப்பகுதியிலும் வாடகைக்கு வீடு எடுக்கவே முடியாத நிலை இன்றுள்ளது. இதுதான் கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் திருகோணமலையிலும். ஆனால் இந்த மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் எந்த நெருக்கடியுமில்லை. அங்கும் வாடகைக்கு வீடு எடுக்க முடியாதுதான். ஏனென்றால் அழிக்கப்பட்ட வீடுகள், அலுவலகங்கள், கடைகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பிறநிறுவனங்கள் எதுவும் மீளக்கட்டப்படவில்லை. ஆனால், நகரப்பகுதிகளில் காணி விலை ஏறியிருப்பது போல அங்கே ஏறவில்லை. நகர்ப்பகுதிகளில் இட நெருக்கடியுள்ளது போல அங்கில்லை.

யாழ்ப்பாணத்தில் கொக்குவிலில், கோண்டாவிலில், நல்லூரில் மானிப்பாயில் உள்ளதுபோல சன நெருக்கடியும் காணிவிலையும் மாதகலில், இளவாலையில், தெல்லிப்பழையில், வல்வெட்டித்துறையில் இல்லை. பளையில், கிளிநொச்சியில் வவுனியா நகரப்பகுதிகளில் இருக்கிற கிராக்கிபோல மருதங் கேணியிலும் வெற்றிலைக்கேணியிலும் இயக்கச்சியிலும் தட்டுவன் கொட்டியிலும் அம்பகாமத்திலும் கரப்புக்குத்தியிலும் குளவிசுட்டானிலும் கொந்தக்காரன் குளத்திலும் இல்லை. இப்படிப் பலவுண்டு.

இங்கெல்லாம் 1990 க்கு முதல் ஓரளவுக்கு வசதிகளிருந்தன. தொழிற்துறைகள் இருந்தன. சனங்களிருந்தார்கள். எல்லாவற்றிலும் ஒரு இயங்கு நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது இந்தப் பகுதிகள் ஒதுக்குப்புறங்களாகி விட்டன. அல்லது எல்லாராலும் பாராமுகமாகி ஒதுக்கப்பட்ட பகுதிகளாக்கப்பட்டுவிட்டன.

## வெளிவாசல்பாலன்

சண்டைநடந்தபோது ஒலுமடு, அம்பகாமம், மன்னகுளம், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, விளக்குவைத்தகுளம், பன்குளம், திரியாய் போன்ற இடங்களெல்லாம் எல்லா ஊடகங்களின் கவனிப்பிலிருந்தன. எப்போதும் இல்லாத அளவுக்கு தலைப்புச் செய்திகளில் இந்த ஊர்கள் அடிபட்டன. இப்போது யாரும் இந்த ஊர்களைப் பற்றிக் கதைப்பதேயில்லை.

மீளக்குடியமருகின்ற குடும்பங்கள் இங்கேயெல்லாம் கடுமையான சிரமங்களையே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சில இடங்களில் சனங்களின் அவசர தேவைகளை மனதிற்கொண்டு சில உடனடி உதவிப்பணிகள் நடக்கின்றன. திலீபன் மருத்துவ சேவை, தமிழீழப்போக்குவரத்துக்கழகத்தின் பேருந்துப்பணி, தமிழீழ கல்விக்கழகத்தின் ஆதரவோடு இயங்குகின்ற கற்பித்தல் உதவிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடக்கின்ற முன்பள்ளிகள், தொழில் உதவிகள் தவிர வேறு எல்லாவற்றிலும் ஏமாற்றம்தான். இந்த உதவிகள் கூட வரையறுக்கப்பட்ட அளவுக்குள் தான் செய்யப்படுகிறன. இந்த உதவும் பிரிவுகள் அல்லது நிறுவனங்கள் தம் சக்திக்குட்பட்ட அளவில் கரிசனை காட்டுகின்றன.

ஆனால், அரசின் மீள் கட்டுமான உதவிகள் இங்கெல்லாம் போதிய அளவில் இல்லை. ஊர்களை அழித்த வேகத்தில் இருந்த அக்கறை அவற்றை மீளக்கட்டுவதில் இல்லை என்பதே கவனிக்கப்பட வேண்டிய பெரிய உண்மை.

விவசாயம் அல்லது மீன்பிடி தொழில்களும் அது சார்ந்த வளங்களும் வாழ்க்கையுமான இந்தப் புலங்கள் இன்று முற்றாகக் குலைக்கப்பட்டேயிருக்கின்றன.

எந்த அபிவிருத்தித் திட்டத்திலும் இவ்வாறான பகுதிகளுக்கு எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்கேட்டால் அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கவில்லை, தாங்கள் என்ன செய்வது என்று கேட்கிறார்கள்.

மீளக்குடியேறுவதற்கான உதவுதொகை அல்லது அழிவுக்கான பணம் அல்லது மீளக்கட்டுமான நிதி இப்படி எந்தப்பெயரிலோ செய்யப்படும்- வழங்கப்படும் உதவிகூட அந்தப் பகுதியில் குடியிருக்கத்தொடங்கிய பிறகே வழங்கப்படும் என்ற நிபந்தனை வேறிருக்கிறது.

இருபத்தையாயிரம் ரூபாவை ஒரு அகதி அல்லது ஊர்பெயர்ந்தவன் பெறுவதற்கு ஒன்றுமேயில்லாத ஏதிலி மீண்டும் அந்த ஊரில் வந்து குடியமர வேண்டும் என்று கேட்பது என்ன நீதி?

மீள்குடியேறலை ஊக்குவிப்பதற்கு இப்படியான ஒரு அணுகுமுறை தேவைப்படுகிறது என்று யாரும் இதற்குச் சொல்லலாம். ஆனால் ஏதிலிகள் முற்றாக அழிந்து போன தங்கள் ஊர்களில் எந்த உதவியுமில்லாமல் எப்படி வந்து மீளக்குடியமரமுடியுமென்று யாராவது சொல்லுங்கள்?

தொழிலை விட்டுப்போனவர், சொத்துக்களை விட்டுப்போனவர், வீட்டை விட்டுப் போனவர் எல்லாம் அகதி அந்தஸ்தில் அரைகுறை நிவாரணத்தில் வாழ்ந்தவர் எப்படி மீள்குடியேறியாக ஒரு வீடுகட்டி வாழமுடியும்?

முதலில் ஏதாவது ஒரு வழிமுறையினூடான பதிவோடு உதவுதொகையை வழங்கிய பிறகே மீள்குடியேறலை ஊக்கப்படுத்த வேண்டும். அப்போதுதான் மீள்குடியேறல் அர்த்த பூர்வமானதாக இருக்கும். நடைமுறைச் சாத்தியத்தைக் கூடுதலாகவும் தரும்.

தவிர, பத்துவருடங்களுக்கு மேலான அலைச்சலுக்கும் அகதி வாழ்வுக்கும் அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் இழந்துபோன காலத்துக்குமான கருணைக்காசுகூட ரூபா இருபத்தையாயிரம்தான். மிகுதிப் பணம் வரும் என்கிறார்கள். இல்லையென்றும் சொல்கிறார்கள். எது உண்மையோ யாரறிவார்?

இது ஒருபுறம். மறுபுறத்தில் மீள்குடியேறிகளின் பிள்ளைகள் படிக்க பாடசாலைகள் சீராக்கப்படவில்லை. தகுதி நிரம்பிய போதிய ஆசிரியர்களில்லை. மருந்தெடுக்க மருத்துவமனையில்லை. மருத்துவமனையிருந்தாலும் வைத்தியர் இருப்பதில்லை.

இப்படியெல்லாம் பின்னடைவுக்கான பெருஞ் சவால்களையெல்லாம் வைத்துக்கொண்டு தான் மீள்குடியேறிகளின் தின வாழ்க்கை நகர்கிறது.



ஒருபோது எல்லாவற்றையும் இழந்து வேறு ஊர்களில் அகதிகளானோருக்குப் பெருங்கருணையாக பிளாஸ்ரிக் கூரைகளும் பிளாஸ்ரிக் பாவனைப்பொருட்களும் தானமாக வழங்கப்பட்டன.

இப்போது கொட்டிலையோ குடிசையையோ போட்டு அதில் குடியிரு, பிறகு ஏதாவது தருகிறோம் என்கிறார்கள்.

வசதிகுறைந்த மக்கள் மட்டுமே இந்த நிபந்தனை வலையத்துள் வருகிறார்கள். அவர்களால் வேறிடங்களில் போட்டிபோட்டு காணி வாங்கமுடியாது. வீடுகட்டமுடியாது. எனவே, சொந்த ஊரில் நிரந்தமாக இருக்கிற காணித்துண்டில் கொட்டிலைப்போட்டுக் குடியிருக்க வருகிறார்கள். எல்லோருக்கும் இது வசதியாயிருக்கிறது- அவர்களை ஆட்டிப் படைப்பதற்கு.


## வரலாறு காணாத மலிவு விற்பனை

**கொழும்பு ஜெயா புக் சென்ரரின்** அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம்:- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

- சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)



பயிர்ச் செய்கைக்கு நீர்ப்பாசனம் எவ்வளவு முக்கியமானது என்பது நீங்கள் அறிந்ததே. எனவே பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப பொருத்தமான அளவில் நீர்ப்பாசனம் செய்து வருவது அவசியமாகும்.

அப்போதுதான் உச்சமான விளைச்சலைப் பெற்று உயரிய பொருண்மிய நலன்களை பெற்றுக்கொள்ள முடியும். நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் உச்ச விளைவை பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலை கூட ஏற்படும்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

பொதுவாகப் பயிர்களை எடுத்துக் கொண்டால் விதை முளைத்தல், விதை வெளிவருதல், நாற்றுப்பருவம், இளஞ்செடிப்பருவம், பூக்கும் பருவம், காய்கள் உண்டாகும் பருவம், முதிர்ச்சி அடையும் பருவம் ஆகியன முக்கிய பருவங்களாகின்றன.

விதை முளைத்து வெளிவரும் போதும், நாற்றுப் பருவத்தின் போதும் நீர் சரியான அளவில் பாய்ச்சப்படாவிட்டால் விதை முளைப்பு பாதிக்கப்படும் என விவசாய ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். விதை முளைப்புப் பாதிக்கப்படுவதால் பயிர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து இறுதியில் விளைச்சலில் வீழ்ச்சி ஏற்படும். எனவே பயிர் விதைத்தவுடனும் 5-7 நாட்களுக்குள்ளும் அவசியமாக நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டும்.

இளஞ் செடிப் பருவத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டால் விளைச்சலில் அதிக பாதிப்பு ஏற்படாது என்று கூறப்படுகின்றது. எனினும் கடும் வரட்சி ஏற்படின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

பூக்கும் பருவம்,காய்கள் உண்டாகும் பருவம் ஆகிய பருவ காலங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் விளைச்சல் மிகக் கடுமையாக பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காரணம் கதிர்கள்/ காய்கள் நன்கு வளர்ச்சியடைந்து வெளிவருவதற்கு நீர் மிகவும் அவசியமாகத் தேவைப்படும்.

இக் காலங்களில் வரட்சி ஏற்பட்டால் காய்கள் நலிவடைந்து சிறுத்து விடும். அவ்வாறே முதிர்ச்சி அடையும் பருவத்திலும் நீர் பற்றாக் குறை ஏற்பட்டால் அவற்றின் எடை குறைந்து உற்பத்தி வீழ்ச்சி ஏற்படும்

எனவே உரிய நேரங்களில் உகந்த நீரைப் பயிர்களுக்குப் பாய்ச்சி உச்ச விளைச்சலைப் பெறுவது அவசியமாகும்.

(சி-9609)

## மாடுகளுக்கு ஏற்படுகின்ற நோய்கள்

மாடுகளுக்கு நோய்கள் பல்வேறு நோய்க் காரணிகளால் ஏற்படுகின்றன. கால்நடைகள் நோய் வாய்ப்படுவதனால் கால்நடைகளின் பால் உற்பத்தி குறைவடையும் அங்க அவையங்களில் சக்தி குன்றும்.கால் நடைகள் சினைப்படும்-வீரியம் குறைவடையும், பலவீனம் அடைந்த இழுவை மாடுகளின் இழுவை வலு குறை வடைவதால் நஷ்டம் ஏற்படும் நோய்கள் முற்றிய நிலையில் கால் நடைகள் இறக்க நேரிடும்.

மாடுகளுக்கு ஏற்படுகின்ற முக்கிய நோய்கள்:-

**தொண்டை அடைப்பான்:-**

இந்நோய் மாடுகளிலும் எருமைகளிலும் ஏற்படும். வெகு விரைவாகப் பரவி மரணத்தை ஏற்படுத்தும் முக்கிய நோயாகும். இது பற்றீரியாவினால் ஏற்படுகிறது. இப் பற்றீரியா மழைக் காலங்களில் மாடுகளில் நோயை ஏற்படுத்தும்.

**அறிகுறி:-**

காய்ச்சல் கழுத்தின் கீழ்ப் புறமும் தாடையும் வீங்கும். வீக்கம் கால்பகுதிக்கு இறங்கும் மூக்கிலிருந்து சளி வடியும்,மூச்சு விடக் கஷ்டப்படும். மிக விரைவில் இறப்பு ஏற்படும். சில வேளை எவ்வித அறிகுறியையும் காட்டாமல் மாடு இறக்கும். நோய் ஏற்பட்ட பின் சிகிச்சை செய்து நோயைக் குணப்படுத்த முடியாது. தடுப்பூசி ஏற்றுதலே நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய சிறந்த முறை.

கன்று 4-6 மாதவயதடையும் போதும், பின் ஒவ்வொரு வருடத்திலும் மழைக் காலம் தொடங்குவதற்கு முன் தடுப்பூசி ஏற்றல் வேண்டும். கால்நடை வைத்திய அலுவலகத்தால் ஒவ்வொரு வருடமும் இலவசமாக ஏற்றப் படுகிறது.

**கால்வாய் நோய்:-**

மாடுகளில் வெகு சீக்கிர மாகப் பரவும் முக்கிய நோய். இந் நோய் சுகாதாரமற்ற பாவனை யால் பரவும். இந்நோய் ஒரு பண்ணையிலிருந்து மறுபண்ணைக்கும் ஒரு ஊரிலிருந்து வேறு ஊருக்கும். ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கும் இலகுவில் பரவும்:- இது வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது.

**அறிகுறி:-**

ஆரம்பத்தில் உதடு, நாக்கு, பாதம் குழம்புக்கிடையில் கொப்பளங்கள் ஏற்பட்டு பின் உரசுப்படுவதால் உடைந்து புண்ணாக மாறும். வாயிலிருந்து வீணிவடியும் காயங்களின் வேதனையால் உணவு உண்ண முடியாமல் இருக்கும்.நோயைக் கட்டுப்படுத்தச் சிறந்த வழி தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுதலாகும்.

**பால் காய்ச்சல்:-**

சினைப்பட்ட பசு கன்று ஈனுவதற்கு ஒரு கிழமைக்கு முன் அல்லது கன்று ஈன்று ஒரு கிழமைக்குள் ஏற்படும். 3ஆம், 4ஆம், கன்று ஈற்றின் போது இந் நோய் கூடுதலாக ஏற்படும் இரத்தத்தில் கல்சியத்தின் அளவு குறைவதனால் ஏற்படுகிறது.

**அறிகுறி:-**

நோய்வாய்ப்பட்ட பசு எழுந்திருக்க முடியாமல் படுத்திருக்கும். உடன் சிகிச்சை அளித்தால் நோயைக் குணப்படுத்த முடியும்.

**உண்ணிக் காய்ச்சல்:-**

உண்ணிகளால் பரவும் மூக்கியமான நோயாகும் கலப்புப் பசுக்களையும் உயர் இனப் பசுக்களையும் வெகுவாகப் பாதிக்கின்றது. புரோட்டோ சோவா எனும் ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது.

**அறிகுறி:-**

உடல் வெப்பநிலை உயரும் (காய்ச்சல்) சிறுநீர் சிவப்பாக வெளியேறும், உடன் சிகிச்சை அளிக்காவிட்டால் மரணம் சம்பவிக்கும், உண்ணியைக் கட்டுப் படுத்துதல் அவசியமாகும்.

**மடியதிர்ச்சி நோய்:-**

இந்நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அசுத்தமான சுற்றாடல் ஆகும். நோய்க் கிருமிகள் முலைக்காம்பின் ஊடாக மடியைச் சென்றடைகிறது. அங்கே மடியதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்நோயினால் பால் உற்பத்தி குறையும். சில வேளைகளில் நிரந்தரமாகவே பால் உற்பத்தி தடைப்படும். பால் கறப்பின் தொற்று நீக்கி ஒன்றினுள் காம்பைத் தோய்ப்பதன் மூலமோ அல்லது கன்றைப் பாலை உறிஞ்சிக் குடிக்க விடுவதனாலோ நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆகவே மேற் கூறிய நோய் அறிகுறிகள் உங்கள் மாடுகளுக்குக் காணப்படின் அருகில் உள்ள கால்நடை வைத்தியரை நாடவும்.

*நா.ம.சுகந்தினி,*
*கால்நடை வைத்தியர்,*
*முல்லைத்தீவு.*

(14 ஆம் பக்கத்தொடர்ச்சி)

“இஞ்சைபார் மச்சான். நான் வரேல்ல என்பதற்காக நீ போகாமல் நிக்காதே” எனக் கூறினான் கண்ணன்.

“உன்னை விட்டிட்டு எப்படி மச்சான் போறது”

“நான் பிறகு போவன் தானே” நீ முதல்ல போய் வாவன்” ஆறுதல் படித்தினான் கண்ணன்.

“எண்டாலும் உன்னை விட்டிட்டு என்னால போகேலாது மச்சான்” காரணம் கூறினான் சாந்தன்.

“ஏன்ரா போறதுக்கு என்னடா?”

“இஞ்ச பார் மச்சான். எங்களுக்குத் தெரிந்த நாளிலிருந்து இரண்டு பேரும் ஒண்டாத்தான் திரிஞ்சம். ஒண்டாத்தான் படிச்சம், ஒண்டாத்தான் வளர்ந்தம். பிறகு ஒண்டாத்தான் வெளிநாடு வந்தம். இஞ்ச வந்தும் ஒண்டாத்தான் வேலை செய்யிறம். ஒண்டாயிருக்கிறம். இவ்வளவு காலமும் எல்லா சுக துக்கங்களிலும் இரண்டு பேரும் ஒண்டாயிருந்திட்டு இப்ப மட்டும் எப்பிடி மச்சான் நான் தனியா ஊருக்குப் போறது” கண்கலங்கினான் சாந்தன்.

சாந்தனது பக்க நியாயம் கண்ணனுக்குப் புரிந்தது. அவனை மாதிரித் தானிருந்தாலும் அப்படித் தான சொல்வேன் என்பது அவனுக்கும் தெரியும். ஆனாலும் அவன் ஊருக்குப் போக வேண்டும். எப்படியாவது சாந்தனை ஊருக்கு அனுப்ப வேணும்.

“சாந்தன் உனக்காக இல்லாவிட்டாலும் எனக்காகவாவது நீ கட்டாயம் ஊருக்குப் போக வேண்டும்”

“என்ன சொல்லுறாய்” வினாவினான் சாந்தன்.

“சாந்தன் இஞ்ச வந்ததிலிருந்து ஊரைப் பார்க்கிறதுக்கு இரண்டு பேருமே எவ்வளவு ஆசையாக இருக்கிறம் எண்டு உனக்குத் தெரியும்தானே . இவ்வளவு காலத்துக்குப் பிறகு உனக்கிப்ப அந்தச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. எனக்கு எப்ப வருகுதோ தெரியாது. உன் வழியாகவாவது நான் ஊரைப் பார்க்க விரும்புகிறேன்.. அது தான் உன்னை ஊருக்குப் போய்வரச் சொல்லுகிறேன்” தனது நிலைப் பாட்டை எடுத்துக் கூறினான் கண்ணன்.

கண்ணனின் மனநிலை சாந்தனுக்குப் புரிந்ததால் மறுக்க முடியாமல் அரை மனதோடு, ஊருக்குப் போகச் சம்மதித்தான். போகும் போது தனது ஆசைகள், ஆதங்கங்கள் எல்லாவற்றையும் சாந்தனிடம் கூறியிருந்தான் கண்ணன்.

சாந்தன் போய் ஒரு கிழமைக்கு மேலாகி விட்டது. ஊருக்குப் போய்ச் சேர்ந்திருப்பான். மடையன் பிறகேன் இன்னும் தொடர்பெடுக்காமல் இருக்கிறான்? தனக்குத் தானே கூறிக் கொண்டான் கண்ணன்.

சிந்தனை வசப்பட்டிருந்தவனை வந்த தொலைபேசி அழைப்பு குழப்பியது. ஓடிச் சென்று ஆவலோடு தொலை பேசியை எடுத்தான் கண்ணன்.

“கலோ ஆர் கதைக்கிறது.”

“மச்சான் நான் சாந்தன் கதைக்கிறன்” மறு முனையில் பதில் வந்தது. “சாந்தனே சொல்லு மச்சான் எப்பிடி ஊரிருக்கு சுத்தித் திரிந்த இடங்கள் எல்லாம் பார்த்தனியே. எப்பிடியிருக்கு” ஆவலோடு கேட்டான் கண்ணன்.

“படிச்ச பள்ளிக் கூடம் மற்ற இடங்கள் எல்லாம் எப்பிடியிருக்கு” ஊர்ப் புதினங்கள் அறியும் ஆவலோடு கேட்டான் கண்ணன்.

மறுமுனையில் பதில் இல்லை.

“என்னடா நான் கேட்கிறன் நீ ஒண்டும் சொல்லாமல் நிற்கிறாய்” மெல்ல ஆத்திரப்பட்டான் கண்ணன்.

“அது வந்து மச்சான்...” இழுத்தான் சாந்தன்.

“என்னடா என்ன எண்டு சொல்லன்” அவசரப்பட்டான் கண்ணன்.

“நான் இன்னும் ஊருக்குப் போகவில்லையடா மச்சான்” கண்ணனது மன நிலை சரிவர தெரிந்ததால் நிலைமையை எப்படி அவனுக்குச் சொல்வது என்று தெரியாமல் மறு முனையில் சங்கடப்பட்டுக் கொனடான் சாந்தன்.

“மடையா இன்னும் ஊருக்குப் போகாமல் உங்க என்ன வேலை செய்து கொண்டு நிக்கிறாய்” பேசினான் கண்ணன்.

“ஆத்திரப்படாத மச்சான். எனக்கும் ஊரைப் போய்ப்பார்க்க விருப்பம்தான்” சொல்ல முடியாமல் சங்கடப்பட்டான் சாந்தன்.

“அப்ப ஏன் இன்னும் போகாமல் நிக்கிறாய்” ஆத்திரப் பட்டான் கண்ணன்.

“ அது.... அது.... எங்கட ஊருக்குப் போகேலாதாம்” சொல்லி முடித்தான் சாந்தன்.

“ஏன் போறதுக்கு என்ன பிரச்சினை”

“பிரச்சினை ஒண்டுமில்லை. எங்கட ஊர் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்காம். அது தான் போக முடியாதாம்”

நண்பன் வாயிலாவது தான் பிறந்து தவழ்ந்து வளர்ந்த மண்ணை காண நினைத்த கண்ணனது ஆசைகள், கனவுகள் எல்லாம் கணப் பொழுதில் தவிடுபொடியாகிப் போக அவனை அறியாமலேயே தொலைபேசி அவனது கையை விட்டு நழுவிக் கீழே விழுந்தது. ●

(15 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேலும் பல மைல் நடந்தே எமது இலக்கை அடைய வேண்டும். இப்படி இடர் நிறைந்த ஒரு பெரும் களப் பயணத்தில் என்னவென்று எமது பொருட்களைக் கொண்டு செல்வது என நாம் நினைத்துக் கொண்டிருந்த போது, மேஜர் பிரபலியன் அந்தச்சண்டைக்கென தான் விரும்பி பீ.கே பொதுப் பயன் பாட்டு இயந்திரத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். அதனுடன் தனது ரவை அளவை விடக்கூடுதலாக ஒரு பெட்டி ரவையையும் முழுதாகத் தனது இராணுவ உடமைப் பையில் இறுதி வரை கைவிடாது காவி வந்து இத்தாவில் கண்டி வீதி வரை வந்து சேர்ந்தான். சாதாரண இராணுவ நகர்வை விட தாயக விடுதலைப்போரின் இடுபணியிலும் முன்நகர்விலும் உடல் முழுவதிலும் விழுப்புண்ணுடன் ஒரு போராளி, கால்கைகள் செயலற்ற நிலையில் தனது சக்திக்கு மிஞ்சிய பாரத்தைத் தூக்கிச் செல்வதனால் அதன் கடுமை எப்படியிருக்கும் என உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒருவாறாகக் கடல் தரை சிறு நீரேரியின் சேறு பின் தரை என எல்லாம் கடந்து சென்று இத்தாவில் சண்டையும் தொடங்கிவிட்டது. காலை பளையில் இருந்து வந்த எதிரியை நோக்கி இடைவிடாது எமது கனரக இயந்திரம் சுட்டுத்தள்ளிக் கொண்டே இருந்தது. துளைந்து போங்கடா... என்று சொல்லிக் கொண்டே சுட்டுக்கொண்டும் கட்டளையைப்பிறப்பித்துக் கொண்டிருந்தான். இந்தச்சண்டையில் நான் எப்படியும் ஐம்பது பேரையாவது சுட்டுத் தள்ளவேண்டும் என்று சொல்லிச் சொல்லியே சண்டை செய்தான். அதன் படியே கூட்டம் கூட்டமாக வந்த எதிரியைச்சுட்டு வீழ்த்தினான். ஆனால் எவ்வளவு பேர் என்பது எதிரிக்கு மாத்திரமே தெரிந்திருக்கவேண்டும். சண்டை முடிந்ததும் பிரபலியன் சண்டை செய்த சுற்றிலும் எதிரியின் பிணங்களாகவே இருந்தது.

இப்படியாக அந்த விடுதலை வீரனின் களவாழ்வில் உடல் இயலாத போதும் உள்ளம் திடமான செயல்களைச் செய்து முடித்த வண்ணமே இருந்தான். இதன் தொடராக முகமாலையில் நாம் அமைத்த காவலரண் தொடரை எதிரி ஊடறுத்த போது, உடனே எதிரியைத் தடுத்து நிறுத்தி அவனுக்கு மரண அடி கொடுக்கவேண்டும் என்று நினைத்த பிரபலியன் உடனடியாகக் கிளாலி நீரேரி தொடக்கம் கண்டிவீதியைக் கடந்து கண்டல் வரை ஒரு காவலரண் தொடரை உடனே அமைத்துக் கொண்டு இருந்தான். தனது வேலையில் விட்டுக்கொடுக்காத மனநிலையைக் கொண்ட பிரபலியன், மதியம் ஆகுவதற்குள் எப்படியும் காவலரண் அமைத்து, எதிரியின் நகர்வைத் தடுக்கவேண்டும் என்று துடியாய் துடித்து, செயற்பட்டுக் கொண்டிருந்தான். அவனது செயல் வெற்றி பெற போராளிகளும் ஒத்துழைப்புத் தந்து வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது, எதிரியின் தடயத்தை பிரபலியன் கண்டுவிட்டான். உடனே அணிகளைத் தயார் படுத்தி எதிரியை சுற்றி வளைக்க முற்பட்ட போது எதிரி அந்தப்பொறியில் இருந்து தப்ப முயற்சி செய்தான். அதன் போது நடந்த சண்டையில் எதிரியினதும் பிரபலியனதும் துப்பாக்கிகள் சமநேரத்தில் ரவையை உமிழ்ந்தன. எதிரி ஒருவன் இறந்து விழ ஏனையவர்கள் காயமுடன் ஓடிவிட்டனர். பிரபலியனுக்கு எதிரியின் குண்டு மார்பிலும் வயிற்றிலும் பாய்ந்துவிட ஒரு கையில் எதிரியின் பக்கத்தைப் பார்த்துச் சுட்டவாறே சுட்டுவிரல் விசை வில்லை அழுத்திய வாறு... மண்ணில் சாய்கிறான். பூப் போட்டுப் போட்டே என் கை புண்ணாகி விட்டது என்று ஒரு கவிஞன் எழுதியது உண்மையோ எமக்குத்தெரியாது சுட்டுச்.....சுட்டே எங்கள் பிரபலியனின் சுட்டுவிரல் காய்ச்சு மரத்துப் போயும் மண்ணின் விடிவிற்காய் மறுமடி மறுபடி உயிர்விட்டது உண்மையே. ●



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**


**பகுதி -06**




**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

ஈஸ்ற்றிவர் வீதியில் இறங்கி நான் சென்றுகொண்டிருந்த போது எனக்குத் தெரிந்த வேறு பிள்ளைகள் பற்றி யோசித்தேன். மகிழ்ச்சியை அறியாத பிள்ளைகள்.... மகிமையோடு தாம் உரிமை கோரவென ஒரு சுயத்தை எட்டும் முயற்சியில் தோல்வி கண்டு விரக்தியடைந்தவர்கள்.... எவராலும் புரிந்து கொள்ளப்படாத ஆனால் தங்களைப் பொறுத்தவரை தனித்துவமான ஆட்களாக மாற மீண்டும் மீண்டும் முயற்சித்தவர்கள்... என்று பல பிள்ளைகள் என் மனதில் வந்து போனார்கள். உணர்வு வெளிப்பாடுகள், எண்ணங்கள், கனவுரு புனைவாற்றல்கள், கனவுகள் எதிர்பார்ப்புகளிலிருந்து, ஒவ்வொரு பிள்ளைக்குள்ளும் புதிய தொடுவானங்கள் வளர்கின்றன. தங்களுடைய பயங்கள், சஞ்சலங்களால் மேலாண்மை கொள்ளப்பட்டு, பல காரணங்களுக்காக சகித்துக் கொள்ள முடியாததாக ஆகிவிட்ட ஒரு உலகுக்கெதிராக தற்காப்புத் தாக்குதல்களை நடத்தும் சில பிள்ளைகளைப் பற்றி எனக்குத் தெரியும். அவர்கள் பலர், தங்கள் தங்கள் உலகங்களை அதிக ஆக்கபூர்வமாக எதிர் கொள்ளும் அளவுக்கு புதிய வலுவோடும் இயலுமையோடும் தங்கள் கூடுகளிலிருந்து வெளிவந்திருந்தார்கள். தங்களுடைய மோசமான தலைவிதிகள் ஏற்படுத்திய தாக்கங்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடியவர்களாக சிலர் இருந்தார்கள். இதற்கெனக் கூறக்கூடிய காரணங்கள் எதுவுமில்லை. இந்தப் பிள்ளை நிராகரிக்கப்பட்டது, ஏற்கப்படவில்லை என்று கூறுவதில், அந்தப் பிள்ளைக்கு உள்ளே இருக்கும் உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவுவது எதுவுமில்லை. அநேகமான சந்தர்ப்பங்களிலே எங்களது அறியாமை அல்லது சாக்குப் போக்குகளுக்கு சாட்சியாகப் பயன் படுத்தும் வசதியான லேபல்களாகவே இப்பதங்கள் இருக்கின்றன. சொற்பிரயோகங்கள், விரைவானவையும் ஆயத்தமாக இருக்கின்றவையுமான வியாக்கியானங்கள், விளக்கங்களை நாம் தவிர்க்கவேண்டும். நாங்கள் உண்மையை நெருங்கிச் செல்ல வேண்டுமெனில், எமது நடத்தைகளுக்கான காரணங்களை ஆழமாக ஆராய வேண்டும்.


நாளைக்கு பாடசாலைக்குப் போக வேண்டும் என்று நான் முடிவு செய்து கொண்டேன். டிப்ஸின் தாயோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு மிக விரைவிலேயே அவர்கள் வீட்டில் வைத்து அவரோடு ஆலோசனைகலக்க ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். அடுத்த வியாழனன்று, குழந்தைகள் வழிகாட்டு நிலையத்தில் உள்ள விளையாட்டு-வழி சிகிச்சை அறையில் வைத்து டிப்ஸ்சை ஆராயவேண்டும். இது எங்கே போய் முடியப்போகிறது? தன்னைச் சுற்றி அவன் திடமான முறையில் எழுப்பிக் கொண்டிருக்கும் சுவரை உடைத்துக் கொண்டு அவனால் வெளிவர முடியாமல் போனால்- அநேகமாக அப்படித்தான் நிகழும்- நான் வேறு ஏதாவது வழிமுறை பற்றி சிந்திக்க வேண்டியிருக்கும். சில சமயங்களிலே ஒரு குழந்தைக்கு நன்கு பயன்படுகின்ற ஒருமுறை இன்னொரு குழந்தைக்கு அறவே பயனில்லாமல் போகலாம். நாங்கள் இலகுவாக முயற்சியைக் கைவிடக் கூடாது. இன்னுமொரு முறை, இன்னுமொரு முறை என்று முயற்சி செய்யாமல், இது சரி வராது என்று கைவிடக்கூடாது. எதிர்பார்ப்புக்கு எந்த அடிப்படையும் இல்லாத போதும் எதிர் பார்ப்புக்களை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பது மிக மோசமானது என சிலர் நினைக்கிறார்கள். நாங்கள் புதுமை ஏதும் நிகழும் என்று எதிர்பார்ப்பதில்லை- நாங்கள் புரிந்து கொள்ளவே முயல்கிறோம். அந்தப் புரிதல், அந்த நபர் தனது இயலுமைகளை அதிக ஆக்க பூர்வமாக அபிவிருத்தி செய்து பயன் படுத்துவதற்கு உதவக்கூடிய அதிக பயன் விளைவான வழிகள் என்ற தளத்துக்கு எம்மை இட்டுச் செல்லும் எதிர்பார்ப்போடேயே முயல்கிறோம். இந்த விசாரணை தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதோடு எமது அறியாமை என்ற பாலை வனங்களிலிருந்து வெளியேறுவதற்கு ஒருவழியை கண்டு கொள்ளும் வரை நாமும தேடலை தொடர்வோம்.



அடுத்த நாள் காலையிலே பிள்ளைகள் வந்து சேர்வதற்கு முன்னதாக நான் பாடசாலைக்குப் போய் விட்டேன். சிறுவகுப்பு பிள்ளைகள் இருக்கும் அறைகள் பிரகாசமான வையாகவும் உற்சாகமூட்டுபவையாகவும் இருந்தன. பொருத்தமான, கவர்ச்சியான உபகரணங்களை அவை கொண்டிருந்தன.

"பிள்ளைகள் விரைவில் வந்து விடுவார்கள்" என்ற ஜேன்மிஸ், தொடர்ந்து "டிப்ஸ் தொடர்பான உங்கள் கருத்தை அறிய ஆவலாக இருக்கின்றேன். அவனுக்கு உதவ முடியும் என்று நான் நினைக்கிறேன். அவனைப் பற்றிய கவலை என் மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது. ஒரு பிள்ளை உண்மையிலேயே மன வளர்ச்சி குன்றியவனாக இருந்தால், அவனுடைய ஆர்வங்களிலும் செயற்பாடுகளிலும் ஒரே மாதிரியான நடத்தைக் கோலம் ஒன்று தெரியுமல்லவா? ஆனால் டிப்ஸ் அப்படியல்ல. அவன் என்ன மாதிரியான மனநிலையில் இருப்பான் என்று எங்களுக்கு ஒரு போதும் தெரியாமல் இருக்கும். எந்த வேளையிலும் அவன் முகத்தில் சிரிப்பு மட்டும் இருக்காது என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அவன் சிரித்ததை நாங்கள் எவருமே கண்டதில்லை. பெயருக்காவது சந்தோசமாக இருந்ததைக் கூட நாங்கள் கண்டதில்லை. (தொடரும்....)

## கலியாணம்



சிவரூபன் கலியாணம் முடிஞ்சுதாம். மேளதாள மொண்டுமில்லையே.

மாமி சொன்னவா, அதெல்லாம் 'கடைசியாப் பிடிக்கிறதுதானே இப்ப வேண்டாம் எண்டு.

---

**தொடர் - 28**



## (கென்யப் பயணக்கட்டுரை)

# காட்டு வெளியிடை

**சாந்தன்**



சட்டர்ஜி வந்த வானின் ஓட்டி அருகே வந்தார். "உங்கள் குழுவோடு வந்து சேர்ந்துகொள்ளுங்கள்."

"திரும்பத்தயாரா"?

"இன்னும் அரைமணி"

"அப்போ, அங்கே எதற்கு இப்போ? நான் எங்கள் ஆட்கள் இலங்கையிலிருந்து வந்தவர்களுடன் நிற்கின்றேன்...", சட்டர்ஜி என்னைக்காட்டி விட்டுச் சொன்னார்; "...நீங்கள் வந்து அந்த யாரோ ஆட்களுடன் நிற்கச் சொல்கிறீர்கள்! எதற்கு? புறப்படும்போது வந்து சேர்ந்து கொள்கிறேன்"

திடகாத்திரமான ஒரு கிழவர் வந்து கியாப்பேயிடம் ஏதோ கேட்டார். கியாப்பே எங்கள் பக்கம் திரும்பினான் 'மாட்டின்' கழுத்திலிருந்து இரத்தங் குடிக்கிறதை பார்க்கப்போகிறீர்களா".

"அதற்குத் தனியாக ஆளுக்கு முன்னூறு ஷில்லிங் கேட்பார்கள்", என்றார் என்னருகில் நின்ற அயூப், மெல்ல.

"அது என்ன, கழுத்தின் தொங்குதோலில் கூர்த்தடியால் நோகாமல் குத்தி உறிஞ்சுவார்கள், அவ்வளவுதானே?"

"சில சமயம் ஒரு பாத்திரத்திலும் ஏந்திப் பருகலாம். அவ்வளவே தான்"

"பிறகெதற்கு அவ்வளவு செலவழிக்க வேண்டும?"

நானும் செல்வாவும் யோசித்துவிட்டுச் சொன்னோம்,

"வேண்டாம்",

காசைக்கொஞ்சம் கவனமாகச் செலவழிக்க வேண்டியிருந்தது. சட்டர்ஜியின் குழுவும் வேண்டாமென்று சொல்லியிருக்கவேண்டும். எங்களுக்கு முதலே புறப்பட்டுவிட்டார்கள்.

அத்தனை ஜப்பானியர்களும் நடுவில் உட்காந்து கையசைத்தபடி போன அந்த வங்காளி, நேதாஜியை நினைவு படுத்தினார்.

"ஆப்ரிக்க யானையொன்றுதான் மீதி!.." விமுக்திசொன்னார், "....மற்றெல்லாம் பார்த்தாயிற்று."

"நீர்யானை?", நினைவு படுத்திய அயூப் தொடர்ந்து சொன்னார், "...அதை நாளைக்கு நய்வாஷா வாவியில் பார்ப்பீர்கள்."

"ஆபிரிக்கா யானைக்கு எங்கள் யானையைவிட காது மட்டும் தான் பெரிது. அது தானே வித்தியாசம்?"

"அளவும் பெரிது"

"சிறிய வித்தியாசங்கள்!", அயூப் சொன்னார், இப்போது எல்லா யானை களும் தன்ஸானிய எல்லைக்குள் போயி ருக்கும்"

"சிங்கத்திற்கும் காண்டா மிருகத்திற்கும் பயப்படாத இந்த மனிதருக்கு, யானை என்றால் ஏனோ பயம்போல?" சற்றுப் பொறுத்து சிங்களத்தில் சொன்னார் விமுக்தி.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அன்றைக்கு மலைவிடுதிக்குப் போன வழியிலும் லத்திக் குவியலைக் கண்டதும் போன வேகம்- நினைவிருக்கா?" சரி போலதான் பட்டது.

"ஏதாவது காரணம் இருக்கவேண்டும்", செல்வா ஆமோதித்தார்.

"அப்போ, நீங்களிருவரும் லேடியின் பாஷை கூட பேசுவீர்கள், இல்லையா?", அப்பாவியாய்க் கேட்டார் அயூப் பாவமாய் இருந்தது.

"பரவாயில்லை; இங்கேயே நின்று எங்காவது தெரிகிறதா என்று பார்க்கலாம்..." என்றோம்.

நாங்கள் இப்போது நின்று கொண்டிருந்த இடம் ஒரு குன்றின் சரிவு இடையில் தெரிந்த பள்ளத்தாக்கின் அப்பால் இருந்த இன்னொரு மலை விளிம்பைக் காட்டினார் அயூப். "தெரிகிறதா பாருங்கள?" ஒருவரிடமுமே தொலைநோக்கி இருக்கவில்லை. உற்றுப்பார்த்ததில், எறும்பு வரிசையாக ஏதோ நகர்வது தெரிந்தது.

"இந்தப் பக்கந்தான் வருகின்றன"

இருள் சூழப்போகிற நேரம் "பார்க்கக்கூடிய தொலைவில்வர எவ்வளவு நேரம் ஆகும்"?- செல்வா தனது மூவிக் கமராவை எடுத்துக் குறிபார்த்தார். அவ்வளவு தொலைவில் எடுப்பதாவது!

"யானையையும் படம் எடுத் தோம் என்று வேண்டுமானால் திருப்திப் பட்டுக்கொள்ளலாம்!"-நான் பண்ணிய கிண்டல் எவ்வளவு பிழையென்று ஊர் திரும்பிய பிறகே உணரமுடிந்தது! செல்வாவின் படத்தை வீடியோவில் போட்டுப்பார்த்தபோது அந்த எறும்புகளெல்லாம் விஸ்வரூபங் கொண்டு, காதுகள் விசிறக்கம்பீரமாய் நடைபயின்று கொண்டிருந்தன; வளைந்த வாழைத் தண்டாய் பெருந்தந்தங்கள்!.

ஆக, 'ஸூம்' அதிகம் பண்ணியதில் படம் கொஞ்சம் நடுங்கிக் கொண்டிருந்தது, அவ்வளவு தான்.

செல்வாவின் மூவி, சும்மா செல்லக் கூடாது, எதையெல்லாம் 'ஸ்ரில்'லில் இழந்து விட்டோமென்று கவலைப் பட்டோமோ, அவற்றை யெல்லாம் காண்டா மிருகத்தின் மேல் வந்து உட்கார்கிற சிட்டுக் குருவி, ஆளுயரப் புல்லில் மறைகிற சிங்கத்தின் வால் உட்பட- அற்புதமாய் பதிவு செய்திருந்தது.

(தொடரும்...)

# விவசாயிகளின் பிரச்சினைகளை ஆழமாக நோக்கவேண்டும்

வன்னி நிலம் பொருண்மிய மேம்பாட்டில் குறிப்பாக விவசாய செய்கைக்கு ஏற்புடைய ஒரு பெரு நிலப்பரப்பு என்பது அனைவரும் அறிந்த விடயம் மட்டுமல்ல ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமும் கூட.

விவசாயத்துறைக்கு ஏற்புடைய பல வழிவகைகள் வன்னி நிலத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை பலரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவை முழுமையான செயற்பாட்டு வடிவம் பெறுவதில் பல தாமதங்களும் தடைகளும் தொடர்ந்தும் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன.

வன்னியின் விவசாயத்துறையில் குறிப்பிட்டுச்சொல்லகூடிய சில ஏற்றுநீர்ப்பாசனத்திட்டங்கள் பல போரின் காரணமாகச் செயலற்றுப் போயின. குறிப்பாக விசுவமடு, ஸ்கந்தபுரம், திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களைக்குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் முழுமையாகச் செயற்பட்ட காலத்தில் விவசாய நடவடிக்கைகள் முழுமூச்சுடன் மேற்கொள்ளப்பட்டன.

உற்பத்திகளும் தென்னிலங்கைச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனூடாக விவசாயிகள் பலரும் நன்மையடைந்திருந்தார்கள்.

இது மட்டுமல்ல, இது போன்று ஏனைய சாதாரண நில விவசாயிகளும் செயற்பட்டார்கள். போரின் பின் விவசாய உற்பத்திகளிலும் நடவடிக்கைகளிலும் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருந்தது. போர்க்காலத்தில் இவ்வாறான பின்னடைவுகள் இயல்பானதுதான்.

ஆனால் சமகால சூழ்நிலை இவ்வாறான நடவடிக்கைகளுக்கும் விவசாய உற்பத்திகளுக்கும் மிகவும் ஏற்புடையதாகவே தென்படுகின்றது.

விவசாய அபிவிருத்திக்கென குறிப்பிட்ட திணைக்களமும் சில நிறுவனங்களும் செயற்படுகின்றனவே தவிர, விவசாய உற்பத்திகளிலும் விவசாயிகளிலும் ஒரு மேம்பாடான நிலையை காண்பது என்பது குறைவாகவே இருக்கின்றது.

காரணம் விவசாயிகளுக்கு ஏற்புடையதான நடவடிக்கைகள் இன்னும் முழுமை பெறவில்லை என்பதையே இது காட்டுகிறது.

தாராளமாக எரிபொருள் கிடைக்கின்றது. பாரிய ஏற்று நீர்ப்பாசன இயந்திரங்களை இயக்கமுடியும். இருந்தும் விவசாயிகளின் பக்கங்களில் இருந்து தொடர்நதும் குறைபாடுகளும் தாராளமாக வருகின்றது.

10 ஏக்கர் 15 ஏக்கர் என நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் பலர் தமது நிலங்களை குத்தகைக்கு விட்டு சாதாரண விவசாயிகளாக மாறியிருக்கின்றார்கள்.

ஆகவே, விவசாயிகளின் தரப்பில் உள்ள குறைபாடுகள் மன இறுக்கங்கள் களையப்படவேண்டும். இவற்றுக்கு பொருண்மியத்தை மேம்படுத்தும் நிறுவனங்கள் ஆழமாக கணிப்பீடு செய்வது அவசியமாகிறது. விவசாய உற்பத்தியிலிருந்து சந்தைப் படுத்துதல் வரை விவசாயிகள் தரப்பில் உள்ள ஒவ்வொரு அசைவுகளிலும் பல்வேறு இடர்பாடுகளும் குறைபாடுகளும் இருப்பதாக விவசாயிகள் தரப்பிலிருந்து தெரியவருகிறது. எனவே இது ஆழமாக நோக்கவேண்டிய அவசியம் உணரப்படவேண்டும்.

ஆரம்ப கட்ட விவசாய நடவடிக்கைக்கென சாத்தியமான திட்டங்கள் முதலில் நடைமுறைப்படுத்துதல் அவசியம். உதாரணமாக சூழலுக்கு பிரதேசத்திற்கு பொருத்தமான நல்லின பல்லின நாற்றுகள், விதை நெல் என்பன விவசாயிகள் தாராளமாகவும் நியாயவிலையிலும் இலகுவாகக் கொள்வனவு செய்யக்கூடிய கட்டமைப்பு ஒன்று அவசியம்.

இதனைவிட விவசாய உள்ளீடுகள் தற்போது நியாயவிலையில் பெற்றுக்கொள்வதற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. எனினும் விவசாயிகள் இதனை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய பிராந்திய விற்பனை மையங்கள் இல்லாததால் சில சிரமங்களை தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றனர். இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்ததாக பயிர் பாதுகாப்பு தொடர்பிலான ஆலோசனை வழங்கப்படுதல் வேண்டும். இது பிரதேச விவசாய போதானாசிரியர் களால் வழங்கப்படுகிறது. இது தொடர்பில் விவசாயிகளும் அடிப்படையில் அறிவைப்பெற்றிருக்கின்றமையால் இது தொடர்பான தாக்கம் குறைவு என்றே சொல்லலாம்.

வன்னி வேளாண் சேவையூடான செயற்பாடுகள் விவசாயிகளுக்கு சென்றடையும் வகையில் பிரதேச மட்டத்தில் இந்த நிறுவனத்தினுடைய சேவை விரிவுபடுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான கருவிகள் பிரதேச மட்ட நிலையங்களிலிருந்து நியாயவிலையில் கொள்வனவு செய்யக்கூடிய வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

குறிப்பாக விவசாயிகளுக்கு இலகு கடன் வசதிகள் தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களூடாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தக் கடன் வசதிகளும் கூட விவசாயிகளின் அடிமட்ட நிலைமைகளை ஆழமாக அறியாது நிறுவனங்கள் தங்களின் பரப்புரைக்காக வழங்கப்படுவதாகவே தெரிகின்றது. இதனூடாக சில விவசாயிகள் பயனடைந்திருப்பினும் கூட பெரும்பாலான விவசாயிகள் குறிப்பிட்ட கடனை மீளச்செலுத்த முடியாது திண்டாடுவதை சமகாலத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே இந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் விவசாயிகளுக்கு ஏற்புடையதான ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வருதல் மிக அவசியம். பெற்ற கடனை மீளச்செலுத்த முடியாத காரணத்தால் பலவிவசாயிகள் தமது விவசாய செயற்பாடுகளை மந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

எனவே விவசாய ஊக்குவிப்புக்கடன் வசதிகள் என்பது விவசாயிகளை ஊக்குவிக்க வழங்கப்படவேண்டுமே தவிர விவசாய நடவடிக்கைகளை முடக்குவதாக அமையக்கூடாது என்பதை கடன் வழங்கும் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



**தேவி**

---

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரின் தாக்குதல் முயற்சிகள் முறியடிக்கப் பட்டுள்ளன.

இத்தகைய அச்சுறுத்தல்களை தொடர்ந்தும் விடுக்கக்கூடிய புலனாய்வுச் சக்தியாக சிறிலங்காவின் இராணுவப் புலனாய்வு பிரிவு (DMI) இருந்து வருகின்றது. அதே சமயம் புலிகளின் புலனாய்வு முகவர்கள் சிறிலங்கா கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி இருப்பதனை இனங்காணுவதற்கும். மேலும் ஊடுருவலை தடுப்பதற்கான உச்சநிலையை எய்துவதற்கு DMI கைதேர்ந்த புலனாய்வு உத்திகளை கையாளுகின்றது. அந்த உத்திகளில் ஒன்றாக தமிழீழ விட்டோடிகளை தம் புலனாய்வுப் பணிகளில் ஈடுபடுத்தி பயன்மிக்க விளைவுகளையும் அப்பிரிவு பெற்றுக்கொள்கின்றது.

இந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைவிடவும் சிறிலங்காவின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளக பாதுகாப்பிற்கான புலனாய்வுப்பணிகளுக்காக கிளர்ச்சி முறியடிப்புப் பிரிவு (CSU) பொறுப்பாக உள்ளது. இப் பிரிவின் முயற்சி என்னவாக இருக்குமென்றால் புலிகளின் செயல்களை முறியடிப்பதாக இருக்கும். இப்பிரிவானது 1988 களில் உருவாக்கப்பட்டு JVP யின் கிளர்ச்சிப் போராட்டம் வீழ்ச்சியடைந்த பின்னர் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணித்து முறியடிப்பதற்கான பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டது.

இப்பிரிவின் புலனாய்வுச் செயற்பாடுகளை குறைத்து மதிப்பிட முடியாது. அது வெற்றிகரமான முறியடிப்பு புலனாய்வுப் பணிகளை மேற்கொண்டு மாவட்ட உள்ளகப் பாதுகாப்பைப் பேணிக் காத்து வருகின்றது. இருந்தபோதிலும் பிஸ்டல் குழுவின் ஊடுருவல், தாக்குதல்களை கட்டுப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றது.

அதாவது மன்னார் தீவில் CSU அதிகாரியான மன்சூர். மட்டக்களப்பில் CSU தஸநாயக்க வவுனியாவில் CSU அதிகாரியான திஸாநாயக்க. திருமலை நகரில் CSU சமூன் ஆகியோர் பிஸ்டல் குழுவின் தாக்குதல்களின்போது கொல்லப்பட்டதாகப்பத்திரிகை செய்திகள் தெரிவித்திருந்தன. இவ்வாறு பல CSU வினர் பிஸ்டல் குழுவினரால் கொல்லப்பட்டே உள்ளார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் அலசி ஆராய்ந்து பார்க்கும்போது சிறிலங்கா புலனாய்வு அமைப்பு வெறுமனே தகவல் சேகரிப்பில் மட்டும் ஈடுபடும் அமைப்பாக கருதிவிட முடியாது. அந்த அமைப்பானது நாசவேலைகள். தாக்குதல்களை மேற்கொள்ளும். அது மாத்திரம் அல்ல. அதிலும் மோசமாக அரசின் இலாபங்களுக்காக பதற்றமான ஒரு சூழ்நிலையை உண்டாக்கும் நோக்கினையுடைய ஓர் அமைப்பாகவும் இயங்குகின்றதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

சிறிலங்கா புலனாய்வு அமைப்பு இரகசிய புலனாய்வுச் சேகரிப்புத்திறனுள்ள. ஆற்றல் மிக்கதாக இயங்கத்தக்க வகையில் மேம்படுத்துவதற்கான ஆலோசனை ஒன்றை வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பு அரசுக்கு வழங்கியுள்ளது. இக் கூற்றை FRONT LINE -63 இல் றொகான் குணரட்ண குறிப்பிட்டுள்ளார். அதில் பின்வருமாறு உள்ளது. புலிகளின் நோக்கங்கள். திட்டங்கள். அந்த அமைப்பின் ஆழப்பரந்து செறிந்துள்ள மறைப்பு முகவர்கள் ஆகிய அனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டுமாயின் அரசுக்கு ஒரே வழி ஊடுருவல் செய்வதாகும் என்று கூறியுள்ளது.

இத்தகைய ஊடுருவல் தமிழர் தாயகத்தினுள். பொது நிர்வாகக் கட்டமைப்பினுள் நடைபெறவிடாமல் தடுப்பதற்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறிலங்காவின் புலனாய்வு அமைப்பினது அனைத்து அச்சுறுத்தல்களிலிருந்தும் தமிழ்த்தேசத்தை பாதுகாக்கும் உளவுப்பணிகளுக்கு உழைக்கக் கூடிய ஆற்றலும் மனோதிடமும் மிக்க ஆட்களுக்கு தமிழர்களிடம் தட்டுப்பாடு இருந்ததே இல்லை. ஆதலால் தமிழர்கள் ஒரு கூர்மையான அவதானியாக இருந்து தனது காதால் கேட்பதையும் கண்களால் காண்பதையும் வைத்துக்கொண்டே தகவல்களை சேகரித்து புலிகளின் புலனாய்வு அமைப்பிற்கு வழங்குவதன் மூலம் சிறிலங்கா புலனாய்வு அமைப்பினது அச்சுறுத்தல்களை முறியடிக்க முடியும்.

---


## விக்டோறியா ஈழத் தமிழ்ச் சங்கம் முத்தமிழ் விழா
## சிறுகதை, கவிதைப் போட்டிகள்

கடந்த ஆண்டு தன் வெள்ளிவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடிய விக்டோறியா ஈழத் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு தனது 12ஆவது முத்தமிழ் விழாவைக் கொண்டாட உள்ளது.

கண்டங்கள் கடந்தாலும் கருத்தாலும் எழுத்தாலும் உலகத் தமிழருடன் உறவு கொண்டாடும் தமிழ்ச் சங்கம், இவ்வாண்டும் சிறுகதை, கவிதைப் போட்டிகள் மூலம் தன் தொடர்பைப் பலப்படுத்துகின்றது. உலகளாவிய இப்போட்டியில் திக்கெங்கும் வாழும் தமிழர் பங்கு கொள்ளலாம். எத்தனை கதைகளையும் போட்டிக்கு அனுப்பலாம். ஆக்கங்கள் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரமே அச்சுப்பதிவு செய்யப்பட்டோ அல்லது தெளிவாக எழுதப்பட்டோ இருத்தல் வேண்டும்.தனித்தாளில் பெயரும் முகவரியும் இணைத்திடல் அவசியம்.

ஆக்கங்கள் எழுத்தாளரின் சொந்தப் படைப்பாக இருப்பதோடு, இதுவரை காலமும் பிரசுரிக்கப்படாததாகவும், போட்டிகளில் பங்கு பற்றாததாகவும் இருத்தல் வேண்டும். இப் போட்டிக்கு அனுப்பப்படும் கதை, கவிதைகளைப் பிரசுரிக்கும், காட்சிக்கிடும் உரிமை ஈழத் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு. தமிழ்ச்சங்க நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

**(அ) சிறுகதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.**

1. சிறுகதை 3000 சொற்களுக்கு மேற்படாமலும் 1000 சொற்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 200.
இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150.
மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100.

**(ஆ) கவிதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.**

1. கவிதைகள் பின்வரும் தலைப்புகளுக்குள் அமைய வேண்டும்.
2. ஒருவர் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதைக்கு மேல் அனுப்புதலாகாது.
3. தரப்பட்டுள்ள தலைப்புகளுக்குள் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதையாக ஒருவர் நான்கு கவிதைகள் வரை அனுப்பலாம்.
4. மரபுக் கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும், புதுக்கவிதைகள் 240 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

**(இ) கவிதைத் தலைப்புகள்.**

1. விழித்த விழிகள் இனித் தூங்காது.
2. விரிந்த கடலும் பிரிக்காத உறவுகளே.
3. தலை நிமிர்ந்த தமிழினமே.
4. தமிழ் மண்ணில் விளைந்த மாவீரமே.

**(ஈ) பரிசுகள்.**

1. முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150.
2. இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100.
3. மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 75.

முடிவுத் திகதி: 30. 8. 2004

இத்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உங்கள் ஆக்கங்களை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

TAMIL LITERARY COMPETITION 2004, ETA
30, DOUGHERTY COURT, MULGRAVE, VICTORIA 3170. AUSTRALIA

(சி.9831)

# நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்துவிட்ட

## ஓராம் ஆண்டு நினைவுகளில்...



மண்ணகம் 19 - 05 - 1940

விண்ணகம் 06 - 07 - 2003

திதி: 26-07-2004 திங்கட்கிழமை

அமரர்:- திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் மகேந்திரன் (கோபாலு,சாமியார்,பப்பா)

ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்.

*சிறு நுதலின் சுருக்கத்தில்*
*சிறு தலை அசைப்பில்*
*சிறு புன்னகையில்*
*நேரான விழிப் பார்வையில்*
*அமைதியின் வடிவில்*
*நிதானமாய்ப் பேசும்*
*சிறு வார்த்தைகளில் - ஓராயிரம்*
*அர்த்தங்கள் பொதிந்திருக்கும்*
*உங்கள் திருமுகம் காண*
*நித்தம் நித்தம் துடிக்கின்றோம்*
*ஓடிவந்து எமை அணைத்திடுவீர்*
*எங்கள் அன்புத் தெய்வமே*
*உங்கள் பாதையில் - நாம்*
*பயணம் செய்வோம்.*

எங்கள் அன்புத்தந்தையின் ஓராம் ஆண்டு நினைவு நிகழ்வு 26.07.2004 திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-நன்றி-

"மகேந்திரா இல்லம்"
இல.54,05ம் பண்ணை
கனகபுரம்,
கிளிநொச்சி.

அன்புடன்,
சாமியார் குடும்பத்தினர்

(4828)

## வெள்ளிநாத வாசகர்களிடமிருந்து படைப்புக்களை எதிர்பாக்கின்றோம்

*சிறுகதை, கவிதை, பிரதேச கட்டுரைகள், விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய நகைச்சுவை துணுக்குகள்*

என உங்களால் எமது வெள்ளிநாதத்தை அலங்கரிக்கும் வகையில் பல்வேறு ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம். மேலும்புலம்பெயர்வு உறவுகளே நீங்களும் உங்கள் படைப்புக் களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்களுக்கான எமது முகவரி: ஆசிரியர், வெள்ளிநாதம், ஈழநாதம்,யாழ். சாலை, கிளிநொச்சி, மின்னஞ்சல் : Weekly @eezhanatham. Com

## தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வழக்காளிகள்

வ.இல:~296/04,
தன்மை :~பணம்,
பெறுமதி:~4753882/=

1)திருமதி.தம்பிப்பிள்ளை புவனேஸ்வரி,
2)தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு,
வீ.ஆர்.ரி.கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

எதிர்

1)வேலுப்பிள்ளை தம்பிராசா
2)தம்பிராசா பூரணம்,
3)தம்பிராசா நவநீதராசா,
4)தம்பிராசா கேதீஸ்வரன்,
595,மைனா மில்,வண்டுரோட்டு,
ஸ்கந்தபுரம்,கிளிநொச்சி.
~எதிராளிகள்~

பகிரங்க அறிவித்தல்

குறித்த 2ஆம்,3ஆம்,4ஆம்எதிராளிகளுக்கு,

மேற்குறித்த வழக்கினை ,வழக்காளிகள் இந்நீதிமன்றில் உங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள்.உங்களுக்கான அழைப் புக்கட்டளையை முறை நிறைவேற்றுநர் மூலம் சேர்ப்பிக்க முயன்ற பொழுது,நீங்கள் அம் முகவரியில் இல்லாமையால் உங்களுக்குரிய அழைப்புக் கட்டளையை சேர்ப்பிக்கமுடியவில்லை,எனவே நீங்களோ அல்லது உங்களது நலனில் அக்கறை உடையவர்களோ, இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகிய அன்றிலிருந்து, 15நாட்களுக்குள் ஏதும் சட்ட படியான நடவடிக்கைகளை எடுக்காது விடும் இடத்து, இவ் அறிவித்தலை நீங்கள் ஏற்றதாகவே கொள்ளப்படுவீர்கள் என்றும்,உங்களுக்கு எதிராக ஒருமுகவிளக்கம் மேற்கொள்ளப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இதனால்,உங்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

இந்த 2004ஆம் ஆண்டு,ஆடி மாதம்,......திகதி,

வரைபு:~
வழக்காளி சட்டவாளர்,
தா.இ.குலசங்கர்,
டிப்போச்சந்தி,இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

பதிவாளர்
மன்றின் கட்டளைப்படி,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(சி.0018)


உயிரோடை
பதிப்பகம், ஓவியக் கலையகம்.
Uyirodai Printers & Arts.
யாழ்சாலை Prop - T.B. BAGAWATHJEEVA (KOKULAN) கிளிநொச்சி.

**துணிவகை பிறிண்டிங்**
பெனர் (சிறிய, பெரிய அளவில்)
ரீசேட்
ரைகள் (பாடசாலை உட்பட)
கொடிகள்
பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள்)
சிறிய, பெரிய கைப்பைகள்
வெல்பெற் இம்போசிங்

**அழைப்பிதழ்கள்**
- திருமண அழைப்பிதழ்கள்
- சாதாரண வகை
- இந்திய வடிவமைப்பிலானவை
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்தநாள் விழா
- தொட்டிலாட்டு விழா

**ஸ்ரிக்கர்கள்**
சாதாரண ஸ்ரிக்கர்
B.V.C ஸ்ரிக்கர்
கண்ணாடி ஸ்ரிக்கர்
டோமிங் ஸ்ரிக்கர்

**காகிதாதிகள் பிறிண்டிங்**
பில் புத்தகங்கள்
லேபிள்
நினைவு மலர்கள்
பிரசுரங்கள்
கடிதத்தலைப்புக்கள்
சிறிய, பெரியளவிலான சுவரொட்டிகள்
சான்றிதழ்கள்

**ஏனையவற்றில் பிறிண்டிங்**
அரிசிச்சாக்கு
பசளைப்பை
சிப்போட்
தகரம்

**றபர்ஸ்ராம்**
பொலிமர் வகை
2 மணி நேரத்தில்
உலகத் தரம் வாய்ந்த
பிறீ இங் இறப்பர் ஸ்ராம்
சாதாரண இறப்பர் ஸ்ராம்


வன்னி ஓவியக்கலையக ஓவியரின் ஒருங்கிணைப்புடன்
குலம் ஆட்ஸ்
உயிரோட்டமான நிழற்படங்கள் விளம்பர பெயர்ப்பலகைகள்
சாதாரண நிழற்படங்கள், பாடசாலை,
விளையாட்டுக் கழகங்களின்
இலச்சினைகள் வடிவமைத்து தயாரித்தல்
போன்றவற்றை கணினி வடிவமைப்பில், ஸ்கிறீன்பிறின்டிங், ஒப்செற் பிறின்டிங்
ஆகியவற்றில் சிறப்பாக ஒரே இடத்தில் அச்சிட்டு பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10028)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



**பாவலர் அவர்களே!**

**A9 வீதியில் அதிகரிக்கும் விபத்துகளுக்கு என்ன காரணம்? இதைத் தடுக்க வழியில்லையா?**

சி.தேனு.
அளவெட்டி.

'விதி' தான் காரணம்... விதி என்றதும் தலைவிதி தான் என்று நினைத்துவிடாதீர்கள்... போக்கு வரத்து விதியைத்தான் கூறுகிறேன். இந்த விதிமுறையை மீறுபவர்கள் தங்களது தலை விதியை மட்டுமல்ல, பிறருடைய தையுமல்லவா தீர்மானித்து விடுகிறார்கள். விதியை விபத்துக்கள் தீர்மானிக்கும் காலமிது.

**கருணாவின் B.B.C செவ்வி குறித்து என்ன நினைக்கிறீர்?**

ந.சொர்ணமலர்.
புதுக்குடியிருப்பு.

பாவம் டக்ளஸை 'புரோக்கரா'க வைத்து செவ்வி கொடுக்க வேண்டியநிலை அவருக்கு...

**உலகத்தின் "ஆயுதக் குப்பைக் கூடை" இலங்கையென சொல்கிறார்களே ஏன்?**

த.யசோ.
மாங்குளம்.

இது ஆயுதங்களை இலங்கைக்கு விற்பவர்களுக்கும் ஆயுத விற்பனை முகவர்களுக்கும், வாங்கும் அரசுக்கும் மட்டுமே தெரிந்த உண்மையாகும். உங்களுக்கு எப்படித் தெரிந்தது? சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்திய குப்பைகளும் அதற்கு ஆயுதக குப்பைகளை வழங்கிய குப்பைகளும், இலங்கையை ஆயுதக் கழிவுகளின் குப்பைக் கூடையாக்கியது நிஜமே.

**பாவலரே!**

**கடவுள் உங்கள் முன் தோன்றினால் யாது கேட்க விரும்புகிறீர்?**

ப.தயா.
யாழ்ப்பாணம்.

யாமார்க்கும் குடியல்லோம் என்று வாழும் சுதந்திர வாழ்வை...

**நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் 55% மக்களே வாக்களித்துள்ளார்களே ஏனையோருக்கு என்னவாயிற்று?**

த.தர்சா.
வவுனியா.

அவர்கள் வாக்களித்து... வாக்களித்து வாக்குறுதி மீறுவோரை தேர்ந்தெடுத்து வருந்தும் நெஞ்சங்கள் புள்ளடி இட்ட பிழையை புரிந்து கொண்டு சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

**இலங்கையில் பிக்குமார் ஞானம் பெற்றதாகக் கூறுகிறார்கள் இது எந்த மரத் தடியில்?**

சு.செல்வி.
ஸ்கந்தபுரம்.

முன்னர் அரசமரத்தடியில்... இப்போது அரசாங்க உறுப்பினர்களாகி அங்கு விழும் அடியில்... அரச மரத்தடியில் அவர்கள் அடைந்தது பரிநிர்வாணம்... அரசாங்கத்துள் அவர்கள் அடையப்போவது முழுநிர்வாணம்..

**அண்மைக்கால அமெரிக்காவின் செயற்பாடுகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள் பாவலரே?**

கரன்.
பாலையடி.

உலகமயமாக்கல் மூலம் உலகை அமெரிக்க மயமாக்க முயல்கிறார்கள்.

**கொள்ளுப்பிட்டி சம்பவத்திற்கு புலிகள் தான் காரணம் என்று டக்ளஸ் கூறுகின்றாரே?**

சிவா.
உருத்திரபுரம்.

சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியென்ன? டக்ளஸ் எதையும் சொல்வதில்லையே... உளறுவது தானே வழக்கம்.

**பாவலரே!**

**தாங்கள் நகைச்சுவையாளராம் நிருபிக்க முடியுமா?**

தீ.சுதா.
ஜெயந்திநகர்.

உங்களுக்கு நகைச் சுவையை ரசிக்கும் திறனிருந்தால்...! மாதிரிக்கு... ஒரு நகைச்சுவை எழுத்தாளரிடம் ஒரு பெண் சென்று என்னை உங்களால் புன்னகை செய்ய வைக்கமுடியுமா? என்றார் அதற்கு அவர், உங்களை புன்னகை செய்ய வைக்க பொன் நகையால் தான் முடியும்.... என்நகையால் அல்ல.... என்றாராம்.

**ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்த சந்திரிகாவின் நிலைமை எப்படியிருக்கிறது பாவலரே?**

அ.ரதி.
கிளிநொச்சி.

ஆப்பிழுத்த குரங்கின் நிலை.... அல்லது ஒட்டகத்திற்கு கூடாரத்தினுள் இடங்கொடுத்த கூடாரக்காரனின் நிலை...




**ஆசிரியர்:–** சரி பிள்ளையள் இண்டைக்கு நீங்களெல்லாரும் உங்கடை அப்பா, அம்மான்ரை பேருகளை ஒருக்காச் சொல்லுங்கோ அதுக்கு பிறகு படிப்பம் என்ன.
**பிள்ளையள்:–** ஓம் சேர்
**ஆசிரியர்:–** ம்...சரி முதலிலை அபிராமி சொல்லும்.
அபிராமி:-அப்பான்ரை பேர் நந்தகுமார்.
அம்மான்ரை பேர் சிவகுமாரி.
**ஆசிரியர்:–** அடுத்தது சுதர்சன் சொல்லு.
**சுதர்சன்:–** என்ன சேர்...?
**ஆசிரியர்:–** என்னடா தலையைச் சொறீராய்? என்ன மறந்து போனியே மக்கு.. மக்கு உனக்கு என்னதான் ஞாபகத்திலை இருக்கோ தெரியாது.
**சுதர்சன்:–** இருக்கு சேர்
**ஆசிரியர்:–** அப்ப சொல்லன்
**சுதர்சன்:–** அஜித்
ஷெரின்
விஜய்
சிம்ரன்

* * *

**சுந்தரம்:-** என்ன கந்தவனம் எப்படி மீன் மலிவே?
**கந்தவனம்:-** ஐயோ! அதையேன் கேட்பான் ஒரே நெருப்பாய்க் கிடக்கு.
**சுந்தரம்:-** அப்ப "ஐஸ்"சில போடாத மீன் போலை என்ன.

* * *

ஆசிரியர்:- ஆ...பிள்ளையள் எல்லாரும் ஒப்படை செய்து கொண்டு வந்தனியளோ?
**மாணவர்கள்:-** ஓம் சேர் கொண்டு வந்தனாங்கள்.
ஆரிரியர்:- ஆ... நல்லது ஒவ்வொருத்தராக் கொண்டு வாங்கோ.
**மாணவன்:-** இந்தாங்கோ சேர்.
ஆசிரியர்:- ம்..ம்... நல்லாயிருக்கு இப்ப டித்தான் இருக்கோணும், அச்சாப் பிள்ளை. சரி அடுத்த ஆள் வாரும்... என்னடா இது.
**மாணவன்:-** என்ன சேர்
**ஆசிரியர்:-** ஒப்படையை இப்பிடியே கொண்டு வாறது: எண்ணை ஊற்றிப் போய்க் கிடக்கு.
**மாணவன்:-** "ஒப்படை" செய்யாமல் நான் பள்ளிக்கூடம் போகமாட்டன் எண்டு சொல்ல அம்மாதான் வில்லண்டமாய் தந்து விட்டவா.
**ஆசிரியர்:-** அப்ப என்னடா உது?
**மாணவன்:-** "உழுந்து வடை" சேர்.

* * *

***ஒருவன்:–*** என்ன மச்சான், காதலெல்லாம் எப்பிடிப் போகுது?
***மற்றவன்:–*** அதையேன் கேக்கிறாய், ஒரே சிக்கலாய்க் கிடக்கடா.
***ஒருவன்:–*** ஏன் என்ன?
***மற்றவன்:–*** அவைக்கு விருப்பமில்லை மச்சான். சேத்து வைக்காயினம் கூட்டிக் கொண்டு தான் ஓடவேணும்.
***ஒருவன்:–*** ஓடப்போறியோ, கவனம் மச்சான் பாத்து ஓடு உவடம் முழுக்க மதிவெடிகள் கண்ணி வெடிகள் கிடக்கு.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–78



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்–78

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –77



**தமிழவன்,**
**கனகாம்பிகைக்குளம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*அழுகின்ற தம்பிக்கு அமுதூட்ட விழையும்*
*ஆருயிரே நீ ஆறுதல் கொள்*
*அழுவதும் தொழுவதும் இனியில்லை.*
*அண்ணன் காலத்தில் அதற்கு இனி இடமில்லை.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*அம்மாவைக் கேட்டு உணவே வேண்டாமென*
*பரிதவிக்கும் தம்பியை அன்போடு உணவளிக்கும்.*
*அண்ணாவே உங்கள் துயர் தீர்க்க கரிகாலன்*
*கருணையோடு அமைத்த செஞ்சோலை இருக்கிறது.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*வஞ்சகரின் வதையினால்-உம்*
*உறவுகளை இழந்தீரா?*
*தலைவனின் காலமிது*
*தயங்காதே ஈழம் வரும்.*

கெங்க.ர,
புதுக்குடியிருப்பு.

*சிங்களத்தின் இன வெறிபிடித்த யுத்தத்தால்*
*சீரழிந்து போகின்றது சிறார்களின் எதிர்காலம்.*
*தந்தையை தாயை இழந்து தவிக்கும்*
*பிஞ்சிற்கு அண்ணன் ஒருவரே கிடைத்துள்ளார்.*

தே.இ.யாழ்ச்செல்வன்,

*புலிகள் பலமிருக்கு ஊரில்*
*அண்ணன் துணையிருக்கு அருகில்*
*பயமின்றிப் புசித்திடு உணவிருக்கு*
*நீ பலத்தோடு வாழ்வதற்காய்.*

வேந்தன்,
கிளிநொச்சி.

*கொடுங்கோல் ஆட்சியினால்- தொப்புள்*
*கொடியிழந்தது எம்தேசம்*
*வாழ வழியின்றி வந்திருக்கும் பிஞ்சிவர்கள்*
*வாழ்வும் நாளை இனிதாகும். அண்ணன் காலமதில்.*

சௌ.குள்ளி
விசுவமடு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூலை மாதம் 23 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.